ஊர் சுத்துவனே தவிர ஒரு வியாபாரத்துல ஈடுபட
எனக்குத் தெரியவே இல்லை. அப்படி ஈடுபட்ட
போதெல்லாம் சுத்தி இருக்கறவங்க ஏமாத்தறாங்களே
தவிர, என்னை யாரும் எதுக்கும் எப்பவும் கை தூக்கி
விடலை. பொண்டாட்டி உட்பட என்னை முட்டாள்,
மடையன், ஒன்றுக்கும் லாயக்கில்லாதவன்னு பேச
றாங்க. எல்லாத்தையும்விட இன்னிக்கு அடிவாங்கி
நடுரோட்ல நாய்மாதிரி கிடக்கேன்யா."

அவன் மறுபடியும் முகம் பொத்திக் கொண்டு அழுதான்.

ராதாகிருஷ்ணனுக்கு அவன் நிலைமை புரிந்தது.

ஒரு குழந்தையின் தலையை வருடுவது போல சங்கரன் மிகுந்த கருணையோடு அந்த இளைஞனின் தலையை வருடிக் கொடுத்தார்.

18

சங்கரய்யர் அவன் தோளில் தட்டி நிமிர்த்தி உட்கார வைத்தார். அவனை உற்றுப் பார்த்தார்.

"உலகத்துல ஒரு மனுஷா நல்ல பெற்றோர் இல்லாமக்கூட இருந்துடலாம். நல்ல பொண்டாட்டி கிடைக்கலைன்னா ரொம்பக் கஷ்டம். நல்ல மனைவி கிடைக்கறதுக்கு ரொம்பக் கொடுத்து வைச்சுருக்கணும். தனக்குக் கிடைச்சது நல்ல மனைவின்னு புரிஞ்சுக்கற துக்கு இன்னும் அதிகமா கொடுத்து வைச்சுருக்கணும். அப்படிக் கிடைச்ச மனைவியைப் புரிஞ்சு அவளைக் கொண்டாடறதுக்கு ரொம்பக் குறைச்சலான ஆட் களால்தான் முடியும்.

"பொண்டாட்டியைக் கொண்டாடறதா? நோ, நோ, ஐயம் நாட் அ ஹென்பெக்" அப்படிம்பா. இங்கிலீஷ்ல ஹென்பெக்குன்னா தமிழ்ல பொண்டாட்டிதாசன்னு

அர்த்தம். நாம யாருக்கும் தாசனா இருக்கறதுக்கு ஆசைப்படலை. எல்லாருக்கும் எல்லா நேரமும் தலை வனா இருக்கணும்னுதான் ஆசை. ரூல் பண்ணணும்னு தான் வெறி. ஆனால் ரூல் பண்றதுக்கு உண்டான யோக்கியதை இருக்கா அப்படின்னு யாரும் ஆராய்ஞ்சு பார்த்ததில்லை. குறிப்பா பொண்டாட்டி விஷயத்துல, இவளை அடக்கி ஆளணும்னா அதுக்குண் டான யோக்கியதை இருக்கா, அப்படின்னு எந்தப் புருஷனும் நினைக்கல. ஏதோ ஒரு விளக்குமாறு ஆபீஸுக்குப் போய் இரண்டாயிரம், மூவாயிரம் சம்பா திச்சுட்டா, தான் பெரிய ஆம்பளைன்னு நினைக் கறான். அங்க வெட்டி முறிக்கறதா கற்பனை பண்றான். அங்க என்ன செருப்படி வாங்கறான் அப்படின்னு வெளியே சொல்றதேயில்லை. ஆனா வீட்டுக்கு வந்தா பொண்டாட்டிக்கிட்டே, "நான் யார் தெரியுமா? தொலைச்சுடுவேன். தொலைச்சு" அப்படின்னு விர லைக் காட்டி மிரட்டறான். பொண்டாட்டி, 'உன்னைத் தொலைக்கணும்னு' ஆரம்பிச்சா சொடுக்கு நேரம் போறும்.

நீ ஏன் ராதாகிருஷ்ணன்கிட்டே வன்முறைக்குப் போனே? ஏன் நாடார்கிட்ட வன்முறைக்குப் போகலை? நாடார் திருப்பி அடிப்பார். முழியை நோண்டிருவாருன்னு தெரியும். ராதாகிருஷ்ணன் பயந்தவர். 'ஒரு ஐயரு இப்படி ஆடறதா' அப்படின்னு ஒரு வீராவேசம். ஏன் இந்த வீராவேசம்? ஐயருக்கு அடிக்கத் தெரியாது. ராதாகிருஷ்ண ஐயர் கை ஓங்கினா கத்தியைக் காண்பிப்போம். கத்தியைக் காண்பிச்சா ராதாகிருஷ்ண ஐயர் பயப்படுவாரு, கை கூப்பி அழுவாரு. அப்படின்னு ஒரு நினைப்பு. இப்படித்தான் நாம பொண்டாட்டி பத்தியும் கை ஓங்கி அடிச்சா அவ என்ன பண்ணுவா? வாங்கிண்டு சும்மாதானே இருக்கணும்? எங்க வாங்கிண்டு சும்மா இருப்பாங்களோ அங்கதான் நாம கை ஓங்கி அடிப் போம். எங்க திருப்பி அடிப்பாங்களோன்னு ஒரு சின்ன

நினைப்பு இருக்கோ, அங்க மரியாதையா சமாதானம் பேச ஆரம்பிச்சுடுவோம். கீழ் வீட்டுக்காரர்கிட்டே சமாதானம். மேல் வீட்டுக்காரர்கிட்ட அடிதடி... ஹா... என்ன நியாயம்ப்பா இது. 'ஊரு மிரட்ட ஆரம்பிச்சா ஒரு நல்ல பொண்டாட்டி சீறி எழுந்து தொலைச்சுடு வேன் படவா' அப்படின்னு பொங்கற மாதிரி உன்னைச் சீற ஆரம்பிச்சா என்ன பண்ணுவ? ஆனால் ராதாகிருஷ்ணன் அடிக்கலை. கடவுள் அடிச்சுருக்காரு. ராதாகிருஷ்ணனைத் தொட்டா முட்டியைப் பேத்துடுவேன், அப்படின்னு கைக்கோலால் விரல்ல குத்தியிருக்காரு. இது யாரோ கூலியாளோட கட்டை, ரௌடியினுடைய தடி, உன்னை மாதிரி பல பேரைக் குத்தியிருக்கற தடி. பாவம் பண்ண மரம். தவில் வாசிக்கற குச்சிதான் நல்லபடியா தவில் வாசிக்கப் போகக் கூடாதோ? ஆளைக் குத்தறதுக்குக் காசு கொடுத்து வந்திருக்கான். ஒழிஞ்சு போறது அதை நெருப்புல போட்டுடறா.

ஆனால், உன்னை அடிச்சது ராதாகிருஷ்ணன் இல்லை. சந்தடி சாக்குல வேறு யாரோ புகுந்திருக்காங்க. உங்க சகோதரர்களாக இருக்கலாம்.வேற ஏதாவது உறவுக்காரங்களாக இருக்கலாம். யார்கிட்டயாவது பினினல் பண்றேன்னு காசு வாங்கிக் கொடுக்காம 'என்ன பண்ணப்போற?' அப்படின்னு கேட்டவங்களா இருக்கலாம். அப்படி யார் கிட்டயாவது கேட்டியோ" சங்கரன் கேட்க அவன் திடுக்கிட்டு விழித்தான்.

"யோசனை பண்ணிச் சொல்லு. ஒண்ணும் அவசரமில்லை. அம்மா, எல்லாருக்கும் காபி கொடு" என்று ருக்மணியைப் பார்த்துக் கேட்க, ருக்மணி வேகமாக உள்ளே போனாள்.

சங்கரய்யர் எந்தவிதச் சிந்தனையும் இல்லாமல் அவனையே பார்த்துக் கொண்டிருக்க, சங்கரய்யர் மனைவி வெறுமே விரல்களை மெல்ல தேய்த்துக்

கொண்டு உள்ளுக்குள் இடையறாது மந்திரஜெபம் செய்து கொண்டிருந்தாள். சிறு வயதிலேயே சங்கரய்யர் அவளை நல்ல திசைக்குத் திருப்பியிருப்பார் போல, மந்திரஜபம் சொல்லிக் கொடுத்திருப்பார் போல இப்பொழுது அவள் வெறுமே உட்கார்ந்து கொண்டிருப்பதே இல்லை. அரைக்கண் மூடிய நிலையில் இடையறாது மெல்லிய சிரிப்பை உதட்டில் ஏந்திக் கொண்டு முகம் முழுவதும் பிரகாசமாக ஏதோ மந்திரம் சொல்லிக் கொண்டிருந்தாள். ரேவதிக்கு அந்த மாமியை மறுபடியும் நமஸ்காரம் பண்ண வேண்டுமென்று தோன்றியது. மெல்ல ராதாகிருஷ்ணனின் புறங்கையைத் தொட்டு அங்கே பாருங்கள் என்று சங்கரன் மனைவியைக் காண்பித்தாள். சங்கரன் மனைவியை நோக்கி ராதாகிருஷ்ணன் கை கூப்பினார்.

சாதாரண மர நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருந்த பெண்மணிதான். ஆனால், அந்த மர நாற்காலியை சிம்மாசனம் போல பாவித்து அவள் உட்கார்ந்து கொண்டிருந்த விதம் ஓர் அரசி போலத் தோற்றமளித்தது. நாற்காலி சிம்மாசனம் போல் காட்சியளித்தது.

அவள் காதுகளில் வைரத்தோடுகள் மின்னின. மூக்குத்தியும் பளபளப்பாய் இருந்தது. கையில் நிறையத் தங்க வளையல்கள் இருந்தன. ஆனால், அவையெல்லாம் அவளுக்கு லட்சியமானதாகத் தோன்றவில்லை. துடைத்துத் துடைத்துத் தன்னைக் கண்ணாடியில் பார்த்துக் கொள்கிற பெண்ணாக இல்லாமல் அரைக் கண் மூடி தனக்குள்ளே தன்னைத் தேடுகிற பெண்மணியாக அந்த அம்மாள் உட்கார்ந்திருந்தாள்.

ரேவதியும் ராதாகிருஷ்ணனும் கவனிப்பதை சங்கரய்யர் பார்த்துவிட்டு மெல்ல மனைவி பக்கம் திரும்பினார்.

"மந்திரஜபம் நடக்கிறதாக்கும்" என்று பொதுவாகச் சொன்னார்.

ஆனால் அந்த விசாரிப்பு அவருடைய மனைவியை நோக்கித்தான் போயிற்று. அந்த விசாரிப்புப் போய் சில நொடிகள் கழித்தே அவள் கண் திறந்தாள். எதிரே உள்வர்களைச் சாதாரணமாகப் பார்த்தாள். பிறகு மெல்ல தலையை இடப் பக்கம் திருப்பி அவரைப் பார்த்தாள்.

"ஆமாம்" என்றாள்.இதற்கு அவள் வேண்டுமென்ற அவகாசம் எடுத்துக் கொண்டது போல் தோன்றியது.

ஒரு கேள்வி கேட்டால், பதில் சொல்ல உடனே பாயாது, அந்தக் கேள்வியை உள்வாங்கி பதில் சொல்வதுபோல் இருந்தது.

"என்ன?"

புருவம் உயர்த்தி சங்கரய்யர் கேட்டார்.

"வாராஹி"

"வாராஹியா. என்ன திடீர்னு இன்னிக்கு வாராஹி."

"சரி, உள்ளே நுழைஞ்சதெல்லாம் சண்டை சச்சரவா இருக்கே. ஒரே ரகளையா ஒருத்தரை ஒருத்தர் வெட்டு வேன், குத்துவேன்னு தடிமனான வார்த்தையா இருக்கே. யாரோ இந்தப் பிள்ளையை அடிச்சுட்டு வேற போயிருக்கான். அதனாலதான் என்னமோ வாராஹி சொல்லணும்னு தோணித்து. கார்த்தா லேர்ந்து வாராஹிதான் ஓடிண்டிருக்கு. இப்போ இன்னும் இழுத்துப் பிடிச்சு கூர்மையா சொல்லிண்டிருக்கேன்."

அவர் மனைவி சொல்ல, "ஆமாம். வாராஹி ஒரு நல்ல மந்திரம். எதிரிகளைத் தள்ளிப் போன்னு விரட்டறதுக்கு, அவர்கள் நம்மைத் தாக்காம இருக்கறதுக்கு வாராஹி ரொம்ப உசத்தியான மந்திரம்."

ருக்மணி காபி டம்ளருடன் நுழைய அவர் ருக்மணியைப் பார்த்து "ருக்மணி உனக்கு வாராஹி தெரியுமோ" என்று கேட்டார்.

"எனக்கு தெரியாது மாமா."

ருக்மணி சாதாரணமாக பதில் சொன்னாள்.

"முப்பத்தாறு அட்சரம், கொஞ்சம் பெரிய மந்திரம். ரொம்ப ஜாக்கிரதையா சொல்லணும். வாராஹி ஜபம் பண்றவனோட வாக்குவாதம் வச்சுக்காதேன்னு சொல்லுவா. மாமி வாராஹி சொல்றாளாம் ஜாக்கிரதையா இருந்துக்கோ" என்று சொன்னார்.

"என்னையோ இங்க இருக்கறவாளையோ மாமி ஒண்ணும் பண்ணமாட்டா."

"அப்புறம் என்னத்துக்கு வாராஹி சொல்றா?'

"யார் கெட்டவாளோ அவாள இலேசா மிரட்டறதுக்குத்தான் மாமி மந்திரம் சொல்லுவாளே தவிர யாரையும் அடிக்கறதுக்கோ, அழிக்கறதுக்கோ மாமி மந்திரம் சொல்லிப் பார்த்ததேயில்லை."

"இலேசா மிரட்டறதுன்னா என்ன."

"தான் பண்ணது தப்புன்னு அவனுக்கே தெரியணும்."

"அது எப்படித் தெரியும்? தப்புன்னு தெரிஞ்சா பண்ணாதயே இருக்க மாட்டானா. பண்ணிட்டு தப்புன்னு தெரிஞ்சா என்ன பிரயோஜனம்?"

"இல்லை. பண்றதைப் பண்ணிட்டான். ஆனா தப்புன்னு தெரிஞ்சுதுன்னா அவனா மன்னிப்புக் கேட்க வருவான்."

"நீ அப்படி நினைக்கிறியா ருக்மணி?"

ருக்மணியின் பதிலுக்குக் கேள்வி கேட்க, ருக்மணி நம்புகிறேன் என்ற தலையசைத்தே பதில் சொன்னாள்.

மாமி, ருக்மணியும் சங்கரனும் பேசுவதைக் கேட்டுக் கொண்டே இடையறாது மந்திரம் சொல்லிக் கொண்டிருந்தார்.

ராதாகிருஷ்ணனும் ரேவதியும் ஆவலாக கவனித்துக் கொண்டிருந்தார்கள். எதிரே உட்கார்ந்த இளைஞன் எதற்கு இந்தப் பேச்சு என்று புரியாது தனக்கு நிகழ்ந்தவற்றையே மறுபடியும் உள்ளுக்குள் அசை போட்டுக் கொண்டிருந்தான்.

"உங்களை யாரோ தப்பா புரிஞ்சுண்டு அடிப்பேன் வந்தாளே நீங்க வாராஹி தானே சொன்னேள். ஆறு ஏழு பேர் வந்தா அந்த ஏழு பேரும் உருப்படலையே."

"அடாடா... என்னது இது. கெட்ட பேர் வாங்கி கொடுத்துடுவ போலிருக்கே. யாரும் உருப்படக்கூடா துன்னு நான் மந்திரம் சொல்றவனா மாத்திடுவ போலிருக்கே?"

"இல்லை. இப்படி வந்து தேவையில்லாம கால் அகட்டி, விரல் உயர்த்திப் பேசறாளே இவாளுக்குப் புத்தி கொடுன்னுதான் வாராஹியைச் சொல்லிண்டிருக்கேள். அந்த ஏழுபேரும் இதே ஏரியாவுல இருக்கறவாதான். பெரிய பெரிய பிஸ்தாவாக இருந்தவாதான். இன்னிக்கு அந்த ஏழு பேருக்கும் விலாசமில்லை. காரணம் உங்களைப் பகைச்சுண்டது. இதை வாய்விட்டுச் சொல்லி அழுது ஒருத்தர் வந்திருக்கார். அதனாலத் தான் எல்லோருக்குமே இது தெரிஞ்சது.

ராகிருஷ்ணனும், ரேவதியும் கைகட்டி ருக்மணியையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"அவனவன் கர்மா அவன் அவனை வீழ்த்தறது. நாம என்ன பண்றது. இங்க தப்பா எங்கிட்ட வராதப்பா. என் எல்லையைத் தாண்டி உள்ளுக்குள்ளே நுழையாதேன்னு நான் மெலிசா ஒரு கயிறு கட்டி வச்சேன். அதுக்கப்புறம் அவா யாரும் வரலையே. அவா அழியணுங்கறது என் விருப்பமில்லை."

சங்கரன் மெல்லிய குரலில் சொல்ல, "ஆனா, அவா அழிஞ்சா' என்று ருக்மணி சங்கரனுக்கு பதில் சொன்னாள்.

எல்லோருக்கும் காபி கொடுக்கப்பட்டது. மறுபடியும் ஒரு மௌனம் நிலவியது.

சங்கரன் கர்ச்சீப்பால் காபி டம்ளரைத் தூக்கியபடி சூடாக உறிஞ்சிக் குடித்தார். அனுபவித்து ரசித்து உள்வாங்கினார். மெல்ல அந்த இளைஞனைப் பார்த்தார்.

"உனக்கு என்ன வேணும் சொல்லு."

இன்னொரு மடக்குக் காபி குடித்தார்.

"ராதாகிருஷ்ணய்யர் காலி பண்ணிட்டாருன்னா நல்லாயிருக்கும்."

"பண்ண மாட்டேன்னு எப்போ சொன்னாரு சொல்லு."

"இல்லை, முரட்டுத்தனமா பேசினாரு."

"வேறு எதுக்காகவாவது பேசியிருக்கலாம். வேற ஏதாவது எதிர்பார்த்திருக்கலாம். அல்லது பண்றதா வேண்டாமான்னு குழம்பியிருக்கலாம். ஒரு மனுஷனுக்குக் குழம்பறதுக்கு ரைட் உண்டு. குழம்பினதுதான் தெளியும். நீ உடனே காலி பண்ணணும்னு சரின்னு சொல்லி வேட்டி சட்டைய எவனும் அவுக்க மாட்டான். தனக்கு என்னென்ன சாதகபாதகம்னு யோசிக்க நேரம் இருக்க வேண்டாமா? வெறும் மிரட்டல் உபயோகப்படுமா. இப்படி இந்த விஷயத்தை அணுகியிருக்கக் கூடாது.

ஐயா, எனக்கு இருக்கறது இந்த ஒரேயொரு சொத்து, இந்தச் சொத்தை வித்து நான் வேற தொழில் பண்ணலாம்னு இருக்கேன். உடனே காலி பண்ண வேணாம்ப்பா. மெல்ல காலி பண்ணீங்கன்னா நல்லாயிருக்கும். ஆனா ஒருநாள் காலி பண்ணணும்யா, அதை ஞாபகம் வச்சுக்கோங்க. நான் இப்போதைக்கு

ஆறு மாசம் டைம் தரவா, அப்படின்னு கேளுங்க. இல்லை ஒரு வருடம் தரவா. அப்படியில்லைன்னா கூட ஒரு மாசம் டைம் எடுத்துக்கோங்க. ஏழு மாசத்துக்குள்ள காலி பண்ணிடுங்கய்யா. அம்மா ஐயாவுக்கு ஞாபகப்படுத்துங்கம்மான்னு சொல்லி ஒரு கிலோ ஸ்வீட் கொடுத்துட்டு வரணும். ஒருமாசம் பொறுத்து பண்டிகைன்னு வந்தேன். அப்படின்னு வேட்டி சட்டை கொடுத்துட்டு வரணும்; ரெண்டு மூணு மாசம் கழிச்சு மறுபடியும் போய் நல்லாயிருக்கீங்களா, சௌக்கியமா, வீடு கிடைச்சுதா அப்படின்னு பார்த்திருக்கணும். இதெல்லாம் பண்ணாத என்ன மிரட்டல்? மிரட்டி என்ன சாதிக்க முடியும்? நிஜமாவே தொந்திரவு பண்ணணும்னு ஆரம்பிச்சா நீ ஒண்ணுமே பண்ண முடியாது. நாடார் ரெடியா இருக்கறதுனால ராதாகிருஷ்ணனும் காலி பண்ற முடிவுக்கு வந்தாச்சு. அது உன் இடம். உனக்குக் கிடைக்கும். கவலைப் படாத."

"ரொம்ப சந்தோஷங்க" என்று சங்கரரை நோக்கி அந்த இளைஞன் கை கூப்பினான்.

சங்கரன் கண்களை மூடிக் கொண்டார். அடுத்து என்ன செய்யலாம் என்று யோசனை செய்ய ஆரம்பித்தார்.

19

"நாடாருக்கு என்ன பண்ற"

சங்கரய்யர் நிதானமாகக் கேட்டார்.

"அவர் பதிமூணு லட்ச ரூபாய்க்கு பகடி கேட்கறாருங்க. அத்தனைக்கு எங்க போவேன்."

"அப்போ எவ்ளோதான் கொடுக்கறதா இருக்கு."

"நான் அஞ்சு லட்ச ரூபா தந்துடறேன்."

"நாடார் போக மாட்டார்."

"எவ்ளோ தரலாம்னு சொல்றீங்க."

"பத்து கொடு."

"சரி."

"அப்போ ராதாகிருஷ்ணனுக்கு?"

"எதுக்குங்க ராதாகிருஷ்ணனுக்குக் கொடுக்கணும்?"

"நாடாருக்குப் பத்து லட்சம் கொடுக்கறியே?"

"அவர் காலி பண்றதுக்குக் கேட்கறாரே."

"ராதாகிருஷ்ணனையும் கேட்க வைக்குடுமா?"

"ஐயா, எனக்குச் சாதகமா பேச வேண்டிய நீங்க எதுக்கு ராதாகிருஷ்ணனுக்குச் சாதகமாக பேசறீங்க."

"அவர் இந்த வீட்டுப் படியேறி ஐயா அந்த வீட்டுக்காரப் பையன் என்னைக் காலி பண்ணுன்னு மிரட்டறான். ஆள் வச்சு அதட்டறான் அப்படின்னா நான் என்ன பண்ணணும் சொல்லு?"

அவன் மௌனமாக இருந்தான்.

"நாடாருக்குப் பத்து லட்சம்னா, இவருக்கும் நீ காசு கொடுத்துதான் ஆகணும். பகடிங்கறது வாங்கறவன் கொடுப்பான். அவன்கிட்ட ராதாகிருஷ்ணனுக்கு ஏழு லட்சம், நாடாருக்குப் பத்து லட்சம்னு சொல்லு. எவ்வளவு சீக்கிரம் கொடுக்கறியோ அவ்வளவு சீக்கிரம் காலியாகும். நான் காலி பண்ண வைக்கறேன். என்னிக்கு கொடுப்ப?"

"தெரியலைங்கய்யா."

"போய் பேசிட்டு வா."

"இவ்வளவு லட்ச ரூபா ஜாஸ்தின்னு எங்க வீட்ல அபிப்ராயப்படறாங்க."

"அப்படியா. உனக்கு வக்கீல் நோட்டீஸ் ராதாகிருஷ்ணன் அனுப்பினா என்னா பண்ணுவ? உன் மேல கிரிமினல் புகார் பண்ணா என்ன பண்ணுவ?

வீட்டுக்குள்ள புகுந்து பெண்களை மிரட்டி என்னையும் அவமானப்படுத்தினான்னு நாடாரை சாட்சி வச்சுண்டு சொன்னா என்ன செய்வே."

"கஷ்டம்தாங்க."

"முட்டாள்தனமா எதுவும் பண்ணிடாதே."

"அவங்க போலீஸுக்குப் போயிட்டாங்களாமே?"

"போகட்டும். நான் பேசி சமாதானப்படுத்திடறேன். நீ காசுக்கு ஒத்துக்கறயா. ஒத்துக்கலையான்னு சொல்லு."

"நான் கேட்டுட்டு வந்து சொல்றேங்க."

"யாரை?"

"என் பொண்டாட்டிய."

"ஏன் உன் பொண்டாட்டிய கேட்கணும்?"

"எல்லாம் அவதான் முடிவு பண்ணணுங்கறாய்யா."

"அப்போ அவளையும் வந்து பேசச் சொல்லு."

"அவ இங்க வர மாட்டேன்றா."

"ஏன்?"

"இந்த ஏரியாவே அவளுக்குப் பிடிக்கலையாம். பெசன்ட் நகர விட்டு வரதுக்கு இஷ்டமில்லையாம்."

"சரி. நான் வேணா அவங்க இடத்துக்கு வரட்டுமா?"

சாதாரணமாக சங்கரர் கேட்க அவன் பதறினான்.

"இல்லைங்கய்யா. வேணாம். நீங்க வர வேணாம்."

"உனக்கு இந்த வேலை முடிய வேண்டாமா. முடிஞ்சுதான் ஆகணும். ஏழு, பத்து இதான் ஃபைனல். நீ பேசினாலும் சரி உன் பொண்டாட்டி பேசினாலும் சரி, இதான் முடிவு. இந்த முடிவுக்கு நீங்க சம்மதிக்கலைன்னா இந்த விஷயத்தை எந்த வக்கீல்கிட்ட கொடுக்கறது, எப்படி மூவ் பண்றதுன்னு எனக்குத் தெரியும். எனக்கு என்ன தெரியும்னு உனக்குத் தெரியும். சங்கரன் இதுவரைக்கும் சாதாரண ஆளா

பேசிக்கிட்டிருந்தான். நீ முரண்டு பண்ணா வேறொரு ஆளா பேசுவான்.'

"நான் சின்ன வயசுலேர்ந்து உங்க பின்னாடி சுத்திண்டிருக்கேன்யா."

"ஆமாம். இல்லைன்னு சொல்லலை."

"இப்போ வந்த ராதாகிருஷ்ணனை நீங்க ஏன்யா பெருசா பேசறீங்க?"

"முட்டாளே, பதினேழு லட்ச ரூபா எங்கேயாவது கடன் வாங்கி உடனே ரெண்டு பேருக்கும் கொடுத்து ஒரு மாசத்துல எந்தவித வில்லங்கமும் இல்லாத ஒரு பில்டிங் அப்படின்னு எடுத்துக்க. ஒரு விளம்பரம் பண்ணு. புரோக்கர்கிட்ட சொல்லு. பலபேர் வந்து ஒருத்தர் மேல ஒருத்தர் மேல நிறைய காசு சொல்லி இந்த விஷயத்தை வாங்கறதுக்கு ஆவலா பறக்கறான் பார். அவனுக்கு வித்துடலாம். இந்த வருஷம் விட்டுட்டுன்னா அடுத்த வருஷம் ஜனங்களாண்ட காசு இருக்காது."

"என்னங்கய்யா சொல்றீங்க?"

"அப்போ உலகத்துல சண்டை சச்சரவு ஜாஸ்தி ஆயிடும்டா. அடிதடி, ரகளை ஆயிடும். உலகத்துல அடிதடி ரகளை ஆச்சுன்னா வியாபாரம் ஸ்தம்பிக்கும். வியாபாரம் ஸ்தம்பிச்சா காசு புரளாது. இப்பொழுதே வித்துடு."

"எப்படிங்கய்யா அடுத்த வருஷம் இந்த உலகத்துல சண்டை வரும்னு சொல்றீங்க?"

"செவ்வாய் ஆட்சி. அது மட்டுமில்லை; உள்ளுக்குள்ள ஒரு பட்சியும் சொல்றது. சண்டை வரும்னு சொல்றது."

அங்கே கனத்த ஒரு மௌனம் நிலவியது.

"அப்போ நான் கிளம்பட்டுங்களாய்யா?"

"கிளம்பு."

அவனுக்கு இரண்டு கொத்து திராட்சைப் பழம் எடுத்து கையில் கொடுத்தார். ருக்மணியைப் பார்த்தார். ருக்மணி ஒரு பிளாஸ்டிக் கவரை எடுத்து அவனிடம் நீட்டினாள். அதில் வாங்கிப் போட்டுக் கொண்டான்,

அவரை விழுந்து வணங்கினான். வேகமாக நடந்து போனான்.

அவன் இருக்கும்போதும் பார்க்கவில்லை. போகும் போதும் பார்க்கவில்லை. ராதாகிருஷ்ணனும் ரேவதியும் அந்த ஹாலின் ஒரு மூலையில்தான் நின்று கொண்டிருந்தார்கள். ஆனாலும், அவன் ஏறெடுத்தும் பார்க்காது போனது ஆச்சரியமாக இருந்தது.

பார்த்தானா, பார்க்கவில்லையா என்கிற கேள்வி வந்தது.

"அதுவொரு கண்கட்டு வித்தை. எதிரே இருக்கிற பொருளைப் பார்க்காத பண்ணிடலாம். மனசை வேற பக்கம் திருப்பி வச்சுடலாம். கண்ணா பார்க்கறது? கண் பார்க்கறதுக்குண்டான கருவி. மனசுதான் பார்க்கும். மனசுக்கு வேற விஷயத்தைக் கொடுத்துட்டா அது அலைஞ்சுகிட்டிருக்குமே தவிர எதைப் பார்க்கணுமோ அதைப் பார்க்காது. பார்க்கணும்னு தோணாது. பார்த்தாலும் பதியாது."

சங்கரன் சொல்லிவிட்டு வாய்விட்டுச் சிரித்தார்.

சங்கரன் மனைவியும் சிரிக்க அங்கொரு மௌனம் மறுபடியும் ஏற்பட்டது.

"நீங்க ரெண்டுபேரும் போயிட்டு இன்னொரு சமயம் வாங்கோ."

சங்கரன் ராதாகிருஷ்ணனையும் ரேவதியையும் நோக்கிக் கைகூப்பினார்.

"நீங்க மந்திர ஜபம் சொல்லித் தரேன்னு சொன்னேளே."

ராதாகிருஷ்ணன் சட்டென்று நினைவு வந்தவராய் சங்கரனை நோக்கிக் கேட்க, சங்கரன் கண்மூடி சிறிது நேரம் அமர்ந்திருந்தார்.

"அப்படியா? கத்துக்கணும்னு தோண்றதா?"

"ஆமாம்."

"போய் வாங்கோ, பார்ப்போம்."

"எப்போ?"

"இப்போ சொல்ல முடியலை. மறுபடியும் நாம சந்திக்க நேரும். அப்போ எப்போ சொல்லித் தரேன்ற தச் சொல்றேன்."

"வீடு பத்தி நாங்க ஏதாவது முயற்சி எடுக்கணுமா? அங்க போய் அந்தப் பையன்கிட்ட பேசணுமா?"

"வேண்டாம். அவன் வருவான்."

அவன் மறுபடியும் வந்தான். இந்த முறை மனைவியோடும், மனைவியின் உறவினர்களோடும் வந்தான்.

அவன் மனைவி தன் ஒவ்வொரு அசைவிலும் பணக்காரத்தனத்தை வெளிப்படுத்தினாள். பேச்சில், சிரிப்பில் மிதப்பு காட்டினாள். பணக்காரர்களாக இருப்பதைத் தவிர, பணத்தைச் செலவழிப்பது தவிர தனக்கு எதுவும் தெரியாது என்பது போல் பேசினாள்.

"பழைய பில்டிங் உயரமா கட்டியிருக்காங்க. நியாயத்துக்கு இது மூணாவது ஃப்ளோர் என்று சொல்லி இதோ ஹால், இங்க கிச்சன், இங்க ஒரு ரூம், இங்க ஒரு ரூம் என்று புதிதாக உரக்க ப்ளான் போட்டாள். இருக்கின்ற வீட்டை மனதிற்குள் இடித்து விட்டு இன்னொரு வீடு கட்டுகிற அவளுடைய அவசரத்தை எண்ணி ரேவதி சிரித்தாள்.

அவன் மனைவியும் மற்ற உறவுகளும் வேறு பக்கம் போக தனியே நின்று கொண்டிருந்தவனைப் பார்த்து, "இப்போ உடம்பு தேவலாமா?" என்று ரேவதி அன்பொழுகக் கேட்டாள்.

அவன் திகைத்துப் போய் ரேவதியைப் பார்த்தான்.

"நாங்க அடிச்சதா சொன்னேளாமே? நாங்க அடிக்கலையே, நாங்க எதுக்கு உங்களைப் போய் அடிக்கப் போறோம்?" என்று சொல்ல, அவன் தலைகுனிந்து கொண்டான்.

"யார் அடிச்சா? எதுக்கு அடிச்சா?"

"அடிச்சது எங்க சகோதரங்க. நான் கொஞ்சம் வேகமா அவங்ககிட்ட பேசிட்டேன். அது தாங்காத இப்படி செய்துட்டாங்க. நீங்க அடிக்கலைன்னு அன்னிக்கு ராத்திரியே தெரிஞ்சு போச்சு. நான் சங்கரய்யா கிட்ட சொல்லிட்டேன். சங்கரய்யா உங்ககிட்ட போய் மன்னிப்பு கேட்கணும்னு சொன்னாரு. வீடு பார்க்கப் போறேன்னு சொன்னபோது இவங்களும் வரேன்னு சொன்னதுனால இவங்களைக் கூட்டிட்டு வரும் படியா ஆயிடுச்சு. அவங்க முன்னாடி மன்னிப்பு கேட்டா ஏன் என்னான்னுவாங்க."

"நீங்க ஒண்ணும் சொல்லலையா, இங்க வந்து போனது."

ரேவதி சாதாரணமாகக் கேட்டாள்.

அவன் வேறு திக்கில் பார்த்தான்.

"சொல்லலைங்க."

"ஏன்?"

"அவங்களுக்கு இன்னும் கேலியாயிடும்.'

"ஏன் மனைவியைப் பார்த்து பயப்படறீங்க?"

"பெரிய ஆளுங்க. அவங்கப்பா அரசியல்வாதி. நான் அவரு பொண்ணோட சண்டை போடறேன்னு தெரிஞ்சதுன்னா விதம் விதமா தண்டிப்பாரு. எங்க அண்ணனை எனக்கு எதிரா தூண்டி விட்டிருக்காரு. அவன்கிட்ட காசு வாங்கி இவர் ஆளை அடிக்கறதுக்கு அனுப்பியிருக்காரு. ஒரு மாதிரியான குடும்பங்க. நான் போய்க் காலி பண்ணி வைக்கறேன்னுதான் கிளம்பி

னாரு. நான்தான் வேணாம்னு தடுத்துட்டேன். ரொம்ப மோசமான ஆளுங்க. மோசம்னா சொல்ல முடியாத அளவுக்கு மோசம்."

"சங்கரய்யரைக் கெட்டியா பிடிச்சுக்கோங்க. எல்லாம் சரியாயிடும்."

"உங்க ஐயாவை நான் தப்பா நினைச்சுட்டேன். தயவு செய்து ராதாகிருஷ்ணன் ஸார்கிட்ட சொல்லிடுங்க. நாங்க சங்கரய்யர் கிட்ட போய் நீங்கதான் அடிச்சதா சொல்லிட்டோம். சங்கரய்யர் இல்லவே இல்லைன்னாரு. ராதாகிருஷ்ணன் இந்த வேலை செய்யவே மாட்டாரு. முட்டாள்தனமா பேசாதன்னு சொன்னாரு. அவரு சொன்னது சரியாப் போச்சு.,"

"நாங்க கேட்டுண்டுதான் இருந்தோம்."

"எதை"

'நீ எங்க மேல குத்தம் சொன்னதை."

"எப்போ,"

"சங்கரய்யர் வீட்டுக்கு ஒருநாள் சாயந்தரம் வந்தபோது."

"நீங்க எங்க இருந்தீங்க? உள்ளயா,"

"இல்லை. உங்களுக்கு நேர்பின்னாடி சுவரோரமா நின்னுட்டிருந்தோம்."

"நான் பார்க்கலையே."

"பார்வைக்குத் தெரியாது. பார்வைக்குத் தெரியாத பண்ணிட முடியும் அப்படின்னு சங்கரய்யர் சொன்னாரு."

"நிஜமாவா?"

"நிஜமாத்தான்."

"ரெண்டு பேரும் நின்னுக்கிட்டிருந்தீங்களா?"

"ரெண்டு பேரும் நின்னுண்டிருந்தோம்."

"அப்போ என் நீங்க வந்து சப்தம் போடலை."

"கூடாதுன்னு சொல்லிட்டாரு."

"என்ன கூடாது."

"உங்களோட எந்த சத்தமும் போடக் கூடாது. எந்தச் சண்டையும் போடக் கூடாது. போய் நின்னு வேடிக்கை பாருங்கனுட்டாரு. அவர் நிக்கவச்சதுக்குக் காரணமே பின்னாடிதான் தெரிஞ்சது. நீங்க வரீங்கன்னு தெரிஞ்சு போச்சு போலிருக்கு. எங்களை அங்க நில்லுங்க அப்படின்னு சொல்லிட்டுக் காத்துண்டிருந்தார். தடுக்குனு ஓடி வந்தீங்க. உங்களைப் பத்தி பேச ஆரம்பிச்சார். உங்க தலைய வருடி விட்டார்."

"பார்த்தீங்களா?"

"எல்லாம் பார்த்தோம்."

"கடவுளே... ரொம்ப முட்டாள்தனமா பேசிட்டேன்."

"இல்லை. எங்களுக்கு வேற கவலை ஆயிடுத்து."

"என்ன கவலை?"

"ஒருவேளை அடிச்சவன் வேகமாக அடிச்சு, நீங்க ஆஸ்பத்திரிக்குப் போய் அரைநினைப்புல என்னை அடிச்சது ராதாகிருஷ்ணன்னு சொல்லியிருந்தா, நிச்சயமா போலீஸ் வந்து வாரிப் போட்டுண்டு போயிருப்பா. அக்கம் பக்கம் விசாரிச்சா ஆமாம் அவங்களுக்குள்ள சண்டை இருக்கு. அப்படின்னு ஜனங்க சொல்லும். வெளிய வரமுடியாதபடி உள்ளுக்குள்ள போட்டிருக்கலாம்."

"சே... ச்சே... அப்படியெல்லாம் ஆகியிருக்காது."

அந்த இளைஞன் வேகமாகச் சொன்னான்.

"ஆகியிருக்கலாம். அப்படின்னுதான் சொல்றேன். எதுவுமே ஆகாம எதுவோ தடுத்து நிறுத்திடுத்து."

"ஆமாம். எனக்குப் புரியுது. அடிச்சவங்க எதனாலேயோ சிதறி ஓடிட்டாங்க. யார் வந்ததுன்னே தெரியலை. கொன்னுடுவாங்கன்னுதான் நினைச்சேன். உயிர் பயத்தோடதான் போராடினேன்."

"இன்னும் வலிக்கறதா?"

ரேவதி மறுபடியும் பாசம் பொங்கக் கேட்க, அவன் முகம் துடைத்துக் கொண்டான்.

"ஆமாம் மாமி, ராத்திரி தூக்கமேயில்லை. நல்லா வலிக்குது.'

"தவிடு ஒத்தடம் கொடுத்தா சரியாப் போயிடும்..."

"ச்சு... சரி தவிட்டுக்கெல்லாம் எங்க போறது?"

அவன் அலுப்பாகப் பேசினான்.

"உன் பொண்டாட்டியை அனுப்பிட்டு வந்துடேன். நான் தவிட்டு ஒத்தடம் தரேன்."

ரேவதி பேச, அவன் கை கூப்பினான்.

அவன் கண்களில் நீர் வழிந்தது.

20

ரேவதியைப் பார்த்து அந்த இளைஞன் கண்களில் ஜலம் கட்ட பேச ஆரம்பித்தான்.

"வேணாம். வேணாம். உங்களைப் பத்தி தப்புத் தப்பா பேசி எல்லாமும் தப்பாயிடுச்சு. உங்களைச் சொன்ன வார்த்தைக்காகவே நான் யாராலேயோ அடிபட்டுட்டேன் இப்பவும்கூட சரியா யார் அடிச்சாங்கன்னு தெரியலை. ஆனா ராதாகிருஷ்ணன் இல்லைன்னு நிச்சயமா தெரிஞ்சுடுச்சு. எதுக்கு அடிச்சாங்கன்னு தெரியலை. இந்த சண்டையில்லைன்னு தெளிவாயிடுச்சு."

"திரும்பவும் சங்கரய்யர்கிட்ட பேசினீங்களா?"

"இல்லை. காசுக்கு ஏற்பாடு பண்ணிக்கிட்டிருக்கேன். அடுத்த வாரம் தெரிஞ்சுடும். அது தெரிஞ்சுட்டா அவரண்ட சொல்லிடுவேன். அவர் மூலமாகவே உங்களுக்குக் காசு வந்துடும். ராதாகிருஷ்ணன் ஸார் இல்லீங்களா?"

"படப்பை பக்கம் போயிருக்கார்."

"என்ன?"

"படப்பைக்கிட்ட நிலம் வாங்கணும். அங்க வீடு கட்டிக்கலாம்னு நினைச்சுப் போறார்."

"ஏங்க அவ்ளோ தூரம் போறீங்க? இங்க எங்கயாவது மயிலாப்பூர்ல ஃப்ளாட் வாங்கக் கூடாதா?"

"ஃப்ளாட்ல எல்லாம் இருக்க முடியுமான்னு தெரியலை. எங்ககிட்டயும் கொஞ்சம் காசு இருக்கு. தனியா நிலம் வாங்கி ஒரு வீடு கட்டி குடித்தனம் பண்ணலாமோன்னு ஒரு யோசனை இருக்கு."

"அவ்ளோ தொலைவுலேயிருந்து வேலைக்கு வரணுமே."

"வேலைக்கு வரணுமான்னு ஒரு கேள்வி இருக்கு."

"வேலைக்கு வரலைன்னா, சாப்பாட்டுக்கு?"

"அம்பாள் ஏதாவது வழி விடுவா."

"ஏங்க, நான் போகச் சொன்னதனால நொந்து போய் பேசறீங்களா?"

"இல்லை. இந்த ஆட்டமே போதும்னு எங்களுக்குத் தோணிடுச்சு."

"எந்த ஆட்டம்?"

"ஆபீஸுக்குப்போறதும் வரதும்."

"ஏங்க வரலையா?" என்று கீழிருந்து குரல் கேட்டது.

அவன் மடமடவென்று கீழே ஓடினான்.

ரேவதி அவனைச் சிரிப்போடு பார்த்தாள்.

என்ன இந்தப் புள்ள பொண்டாட்டிக்கு இந்த பயம் பயப்படறது என்று வியந்தாள். தான் புருஷனுக்குப் பயப்படுகிறோமோ என்று கேட்டுக் கொண்டாள்.

பயமில்லை ஒரு மரியாதை,

என்ன விதமான மரியாதை?

பிரியம் கலந்த மரியாதை. புருஷன் என்றால் கூப்பிட்டக் குரலுக்குப் போக வேண்டும் என்கிற மரியாதை. கூப்பிட்டக் குரலுக்கு வர முடியவில்லை என்று சொன்னால் போதும், புருஷன் ஓடி வந்து விடுவான். ஏன், என்னாயிற்று உனக்கு என்று முகம் தாங்கி கேள்வி கேட்பான் குழந்தை. பரபரப்பான எட்டாம் கிளாஸ் குழந்தை. போய் சங்கரய்யரிடம் சொன்னதுதான் சற்று கஷ்டமாக இருந்தது. சங்கரய்யரிடம் அதிகம் பேசி விட்டோமோ, புருஷனைப் பற்றிக் குறைவாகச் சொல்லி விட்டோமோ என்று தோன்றியது. புருஷனைப் பற்றி வாய்க்கு வந்தபடி குறை சொல்கிறாள் என்று நினைத்துக் கொள்வார்களோ, வேறு ஏதேனும் ஒரு சமயம் குத்திக் காட்டுவார்களோ என்றும் தோன்றியது. கணவன், மனைவி அன்பு பற்றி அந்தப் பையனுக்குச் சொன்னதெல்லாம் அவனுக்குத் சொன்னதல்ல; நமக்குச் சொன்னது, என்று ராதாகிருஷ்ணன் சொல்ல அதுவும் சந்தோஷமாக இருந்தது.

சங்கரய்யர் நேரடியாக எதையும் பேசுவதில்லை. வேறு யாருக்கோ ஏதோ சொல்கிற போது மற்றவருக்கும் சொல்லிவிடுகிறார் என்பது புரிந்தது. சங்கரய்யரிடம் போனால் அவர் பேச்சைக் கூர்ந்து கவனித்துக் கொள்ளவேண்டும் என்று ருக்மணி கீழிறங்கும்போது சொன்னாள். 'ஆமாம்' என்று இவர்கள் இரண்டு பேரும் தலையசைத்தார்கள். வீட்டிற்கு வந்து சங்கரய்யர் என்னவெல்லாம் சொன்னார் என்று யோசித்துப் பரிமாறிக் கொண்டார்கள். ஆனால், இந்தப் பிள்ளைக்கு அந்த மாதிரி பரிமாறிக் கொள்ள ஆள் ஏதும் கிடைக்கவில்லை.

வராண்டா வழியாக தெருவை எட்டிப் பார்த்தாள்.

அந்தப் பையன் சற்று நிற்கும்படிச் சொல்ல, "இல்லை, நாங்கள் போகிறோம்" என்று அவர்கள் உரக்கக் குரல் கொடுத்தார்கள். அவன் ஏதோ வேகமாக மறுத்துச் சொல்ல, அவர்கள் அவனைவிட வேகமாக மறுத்துச் சொன்னார்கள்.

கார் இலேசாக புகை கக்கிக் கக்கி வீட்டு வாசலில் இருந்து அகன்றது. அவன் இடுப்பில் கை வைத்து காரையே பார்த்தபடி இருந்தான். பிறகு தலை குனிந்தான். படியேறி மறுபடியும் மேலே வந்தான்.

"ரேவதி மேடம்" என்று வராண்டாவிலிருந்து குரல் கொடுத்தான்.

"வாப்பா என்ன வேணும்?"

"ஒரு கப் காபி கிடைக்குமா? ரொம்ப தலை நோவுது."

"என்னாச்சு திடீர்னு?"

"ச்சு... கோவம் தலைக்கு ஏறிடுச்சு. ஏறின கோவத்தை இறக்க முடியலை. வாய் விட்டு சொல்ல முடியலை."

"ஏன்? யார் மேல கோவம்?"

"பொண்டாட்டி மேலதான்."

"சும்மா ஒரு குழந்தையைக் கோவிச்சுக்காதப்பா."

"அது குழந்தை இல்லைங்க. பிசாசு. இவ்ளோ தூரம் வந்துட்டோம், ராதாகிருஷ்ணன் ஸார்கிட்ட பேசிட்டுப் போயிடலாம். நாடார்கிட்ட பேசிட்டுப் போயிடலாம்னு சொல்றேன். 'அதெல்லாம் நீங்க பேசிக்கோங்க' அப்படின்னு சொல்லிட்டு வண்டியை எடுத்துட்டுப் போயிட்டா. நான் எப்படி வரதுன்னு கேட்கறேன். எங்கப்பா எனக்கு கொடுத்த காரு. வேணும்னா உங்கப்பா கார்ல வாங்க. இல்லைன்னா ஆட்டோல வாங்கன்னு சொல்லிட்டு போயிட்டா. அவங்க அப்பா இருக்கற இடத்துல திமிரா போயிட்டா.

இழுத்துப் போட்டுமிதிச்சா சரியா வரும். ஆனா மிதிக்க முடியலையே."

"தப்புப்பா. இப்படியெல்லாம் யோசனை பண்ணாதே. இரு காபி தரேன்."

ரேவதி காபியோடு வந்தாள். அவனுக்கு ஆற்றிக் கொடுத்தாள்.

என்னமோ சட்டென்று இந்தப் பையன் மீது ஒரு வாஞ்சை வந்துவிட்டது. மிகப் பெரிய ரௌடித்தனம் பண்ண வேண்டுமென்று வீட்டு வாசலுக்கு வந்து உரக்கக் கத்திய பையன். ஆனால் இப்பொழுத வலியில் துடிக்கிறான். அவமானத்தில் இருக்கிறான். இவனைப் பார்த்தால் பாவமாக இருக்கிறது. இவன் சொத்து நமக்கெதற்கு? இந்த ஏழு லட்சம்கூட வேண்டாம் என்று சொல்லி விட்டு வந்துவிட வேண்டும். அதுதான் நல்லது. அதுதான் மரியாதை. அதுதான் அழகு.

ஆனால் இதில் நான் தலையிட வேண்டாம். எப் பொழுது சங்கரய்யர் இதை எடுத்துக் கொண்டாரோ அவரே முடிவு செய்யட்டும். ஒருவேளை இவன் காசு சிரமத்திற்கு நீங்கள் ஒன்றும் வாங்காமல் போங்கள் என்று சொல்லிவிட்டாலும் சந்தோஷமாகப் போய் விடலாம்.

அந்தப் பையன் காபி டம்ளரை நெற்றியில் வைத்துக் கொண்டான். அந்தச் சூடு அவனுக்குத் தேவையாக இருந்தது.

ரேவதி அவனைப் பரிதாபத்தோடு பார்த்தபோது உள்ளுக்குள்ளே ராதாகிருஷ்ணன் படியேறி வந்தார். அவனைப் பார்த்துவிட்டுத் திகைத்தார்.

"என்ன... என்னாச்சு?" என்று பதற்றத்தோடு ரேவதியிடம் கேட்டார்.

"ஒண்ணும் ஆகலை. தலைவலி, காபி போட்டு கொடுங்கோன்னார். கொடுத்தேன்."

"ஏன்? ஊர்ல ஹோட்டலே இல்லையா?"

ராதாகிருஷ்ணன் தன்னுடைய இயல்பான எகத் தாளத்திற்கு இறங்கினார். ரேவதி கை தூக்கி போதும் என்பதாய் நிறுத்தினாள்.

அவன் இரண்டு பேரையும் பரிதாபமாகப் பார்த் தான்.

"நீ சாப்பிடு அம்பி. அவர் அப்படித்தான். தேவை யில்லாத பேசுவார். ஒருத்தருக்குக் காபி கொடுத்திருக் கேன். அவர் குடிச்சுண்டிருக்கார். அப்போ அதைப் பத்தி இழிவா பேசறது நல்லதா?"

"மன்னிச்சுக்கோப்பா. நீ காபி சாப்பிடு" என்று அவன் தோள் தட்டிக் கொடுத்தார்.

அவன் எழுந்து நின்று கை கூப்பினான்.

"உங்களை நான் தப்பா சங்கரய்யர்கிட்ட சொன் னேன். உங்களை வந்து தேவையில்லாத மிரட்டினேன். இது இரண்டுத்துக்கும் நான் என் மனப்பூர்வமான மன்னிப்பைக் கேட்கறேன். உங்களை மிரட்டின பாவமோ என்னமோ வேற யாரோ என்னை மடக்கிப் போட்டு அடிச்சுக் குத்தி, உடம்பெல்லாம் புண்ணாக் கிட்டாங்க."

"அதுதான் தவிடு ஒத்தடம் கொடுத்தா சரியா போயிடுமேன்னு சொன்னேன். எங்க போறது தவிடுக் குங்கறார். பொண்டாட்டியோட அவ்ளோ சுமுகமா இல்லை போலிருக்கு. பொண்டாட்டியும் ஏதோ கோச் சுண்டு போறா. எதுக்குன்னு தெரியலை. பாவமாதான் இருக்கு இந்தப் புள்ளையப் பார்த்தா" மெல்லிய குரலில் ரேவதி சொல்ல, ஆழ்ந்து ராதாகிருஷ்ணன் அந்தப் பையனைப் பார்த்தார்.

அவன் காபி தம்ளரோடு தலைகுனிந்து உட்கார்ந் திருந்தான். அவன் தோளைத் தட்டினார். "குடி" என்று சொன்னார்.

அவன் குடித்து முடித்ததும் ரேவதியின் காதோரம் "தவிடு வறு நானே அவனுக்கு ஒத்தடம் கொடுக்க றேன். கரு ரத்தம் கட்டிண்டிருக்குன்னு அங்கயே சொன்னான் இல்லியா?" என்று சொல்ல, ரேவதி "ஆமாம்" என்று சொன்னாள்.

வாணலியை அடுப்பில் வைத்து வீட்டிலுள்ள டப்பா விலிருந்து தவிடு கொட்டி வேகமாக வறுக்கத் துவங் கினாள்.

வறுத்த தவிடை மூட்டையாக்கினாள். அதற்குள் ராதாகிருஷ்ணன் அவனிடம் பேசி சட்டையைக் கழற்றி அவனுடைய காயங்களைப் பரிசோதித்தார். எல்லா இடமும் கருரத்தம் கட்டிக் கொண்ட அடியாகத்தான் இருந்தன. தவிடு மூட்டை வந்தது. அவனைத் தரையில் குப்புறப் படுக்கச் சொல்லி தலைக்கு பெட்ஷீட் மடித்துப் போட்டு அவன் முதுகிலும் தோளிலும் கழுத்திலும் தவிடு மூட்டையை வைத்து வைத்து எடுத் தார். மறுபடி மறுபடி தவிடு சூடு படுத்திக் கொண்டு ரேவதி முன்னும் பின்னும் அலைய, மிகக் கவனமாக தவிடு ஒத்தடம் கொடுத்துவிட்டு அதன் மீது அயோ டெக்ஸ் தடவ அவன் கண்மூடி பதினைந்து நிமிடங்கள் தூங்கியதுபோல் படுத்துக் கொண்டிருந்தான். பிறகு அவனை மல்லாக்கப்போட்டு வயிறுப் பகுதியிலும் தவிடு ஒத்தடம் கொடுத்து அங்கேயும் அயோடெக்ஸ் தடவ மெல்ல எழுந்தான்.

ராதாகிருஷ்ணன் கால்களை வருடி தலையில் வைத்துக் கொண்டான்.

"தப்பு, எவ்ளோ சீக்கிரம் என்னால காசு கொண் டாந்து கொடுக்க முடியுமோ அவ்ளோ சீக்கிரம் கொண்டாந்து கொடுக்கறேன். நான் நல்லபடியா காசு கொண்டாரணும்னு நீங்க பிரார்த்தனை பண்ணிக் கோங்க" என்று சொன்னான். சட்டையை மாட்டிக் கொண்டான்.

"மாமி வரேன். போயிட்டு வரேன். எல்லாத்துக்கும் ரொம்ப தேங்க்ஸ்" என்று கைகூப்பினான்.

சட்டென்று எல்லா துக்கமும் மறைந்து ஓடிப்போய் மனம் பளிச்சென்று துடைத்தது போல் மின்னியது.

"சங்கரய்யரைப் போய்ப் பார்த்துட்டு வரலாமா?"

இம்முறை அவர்கள் குழந்தைகளை அழைத்துக் கொண்டு போனார்கள்.

"சங்கரய்யர் யாருப்பா?"

ராதாகிருஷ்ணனின் மகன் ராஜாராமன் அப்பாவின் புஜத்தைப் பிடித்துக் கொண்டே, தெருவில் நடந்தபடி அவர் முகத்தை உற்றுப் பார்த்துக் கேட்டான்.

"அவர் பெரிய மகான். அவரைப் பார்த்ததும் கை கூப்பி நமஸ்காரம் பண்ணணும். அபிவாதயே சொல்லணும். உனக்கு சொல்லிக் கொடுத்திருக்கு இல்லியா?"

ஏழு வயதிலேயே பூணூல்போட்ட பையனுக்கு மறுபடியும் அந்த மந்திரத்தை அந்த வணக்கம் சொல்லுதலைத் திரும்பச் சொல்ல வைத்து, சரி செய்து அவனைத் தயார் படுத்தினார்.

"மகான்னா யாருப்பா?"

மகள் சுபத்ரா கேள்வி கேட்டாள்.

எட்டாவது படிக்கின்ற சுபத்ராவும், பதினொன்றாவது படிக்கின்ற ராஜாராமனும் மிகுந்த திறமையோடும் கூரிய ஞாபக சக்தியோடும், நிறைய கேள்விகளோடும், நல்ல பசியோடும் வளர்ந்து வந்தார்கள்.

சுபத்ரா இன்னும் மலரவில்லை. ஆனால், மலர்ந்து விடுவாள் என்று உடம்பு எச்சரித்துக் கொண்டேயிருந்தது. மாறாக ராஜாராமன் சற்று கச்சலாய் உறுதியான உடம்பாய், ஒட்டிய கன்னமாய், ஏதோ சிந்தனை உள்ளவனாய், தனக்குள்ளே பேசி, முணுமுணுப்பவனாய் வளர்ந்து வந்தான். அவன் தனக்குள்ளேயே அதிகம் பேசுவதை, கண்ணாடி முன் நின்று கைகால் ஆட்டி,

உரக்க பிம்பம் பார்த்து உளறுவதை ஒளிந்திருந்து ரேவதி பார்த்துவிட்டு புருஷனிடம் சொன்னாள்.

"என்னடா... எதுவோ தனியா பேசறியாமே... ஏன்?"

குழந்தை சட்டென்று அப்பாவின் கேள்வியை எதிர் கொள்ள முடியாமல் வெட்கப்பட்டான். கால் பின்னினாள்.

அம்மா இதைப் போய் அப்பாவிடம் சொல்லிவிட்டாளே என்பது போல் பார்த்தான்.

அவன் தவிப்பதைப் புரிந்துகொண்டு ராதா கிருஷ்ணன் அவனை அருகே அழைத்து அணைத்துக் கொண்டார்.

"என்ன... என்ன பிரச்னை உனக்கு சொல்லு?" என்று கேட்டார்.

"ஒண்ணுமில்லேப்பா... ஏதேதோ கற்பனை பண்ணிண்டிருக்கேன். சில சமயம் என்னை மீறி பெருசா பண்ணிடறேன்."

"கற்பனைன்னா எந்த மாதிரி?"

"உன்னை மாதிரியும் பண்றேன்பா."

"என்னை மாதிரியும்னா?"

"ஆமாம். நீ சுடுசுடுன்னு சத்தம் போடுவேயில்லை. உனக்குக் கீழே வேலை செய்யறவாளை அதட்டுவே இல்லை, நிறைய வேலை இருக்குன்னு அலட்டிக்குவே இல்லை, அதே மாதிரி நானும் பண்ணிப் பார்ப்பேன்."

"அப்புறம், வேற யார் மாதிரி பண்ணுவே?"

"பெரிய ரவுடி மாதிரி பண்ணுவேன்."

"அப்புறம்?"

"அந்த ரவுடிகளை முட்டிக்கு முட்டி பேத்துடுவேன்ற போலீஸ்காரன் மாதிரி பண்ணுவேன்."

"அப்புறம்."

"கிரேன் ஆபரேட்டர், மாதிரி பண்ணுவேன்."

"கிரேன் ஆப்ரேட்டரா. எதுக்குடா?"

"நல்ல வேலை இல்லைப்பா. ஒரு இடத்துல உட்கார்ந்துண்டு கடலை வேடிக்கை பார்த்துண்டு கப்பலை வேடிக்கை பார்த்துண்டு கியர் மாத்தி சாமானைத் தூக்கி, இறக்கிண்டு நல்ல வேலை இல்லைப்பா? நான் பெரியவனானா கிரேன் ஆபரேட்டர் ஆகணும்பா" என்று அவன் சொல்ல வீடு சிரித்தது.

"சரி, அப்புறம் வேற யாரு மாதிரி நினைச்சுப்ப?"

"சில சமயம் என்னை நான் கடவுளா நினைச்சுப்பேன்."

"என்னடா இது... என்ன சொல்ற."

"ஆமாம்.. நான் இருக்கேன், எதுக்கு பயப்படறேள். அப்படின்னு வலதுகை தூக்கி ஆசீர்வாதம் பண்ணுவேன்ப்பா. கையில கதை வைச்சுருப்பேன். இன்னொரு கையில சங்கு சக்கரம் இருக்கறதா நினைச்சுப்பேன்."

ரேவதியை நோக்கி ராதாகிருஷ்ணன் என்னடி இது என்பது போல் பார்த்தார்.

"அதெல்லாம ஒண்ணும் தப்பு இல்லைடா."

ரேவதி சட்டென்று உதவிக்கு வந்தாள். பிள்ளை ஆவலோடு அம்மாவைப் பார்த்தது.

"ஆனா ரொம்ப ஜாஸ்தியா பண்ணிடாதே. கண்ணாடிக்கு முன்னாடி நின்னு பேசாதே. அதை யாராவது பார்த்தா தப்பா நினைச்சுப்பா. கொஞ்சம் உள்ளுக்குள்ளேயே வைச்சுக்கோ" என்று சொல்ல ராதாகிருஷ்ணன் அவன் முதுகைத் தடவி நெற்றியில் முத்தமிட்டு அனுப்பி வைத்துவிட்டார்.

இரவு நேரம் புருஷனும், மனைவியும் எதிரும் புதிருமாக உட்கார்ந்து கொண்டு பிள்ளையைப் பற்றிக் கவலைப்பட்டார்கள்.

குழந்தையை சங்கரய்யரிடம் கூட்டிக் கொண்டு போகும்போது இதைப் பற்றிச்சொல்ல வேண்டும் என்றும் பேசிக் கொண்டார்கள்.

21

"நாலு இட்லிக்கு மேலே கிடையாது. பிசுக்கறதுக்கு சாப்பிடுடி. சும்மா தின்னுண்டே இருக்காதே."

ரேவதி பெண்ணைப் பார்த்து உரத்த குரலில் கத்துவாள்.

"இன்னும் ஒரு இட்லி போடு, அதுக்கு மேல வேண்டாம்" என்று ராதாகிருஷ்ணன் பரிந்து கொண்டு வருவார்.

ஆனால், கூட மூன்று இட்லியை எப்படியாவது சுபத்ரா சாப்பிட்டு விடுவாள். அவளுக்குக் கோரமாக பசியெடுத்தது. நன்றாக ருசித்து சாப்பிடத் தெரிந்தது. "இன்னிக்கு என்ன சமையல்?" என்று காலையில் பல் தேய்த்து சமையலறைக்குள் காபிக்கு வரும்பொழுதே குழந்தை கேட்க ஆரம்பித்து விடுவாள்.

அம்மா பதில் சொல்லியே ஆக வேண்டும்.

"இன்னிக்கு இதைப் பண்ணேன்" என்று அவளுக்குப் பிடித்த விஷயமாக ஏதோ ஒன்று சொல்வாள். ரேவதியும் வேறு வழியில்லாமல் அதைச் செய்து கொடுப்பாள்.

ராஜாராமனுக்கும், சுபத்ராவுக்கும் சண்டை வருவதில்லை. அதேசமயம் அவர்கள் இரண்டு பேரும் ஒற்றுமையானவர்கள் என்றும் சொல்ல முடியாது.

"குழந்தையை பள்ளிக்கூடம் முடிஞ்சவுடனே கொஞ்சம் வாசல்ல நின்னு கூட்டிண்டு வாடா" என்று ரேவதி ராஜாராமனைக் கெஞ்சுவாள்.

"முடியாது. அவ பள்ளிக் கூடத்து வாசல்ல என்னால நிக்க முடியாது. அவளைத் தனியா வரச் சொல்லு. அவளை யார் என்ன பண்ணுவா?" என்று ராஜாராமன் மறுத்துவிடுவான்.

"அவனுக்கு சாதம் போடுடி" என்று சுபத்ராவை பிள்ளைக்கு சாதம் போடச் சொல்லி படுத்துக் கொண்டே விரட்டுவாள்.

"என்னால அவனுக்கு சாதம் போட முடியாது அவன் ஏதாவது சிடுசிடும்பான். அவனையே எடுத்துப் போட்டுக்கச்சொல்லு" என்று சுபத்ரா மறுத்துவிடுவாள்.

குழந்தைகள் ஒற்றுமையின்றி இருப்பது பெற்றோர்களுக்கு வருத்தத்தை அளித்தது. வெவ்வேறு குணநலன்களில் வளருகிறார்களே என்ற கவலையும் இருந்தது.

அவன் பேசுவதை ஒருமுறை ராதாகிருஷ்ணன் ஒளிந்திருந்து பார்த்தார். இந்த முறை அவன் பூந்தொட்டியைக் கவிழ்த்து, அதன் மீது ஏறி, கையில் மூங்கில் குச்சி மைக்போல் பிடித்தபடி "தோழர்களே, உங்களைக் கொன்று சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன்." என்ற உரத்த குரலில் கத்திக் கொண்டிருந்தான். அவர் வந்ததும் திடுக்கிட்டுத் திரும்பினான். பூந்தொட்டி அருமல்லாக்க விழுந்தான்.

ராதாகிருஷ்ணன் அவனையே உற்றுப் பார்த்தார்.

"இதை எங்கேயிருந்து கத்துண்ட?" என்று கேட்டார்.

"எல்லா இடத்துலயும் இதுதானேப்பா பண்றா?" என்று அவன் பதில் சொன்னான்.

"அப்போ நீ மேடையிலே ஏறி பேசணும்னு ஆசைப்படறியா?"

"இல்லைப்பா."

"அரசியல்வாதி ஆகணும்னு ஆசைப்படறியா?"

"இல்லைப்பா."

"அப்போ ஏன் பேசறே?"

"எனக்கென்னமோ அது மாதிரி இருக்கணும்னு தோணிச்சு அதனால பண்றேன்."

"நீ பைத்தியம் பிடிச்ச அலைகள் ஓரியோனு தோன்றதுடா. உனக்கு ஸ்நேகிதாளே கிடையாதா?" என்று கேட்க, அவன் "இல்லை" என்று பதில் சொன்னான்.

அதுவும் ராதாகிருஷ்ணனுக்குக் கவலையாக இருந்தது.

உலகத்தில் இருக்கிற எல்லாக் கவலைகளையும் விட, சட்டென்று ராதாகிருஷ்ணனுக்குத் தன் குழந்தைகளைப் பற்றிய கவலை பெரிதாயிற்று. விடாமுயற்சியோ முக்கியமில்லை. இவற்றை எவ்வளவோ வேண்டுமானாலும் தேடிக் கொள்ளலாம். ஆனால், வளரும் பிள்ளைகளுக்குச் சரியான வழிகாட்டி இல்லாவிட்டால், சரியான வளர்ப்பு முறை இல்லாவிட்டால், அவர்கள் பிற்காலத்தில் மிகப் பெரிய தொந்தரவாக உருவெடுப்பார்கள். அவர்களைப் பற்றிய கவலையே நோய்க்கும், வருத்தத்திற்கும் இன்ன பிற வேதனைகளுக்கும் காரணமாகிவிடும். குழந்தைகளைக் காப்பாற்ற ஏதாவது செய்தாக வேண்டுமென்று உயிர் பிரிகிற நேரத்தில் கூட யோசிக்க வேண்டியிருக்கும்.

ராதாகிருஷ்ணன் குழந்தைகளோடு சங்கரய்யர் வீட்டு மாடிப்படியில் ஏறிக்கொண்டிருந்தபோது உள்ளிருந்து 'கும்'மென்று ஊதுவத்தி வாசனை அடித்தது. நாசுங்கம் போல எதையோ கொருத்தி வைத்திருக்கவேண்டும். ஹகத்மான அந்த வாசனை நெஞ்சை முழுக்க நிறைய, பக்தி உணர்வு தானாகத் தோன்றியது. இந்த வாசனைக்கு இந்த உணர்வு என்று மனம் கணக்குப் போட்டு வைத்திருக்கிறது. நாசுங்கம் ஏற்றினால் பக்தி, மாமிசம் வறுத்தால் அருவெறுப்பு, மோர்க்குழம்பு கொதித்தால் பசி என்று மனம் எதையோ பிரித்துப் பிரித்து வைத்துக் கொண்டிருக்கிறது. நாம் அந்த உணர்வுக்குப் பலியாகி விடுகிறோம்.

சங்கரய்யர் மிகச் சாமர்த்தியமாகத் தன் வீட்டு ஹாலை ஒரு கோவிலாக மாற்றி, தன் தோற்றத்தை

ஒரு முனிவராக மாற்றி ஊரை ஏமாற்றிக் கொண்டிருக்கிறாரோ என்று சட்டென்று தோன்றியது.

'வேண்டாம்... வேண்டாம்... நிறுத்து. இந்த மாதிரி யோசித்துவிட்டு அடி வாங்கினாய். மறுபடியும் இப்படி யோசிக்காதே' என்று மனம் வேகமாகப் பின்வாங்கியது.

குழந்தைகளோடு வராண்டாவிற்குப் போய், அங்கிருந்து ஹாலை எட்டிப் பார்த்து, "சங்கரய்யர் இருக்கிறாரா?" என்று குரல் கொடுக்க, பின்னாலிருந்து "இங்கே இருக்கிறேன்" என்று சங்கரய்யர் குரல் வந்தது. அவர்கள் அவசரமாகத் திரும்பிப் பார்த்தார்கள்.

மேல் மாடியிலிருந்து சங்கரய்யர் நிதானமாகக் கீழிறங்கி வந்து கொண்டிருந்தார். நாலுபடி உயரத்தில் நின்று குழந்தைகளையும் அவரையும் உற்றுப் பார்த்தார்.

"அடடா இதுதான் உங்க குடும்பமா? இவாதான் குழந்தேளா, ரொம்ப சந்தோஷம். ரொம்ப நிறைவா இருக்கு."

"இது பையன் அது பொண்ணு." ரேவதி முன்னிறுத்தினாள்.

"சபாஷ். இரண்டும் இரண்டு சிங்கக் குட்டிகள்" என்று சொல்லிக் கீழிறங்கி வந்தார்.

குழந்தைகளை 'அருகே வா' என்று கூப்பிட குழந்தைகள் ஆச்சரியத்துடன் அந்த தாடிவாலாவின் அருகே போய் வியப்போடு பார்த்தார்கள்.

அவர் குழந்தைகளை மெல்ல அணைத்துக் கொண்டார். உச்சியில் முத்தமிட்டார். குழந்தைகளின் கைகளைப் பக்கத்துக்கு ஒன்றாகப் பிடித்துக் கொண்டு ஹாலுக்குள் நுழைந்தார், உட்கார்ந்தார்.

சங்கரய்யர் குழந்தைகளை உற்றுப் பார்த்தார். தலை தடவினார். நிறையக் கேள்விகள் கேட்டார். அவர்கள்

பதில் சொல்லும்போது ஆச்சரியத்துடன் "அடடே... இதெல்லாம் உனக்குத் தெரியுமா?" எனபதுபோல் உற்சாகப் படுத்தினார்.

"ரொம்ப கெட்டிக்காரியா இருக்கியே" என்று ராதாகிருஷ்ணன் மகளிடம் பேசினார்.

"அடிசக்கை பிரமாதம்டா" என்று ராதாகிருஷ்ணன் மகன் முதுகில் அடித்துக் கொண்டாடினார்.

"ரேவதி, அபாரமான குழந்தேள். ரொம்ப பிரமாதமா வருவா. சில முகங்களைப் பார்த்ததுமே தெரிஞ்சுக போயிடும். கடவுளுடைய திருவிளையாடல் வரமா வர குழந்தேளை வந்து தொட்டுமே கண்டுபிடிச்சுடலாம். உன் இரண்டு குழந்தேளும் இரண்டு வரம். இவாளப் பத்தி ஏதாவது கவலை உனக்குள்ள இருந்தா, அதைத் துடைச்சு வெளிய போட்டுடு."

ரேவதி கைகூப்பினாள்.

தொலைவிலிருந்தே விழுந்து நமஸ்கரித்தாள்.

ராதாகிருஷ்ணன் முகத்தை அழுகையாக மாற்றிக் கொண்டு அவரையே பார்த்துக் கொண்டிருந்தார். ஆனால், உள்ளுக்குள் வேறு கேள்விகள் எழத்தான செய்தன.

"உலகத்துல எல்லாப் பிறப்பும் வரம்தான். எந்தப் பிறப்பு வரம் இல்லை? எது நியதுக்குள்ளு பிறக்கறது? ஒருத்தர் வீட்டு குழந்தைகளை ரொம்ப அற்புதமான குழந்தைகள்ளு கொண்டாடினா, அது பெத்தவளுக்கு பெரிய மகிழ்ச்சியா இருக்கும். என்ன கேட்டாலும் கொடுத்துட்ற மனோநிலை வரும். பதிலுக்குப் பாராட்டணுமோன்னோ? உங்களை மாதிரி உண்டான்னு குழந்தேளைப் பெத்தவன் பாராட்டுவான். தன் குழந்தைகளைப் பாராட்டினதாலேயே பதிலுக்குப் பாராட்டுவான்."

எத்தனை அடக்கி வைத்தும் எதிர்மறையான சிந்தனைகள் நகர்வதை ராதாகிருஷ்ணனால் தடுத்து நிறுத்த முடியவில்லை.

'டேய்...நீ மறுபடியும் செருப்படி படப்போறடா' என்று மூன்றாவதாக ஒரு குரல் அவரைத் தடுத்து நிறுத்த முயற்சி செய்தது. ஆனால், எதிர்மறைகள் தொடர்ந்தன.

"ரேவதி, பொண்ணு குண்டா இருக்காளேன்னு பயப்படாதே. நான் சின்ன வயசுல ரொம்ப ஒல்லியா இருந்தேன். துளியூண்டு இருந்தேன். எங்கம்மாவே என்னை பூனைக் குட்டின்னுதான் கூப்பிடுவா. இப்போ யாராவது என்னை பூனைக்குட்டின்னு கூப்பிடுவாளா? ஏண்டா... நீ சொல்லு. என்னைப் பார்த்தா எப்படியிருக்கு? என்னை யாரு, என்னன்னு கூப்பிடுவா?"

"யானைக்குட்டின்னு கூப்பிடுவா" பளிச்சென்று பிள்ளை பதில் சொன்னான்.

ராதாகிருஷ்ணன் தலையில் அடித்துக் கொண்டார்.

"ச்சு... தப்பு" ரேவதி அங்கிருந்து பிள்ளையை அதட்டினாள்.

"மனசுல இருக்கறதை பளிச்சுனு குழந்தை வெளிய சொல்றான். அதனாலதான் இவனை வரம்னு சொல்றேன். நிறையப் பேர் உள்ள இருக்கறது வெளிய சொல்ல மாட்டேங்கறாளே. உள்ளே ஒண்ணு வைச்சுண்டு வெளியே பேசறாளே. இவன் இப்படிப் பட்டுனு சொன்னது சரி. என்னை இப்பவும் எல்லாரும் யானைக் குட்டின்னுதான் சொல்றா. அதுவும் எங்காத்து மாமி இருக்காளே அவ குட்டின்னுகூட சொல்றதில்லை. யானை வருது அப்படின்னுதான் சொல்றா."

அவர் பேச்சுக்கு அங்கிருந்த ருக்மணி, சங்கரய்யரின் மனைவி, அந்தக் குழந்தைகள் எல்லோரும் சிரித்தார்கள்.

மனம் சற்று நேரம் சும்மா இருந்தது. சங்கரய்யரையே பார்த்துக் கொண்டிருந்தது.

"ராஜாராமன் ரொம்பப் பேசறான். நீங்க கொஞ்சம் அவனைப் பார்த்து புத்திமதி சொல்லணும்."

ரேவதி தொலைவிலிருந்து சொன்னாள்.

"பேசறானா? பேசட்டுமே. பேசினா நல்லதுதானே?"

"இல்லை. தனக்குத்தானே பேசறான். கண்ணாடி முன்னாடி நின்னு பேசறான். சுவத்துக்கிட்ட நின்னு பேசறான்; மொட்டை மாடிக்குப்போய் குறுக்கநெடுக்க நின்னு பேசறான். பன்னெண்டாவது படிக்கற பையன் இப்படி தனக்குத்தானே பேசினா வெளிய இருக்கறவா சிரிக்க மாட்டாளா? நாலஞ்சு பேர் சொல்லி சிரிக்கவும் செய்தா, அப்படியும் அவனுக்கு அந்த புத்தி மாறமாட்டேங்கறது. உள்ளே இருக்கறதையெல்லாம் வெளியே கொட்டறான். பூட்டி வைச்சுக்க மாட்டேங்கறான்."

"கொட்டட்டுமே. ஒண்ணும் தப்பில்லை. ஏண்டா அப்படிப் பண்ற?"

ராஜாராமனைப் பார்த்து சங்கரய்யர் கேட்க, அவன் மலங்க மலங்க விழித்தான்.

"நாலாபக்கமும் நாலாவிதமா புத்தி ஓடறதா?" என்று மறுபடியும் கேட்க 'ஆம்' என்று தலையசைத்தான்.

"புத்தியை ஒரு நிலைப்படுத்தறதுக்கு உனக்கொரு சின்ன உபாயம் சொல்லித் தரேன். கேட்டுப்பியா? இப்போ உன் புத்தி எங்க இருக்கு, எங்கிட்ட இருக்கா, வேற எங்கேயாவது மேயறதா?"

"உங்ககிட்டதான் இருக்கு" அவன் அடிக்குரலில் பதில் சொன்னான்.

"நாம உட்கார்ந்துக்கலாம்."

அவர் அந்தப் பிள்ளையை எதிரே உட்காரவைத்தார். தன்னுடைய வலப்பக்கம் ராதாகிருஷ்ணனின் மகள் சுபத்ராவை இருத்திக் கொண்டார்.

"ஏதாவது குடிக்கத் தரட்டுமா?"

ருக்மணி கேட்க "அவாளுக்குக் கொடேன். குழந்தைகளுக்கு நான் அப்புறமா கொடுத்துக்கறேன்" என்று சொல்ல, ருக்மணி உள்ளே போனாள்,

ராதாகிருஷ்ணனும் ரேவதியும் சுவரோரம் போய் அமர்ந்து கொண்டார்கள்.

ரேவதிக்கு தன் பிள்ளையை சங்கரய்யர் ஆசிர்வதிக்கிறார் என்பதே சந்தோஷமாக இருந்தது.

'ப்பா... நீ ஏதாவது பண்ணித் தொலைச்சுடாதே. எனக்கு இருக்கறது ஒரே புள்ள.'

ராதாகிருஷ்ணனின் உள்ளுக்குள்ளே குரல் ஓடிற்று.

'நீ சும்மா இரேன். சனியனே.'

மறுபடியும் மனத்தை ராதாகிருஷ்ணன் கடிந்து கொண்டார். மிகவும் அப்பாவிபோல் முகத்தை வைத்துக்கொண்டு ஒன்றுமே அறியாதவர்போல் ஒரு தோற்றத்தை ஏற்படுத்திக் கொண்டு ராதாகிருஷ்ணன் பார்த்துக் கொண்டிருந்தார்.

சங்கரய்யர் வினாடிநேரம் அவரைப் பார்த்துச் சிரித்தார்.

அந்தச் சிரிப்பு பகீரென்ற ஒரு பய உணர்வை ராதாகிருஷ்ணனுக்கு ஏற்படுத்தியது.

அவர் முகம் இன்னும் அப்பாவியாக மாறியது.

"மூச்சை இழுத்து வெளிய விடு. இரண்டு மூக்கலையும் இழுத்து விட்டியோன்னோ இப்போ வலது

மூக்கால மூச்சை இழுத்து இடது மூக்காலே விடு. ஆங்... இப்படிப் பொத்திக்கோ. இப்போ இடது மூக்காலே மூச்சை இழுத்து வலது மூக்காலே விடு. எட்டு எண்ணுற வரைக்கும் மூச்சை இழுக்கணும். பதினாறு எண்ணுகிற வரைக்கும் மூச்சை விடணும். அதாவது வேகமாக மூச்சை இழுத்து மெல்ல விடணும். அதேபோல இடது நாசியில வேகமா எட்டு வரைக்கும் எண்ணி மூச்சை இழுத்து, மெல்ல பதினாறு தடவை எண்ணிக்கையோட வெளிய விடணும். மூச்சை நிறுத்தாதே. இழுத்து வெளிய விடு. இந்தப் பக்கமா இழுத்து வெளிய விடு. இப்போ எப்படி இருக்கு?"

பத்துமுறை அவன் செய்தபிறகு, "என்னமோ உள்ளே கனமா இருக்கு" என்று அவன் சொன்னான்.

"இப்போ கண்ணை மூடிக்கோ. கண்ணை மூடிண்டு பேசாம உள்ளுக்குள்ளேயே பார்த்துண்டிரு. நான் இப்போ பாட்டுப் பாடப் போறேன். தங்கை பாடப் போறா. உங்க அப்பா, அம்மா எல்லாரும் பாடப் போறா. எங்காத்து மாமி பாடப் போறா. கேட்கறயா? பாட்டை மெல்ல கேட்டுண்டிருக்கியா?'

அவன் சரியென்று தலையசைத்தான்.

அவர் "சம்போ சிவ சம்போ" என்று பாட ஆரம்பித்தார். திரும்பத் திரும்ப அந்த இரண்டு வார்த்தைகளையும் பாட்டாகப் பாடி எல்லோரையும் பாட வைத்தார்.

அந்த ஹால் முழுவதும் கனமான குரல்கள் பரவிப் பின்னி உயர்ந்து கிளம்பின.

அவன் மெல்ல அந்தப் பாட்டை அனுபவிப்பது சகலருக்கும் தெரிந்தது.

அவன் தன்னை மறந்து அந்தப் பாட்டில் மூழ்கிப் போவது மற்றவர்களாலும் உணர முடிந்தது.

சங்கரய்யர் அவன் உச்சந்தலையை தடவி விட்டார். வகிடு முழுவதும் நீவிட்டார். பின் தலையைத் தடவி

னார். கழுத்தைத் தடவினார். முதுகைத் தடவினார். எட்டி நடுமுதுகுக்குக் கைகளைக் கொண்டு போய் மெல்ல விரல்களை அசைத்து சில வருடல்களை ஏற்படுத்தினார். அவன் மார்பில் மெல்லத் துடித்தினார்.

அவன் பரவச நிலைக்கு தள்ளப்பட்டான். தன் இரண்டு கைகளையும் இரண்டு பக்கமும் விரித்து இறைவனிடம் கையேந்தும் போல் நின்றான். பிறகு இன்னும் மேலே தூக்கி இறைவனைப் பார்த்துவிட்டது போல் பரவச நிலையில் இருந்தான். இன்னும் தூக்கி மெல்ல வாய்விட்டுச் சிரித்தான்.

அவன் கண்களுக்கு முன்னே ஏதோ நடந்து கொண்டிருந்தது. ஏதோ ஒரு விஷயத்தை அவன் பார்த்துக் கொண்டிருப்பதுபோல் தெரிந்தது.

ரேவதி பயந்தாள். ராதாகிருஷ்ணன் 'என்னது இது, ஏன் இப்படி பண்றார்?' என்று கலவரமானார். அருகில் உட்கார்ந்த சுபத்ரா மட்டும் 'அண்ணா ரொம்ப அழகா இருக்கான்' என்று நினைத்துக் கொண்டாள். அது தொடர்ந்து கொண்டேயிருந்தது.

திடீரென்று ராதாகிருஷ்ணன் மகன் ராஜாராமன் பிளிறலாய்க் கத்தினான்.

பாட்டு நிறுத்தப்பட்டது. அவன் உடம்பு மெல்ல நடுங்கிக் கொண்டிருந்தது. அவன் மெல்லக் கண் விழித்து சங்கரய்யரைப் பார்த்தான். சிரித்தான். அந்தப் பார்வை ராஜாராமனின் பார்வையாக இல்லை. வேறு யாரோ பார்ப்பதுபோல் இருந்தது.

சுபத்ரா மெல்ல பயந்தாள். அவள் மீது சங்கரய்யர் கைவைத்துத் தடுத்தார். அவரைப் பார்த்து மறுபடியும் ராஜாராமன் சிரித்தான்.

"நீர்தான் ஓய்... நீர்தான்... நீர்தான்" என்று மறுபடி மறுபடி சொன்னான்.

"என்னது?" ரொம்ப அமைதியாக சங்கரய்யர் கேட்டார்.

"அவர்தான் நீர். நீர்தான் அவர்."

ராஜாராமன் கரகரப்பான குரலில் பதில் சொன்னான். அதுவரை அந்தக் குரலில் அவன் பேசியதில்லை.

22

மனம் விசித்திரமானது. உள்மனம், வெளிமனம் என்று இரண்டு வகையாகச் செயல்படுவது. வெளி மனம் சுற்றியுள்ள மனிதர்களையும் விஷயங்களையும் அடையாளம் காணுவதற்கும், நினைவில் நிறுத்தி மறுபடியும் பேச்சுத் தொடர்ச்சியை ஏற்படுத்திக் கொள்வதற்கும் உதவி செய்வது. சாப்பிடுவது, குளிப்பது, நடப்பது போன்ற விஷயங்களை மிகக் கவனமாகச் செய்யப் பழக்கப்படுத்தப்பட்டது. ஆனால், உள்மனம் வேறு விஷயம். விசித்திரமான கனவுகளை அதுதான் இழுத்து வருகிறது. நாம் வெட்கப்படும் பொழுதோ, சந்தோஷப்படும் பொழுதோ அங்கிருந்துதான் உணர்வுகள் பீறிட்டு அடிக்கின்றன. குகையிலிருந்து வெளிப்படுகின்ற சிங்கம் போல சில சமயங்களில் உள்மனம் செயல்படுகிறது.

'உங்களை நான் எங்கேயோ பார்த்திருக்கிறேன். உங்களைப் பார்த்தவுடன் எனக்குள் ஒரு ஸ்நேகம் ஏற்படுகிறது' என்று யாரோ ஒருவரை, பற்றிக்கொண்டு அது பேச ஆரம்பிக்கிறது.

இவரை எனக்கு வெகு நாளாகத் தெரியும். இந்த இடத்தில் நான் வெகுநாட்களுக்கு முன்பு வாழ்ந்திருக்கிறேன். இந்த உடை, இந்த நிறம், இந்த உணவு எனக்குப் பிடிப்பதற்கு வெளிப்படையாக எனக்குக் காரணம் சொல்லத் தெரியவில்லை. ஆனால் ஏதோ அடிமனத்தில் ஒரு காரணம் இருக்கிறது என்று சொல்லுகிற விஷயங்களெல்லாம் உள்மன விஷயங்கள்தான். அதை

வெளிப்படுத்த வெளிமனத்திற்கு வெட்கம் உண்டு. அது பூட்டி இழுத்து உள் மனத்தை அடக்கி வைக்கும். 'இதெல்லாம் வெளியே சொல்லாதே' என்று நாகரிகப் போர்வையில் சிக்கிக் கொண்டு அவஸ்தைப்படும். உள் மனம் திறந்து அதன் வழியே இயங்குபவர்களை சித்த புருஷர்கள் என்று சொல்வதுண்டு. அந்த சித்த புருஷர்களை பாலர், பேயர், பித்தர் என்று வர்ணிப்பார்கள். உள்மன வெளிப்பாடு என்பது ஒரு குழந்தையின் நடவடிக்கைபோல. அது எந்தத் திட்டமிடுதலும் இல்லாமல், எந்தக் காரண காரியமும் இல்லாமல் செயல்படுவது.

உள்மனம் உக்கிரமானது. அதனால்தான் அதை பேய்மனம் என்றும் சொல்வதுண்டு. ஒன்றின் தொடர்ச்சியாக ஒன்று என்று யோசிப்பதை உள்மனம் செய்வதில்லை, அதில் எந்த வரைமுறையும், திட்டமிடுதலும் இல்லை. அது நாலா பக்கமும் அலைவதால் அதற்குப் பித்தருடைய மனம் என்றும் சொல்வதுண்டு.

சங்கரய்யர், எதிரே உட்கார்ந்திருந்த ராதாகிருஷ்ணனின் மகன் ராஜாராமனின் உள் மனதைச் சில தடவல்களில் திறந்துவிட்டார். ராஜாராமனின் வெளி மனம் நினைவிழந்தது. ஒருவித தூக்கத்தில் ஆழ்ந்தது. உள்மனம் விழித்துக் கொண்டு சம்மணம் போட்டு எதிரே உள்ளதைப் பார்க்கத் துவங்கியது. எதிரேயுள்ள சங்கரய்யரை உற்றுப் பார்த்தது. சங்கரய்யருக்கு உள்ளுக்குள்ளே இருப்பது யார். இந்த உடம்புக்குள்ளே இருப்பது என்ன என்பதை வெகு எளிதாக அந்த உள்மனம் கவனித்தது. அதைப் புரிந்து கொண்டது. அதன் தொடர்பாய் பேசத் துவங்கியது.

வெளியே, எங்கும் பிரகாசமாக இருப்பதே அவருக்குள் இருப்பதை ராஜாராமன் பார்த்தான். உலகம் முழுவதும் பிரகாசமயத்தில் தவித்துக் கொண்டிருக்க, அந்தப் பிரகாசம் சங்கரய்யரின் நெஞ்சுக்குள்ளும் இருந்தது. சங்கரய்யரின் நெஞ்சுக்குள் இருக்கின்ற பிரகாசத்தைப் பார்த்துவிட்டு, அதோடு தான் எனக்குத் தொடர்பு, அதோடுதான் எனக்குப் பரிச்சயம். அதற்கு வெளியே சுற்றிக் கொண்டிருக்கின்ற உடம்பைப் பற்றி எனக்கு எந்த அக்கறையும் இல்லை என்று ராஜாராமன் முடிவு செய்தான்.

அந்த முடிவை அவன் உள்மனம் எடுத்தது.

'நீர்தானய்யா அது. அதுதானய்யா நீர்' என்று மிகப் பணிவோடும், அன்போடும் குதூகலத்தோடும் சொன்னது அது, சகலத்தையும் கண்டுபிடித்த குதூகலம்.

அப்படிப்பட்ட குதூகலத்தை ராஜாராமன் அனுபவித்ததே இல்லை.

சங்கரய்யருக்குள் தெரிந்த பிரகாசத்தைப் பார்த்து அதிலிருந்து கண் எடுக்க முடியாமல் ராஜாராமன் கிடக்க, 'உங்க அண்ணன் என்ன பேசறான் பார்' என்பது போல சுபத்ராவை சங்கரய்யர் பார்த்து, மறுபடியும் ராஜாராமனுக்கு வர, ராஜாராமன் சங்கரய்யர் செய்த அதே விஷயத்தை தானும் செய்ய முயன்று சுபத்ராவைப் பார்த்தான்.

சுபத்ராவுக்குள்ளும் அந்தப் பிரகாசம் தெரிந்தது. அவன் ஆச்சரியப்பட்டுப் போனான்.

"இது வேறல்லவோ, சுபத்ரா அல்லவே. சுபத்ராவுக்குள் இப்படியொரு பிரகாசமா- சுபத்ரா இதுதானா' என்று தவிக்க ஆரம்பித்தான்.

சங்கரய்யருடைய பிரகாசம் வேறு மாதிரி இருந்தது. சுபத்ராவின் பிரகாசம் வேறு மாதிரி இருந்தது.

சங்கரய்யர் என்பது ஒரு பாதரசத்தை பளீரென்று அடித்தது போல நாலா பக்கமும் சிதறி இருக்கின்ற பிரகாசம். உள்ளிருந்து அலை அலையாய் வெளியே அன்பை வீசிக்கொண்டிருக்கிற பிரகாசம். சுபத்ராவோ ஒரு சின்ன குத்துவிளக்குச் சுடர்போலத் தெரிந்தாள்.

மிக அழகாக, அமைதியாக இருந்தாள். அவளுக்குள் எந்த தீர்மானமும், எந்த லட்சியமும், எந்த குணங்களும் இல்லாமல் வெறுமனே வெறும் விளக்கு வெளிச்சமாக இருந்தாள். அவளைப் பார்த்து ராஜாராமன் மிகப் பணிவாகக் கும்பிட்டான்.

'நீதானா... நீதான் சுபத்ராவா' என்பது போல் பார்த்தான். 'நல்லது நல்லது' என்று தலையாட்டினான். கூப்பிய கையைச் சற்று இறக்கி சிரம் தாழ்த்தி அவளை மிகப் பணிவாக ஒரு பெரிய மனுஷியை வணங்குவது போல் வணங்கினான்.

அருகே உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருந்த ராதாகிருஷ்ணனுக்கு அந்தப் பணிவு ஆச்சரியமாக இருந்தது.

"ஒண்ணாம் நம்பர் குரங்கன். ஒரு வால்தான் பாக்கி. இந்த மாடிலேர்ந்து அந்த மாடிக்குத் தாவற பைத்தியம். தாவறதுக்கு முன்னாடி ஏதாவது வசனம் சொல்லிட்டுதான் தாவுவான். பார்க்கறபோதெல்லாம் இவன் எங்கயோ அடிபட்டுச் சாகப் போறான் அப்படின்னுதான் எனக்குத் தோணும்" என்று ரேவதியிடம் சொல்லியிருக்கிறார்.

ரேவதி அவசரமாக அவர் வாயைப் பொத்தி, "நம்ம குழந்தைய நாம அப்படி பேசவே வேண்டாம். ஒரு கால கட்டத்துல சரியாப் போகும் சும்மா இருங்கோ" என்று கண்டித்திருக்கிறாள்.

இப்பவும் அவனுடைய ஆட்டபாட்டங்கள்தான் ஞாபகம் வந்தது. இப்படிக் குனிந்து நமஸ்காரம் செய்வது ஆச்சரியமாக இருந்தது.

சுபத்ராவைப் பார்த்தியோ என்று சொல்வதற்குப் பதிலாக சங்கரய்யர் ஒரேயொரு வார்த்தையாய் 'சுபத்ரா' என்று சொல்லி நிறுத்தினார்.

அவன் மறுபடியும் சங்கரய்யரைப் பார்த்தான்.

'ஆமாம் சுபத்ரா' என்று தலையாட்டிச் சொன்னான்.

மறுபடியும் சங்கரய்யர் 'சுபத்ரா' என்று சொன்னார். 'சுபத்ராவைப் பார்' என்ற உத்தரவு அதில் இருந்தது.

ஆமாம். சுபத்ரா என்று சொல்லிவிட்டு மறுபடியும் சுபத்ராவைப் பார்த்தான்.

சுபத்ராவுக்கும் அவனுக்கும் பல ஜென்மத் தொடர்புகள் இருந்தன. சுபத்ராவை அவன் உள்ளங்கையில் வைத்துக் கொண்டாடியிருப்பதுபோல் தோன்றியது. சுபத்ரா சட்டென்று அவன் கண்களுக்கு ஒரு பகங்கன்று போல காட்சியளித்தாள். அவளுடைய கழுத்தைக் கட்டிக் கொண்டு ராஜாராமன் கொஞ்சினான்.

தான் எப்போதோ கொண்டாடிய பகங்கன்றே தனக்கு இப்பொழுது தங்கை என்பதாய்ப் புரிந்து கொண்டான். அதே ஆச்சரியத்துடன் சங்கரய்யரைப் பார்த்தான்.

சங்கரய்யருக்கு அவன் என்ன நினைக்கிறான் என்பது புரிந்தது. அவரும் ஆம் என்று தலையாட்டினார்.

ராஜாராமனின் ஆச்சரியம் இப்பொழுது சங்கரய்யர் மீது பரவிவிட்டது. இதெல்லாம் காண்பிக்க முடியுமா உம்மால் என்பது போல் வியப்பு தோன்றியது.

'நீர்தான் ஓய் அவர். அவர்தான் ஓய் நீர்' என்ற வாக்கியத்தை மறுபடியும் அவர் மீது தூவினான்.

சங்கரய்யர் மிகச் சாதாரணமாக அந்த வாக்கியத்தை எடுத்துக் கொண்டார். 'மேற்கொண்டு பேசு' என்பது போல் அவனையே பார்த்தார்.

"சில சமயம் பூமியிலேயே ஆகாசத் தாமரை பூக்கிறது."

அடுத்த வாக்கியத்திற்கு ராஜாராமன் தாவினான்.

"ஆனா, ஆகாசத் தாமரை பூத்திருக்கிறது பூமியில இருக்கறவாளுக்குத் தெரியலை."

ஒரு நாடக நடிகன் போலக் கூடுதலான பாவனையோடு சங்கரய்யரைப் பார்த்துச் சொன்னான்.

சங்கரய்யர் 'ஆமாம்' என்று தலையாட்டினார்.

சங்கரய்யரிடமிருந்து பார்வையை விலக்கி சுபத்ராவை நோக்கிச் செலுத்தினான். சுபத்ரா எதுவும் தெரியாதவளாய் உட்கார்ந்திருந்தாள்.

'இவளுக்குச் சொல்லி பிரயோஜனம் இல்லை' என்பது போல் சற்று நகர்ந்து நாற்காலியில் அமர்ந்திருக்கின்ற மாமியைப் பார்த்துச் சிரித்தான். மாமியும் பதிலுக்குச் சிரித்தாள்.

அவள் இந்த மாதிரி பல காட்சிகளை கண்டிருப்பாள் போலிருக்கிறது. எந்தப் பதற்றமுமில்லாமல் அவனைப் பாத்தவாறே உட்கார்ந்திருந்தாள்.

"இவர் ஆகாசத் தாமரை, உங்களுக்குத் தெரியுமோ" என்று ராஜாராமன் சங்கரய்யரைச் சுட்டிக் காட்டி கேட்டான்.

மாமி 'தெரியும்' என்பதுபோல் தலையசைத்தாள்.

"நீங்க நிறைய தாமரையில பூஜை பண்ணியிருக்கேள். அதனாலதான் உங்களுக்குத் தாமரையே கிடைச்சுருக்கு. ஆகாசத்தாமரை" என்று மறுபடி சொல்ல மாமி சரியென்று தலையசைத்தாள்.

ராஜாராமன் பயமின்றி இருந்தான். ஆனால், மெல்லியதாய் சங்கரய்யரின் பிடி அவன் மீது இருந்தது. அவனுக்கு உடுப்புகளையெல்லாம் கழட்டி விட வேண்டும் என்ற ஆசை இருந்தது. குத்துக்காலிட்டு உட்கார்ந்து கொள்ள வேண்டும் போல் தோன்றியது. ஆனால் இந்த உடுப்புகளோடு குத்துக்காலிட்டு உட்கார்ந்து கொள்ள முடியாது. கோமணம் மட்டுமே கட்டிக் கொண்டிருந்தால்தான் அம்மாதிரி உட்காருவதற்கு முடியும். கோமணம் மட்டுமே கட்டிக் கொண்டிருப்பது என்பது மிகச் சுதந்திரமான ஒரு நிலைமை. சந்தோஷமான ஒரு ஸ்திதி ஆரோக்கியமான ஓர் உணர்வு. உடுப்புகள்தான் மிகப் பெரிய சுமை. நாகரிகம் மிகப் பெரிய அவஸ்தை: கடமைகள் எல்லாமே

கைகால்களில் கட்டப்பட்ட சங்கிலி மொழி என்பது மூளைக்குள் சொருகப்பட்ட துருப்பிடித்த ஆணி. தெய்வம் என்கிற நினைப்பும் அதைத் தொழுதலும் வேதனையான இடம். தொழுதல் என்பது வீண் வேலை. எவ்வளவு காலம் ஒருவன் தொழுது கொண்டிருப்பது. அது எத்தனை அயர்ச்சியான விஷயம். தொழுதலை ச்சீ... என்று வேகமாக உதறிவிட வேண்டும். அது எப்பொழுது முடியும்.

நானே தொழப்பட வேண்டியவனாக மாறிவிட்டால் தான் முடியும். தானே தெய்வமாக நின்றுவிட்டால் தான் முடியும். அவனுக்குள் அப்படித்தான் ஒரு சந்தோஷம் பரவிக் கிடந்தது. அப்படித்தான் ஒரு கம்பீரம் நிற்கிறது. அப்படித்தான் உற்சாகம் கொப்பளிக்கிறது. அப்படித்தான் ஒரு விஸ்வரூபம் மனம் எடுத்திருக்கிறது. எல்லாவற்றையும் கனிவோடு , ஒரே பார்வையாய், வெறும் பார்வையாய், எந்தப் பிரிதலும் இல்லாத பார்வையாய், எந்தப் பிளவுப்படலும் இல்லாத பார்வையாய் வேண்டும்; வேண்டாம் என்ற விருப்பு வெறுப்பில்லாத பார்வையாய் மனம் ஏங்கத் துவங்கிவிட்டது.

அடேய்... இப்படியும் ஓர் இயக்கம் எனக்குள் இருக்கிறதா.

ஆச்சரியமாக இருந்தது.

அவன் இயங்கினான். அவன் இயங்குவதை வேடிக்கையும் பார்த்தான்.

இதுவல்லவோ தொழுதல். இது ஏன் இதுவரை இல்லாமல் போயிற்று. இது ஏன் புரியாமல் போயிற்று.

அவன் வியந்தான்.

அடடா... அடடா... என்று தனக்குத்தானே உள்ளுக்குள் பார்த்து வியந்தான்.

'என்ன' மறுபடியும் சங்கரய்யர் கேட்டார்.

"சகலமும் சரி. எல்லாம் சரி. இங்கு நடப்பது அத்தனையும் சரி. நல்ல வெயில் ரொம்ப அவசியம். அப்போதான் நல்ல மழை பெய்யும். துன்பம் ரொம்ப அவசியம். அப்போதான் இன்பம் என்னன்னு தெரியும். கோபம், ஆத்திரம், அருவை ரொம்ப அவசியம். அப்போதான் நல்லது என்னன்னு புரியும். பேய், பிசாசுகள் முகியம். அப்போதான் தெய்வத்தின் அருமை தெரியும்.

உலகம் இரண்டானது. இரண்டான விஷயங்கள் ஒன்றாவதுதான் வாழ்க்கை. அதுதான் இலட்சியம். அதற்குத்தான் நடந்து கொண்டிருக்கிறோம். தனித் தனியாய், தனித் தனியாய் எந்த சம்பந்தமுமின்றி, கும்பல் கும்பலாய் நடந்து கொண்டிருக்கிறோம்."

ராதாகிருஷ்ணன் ஆச்சரியப்பட்டார்.

"ஏதோ பேச்செல்லாம் உளறலாக இருக்கும். எந்தக் கேள்வி கேட்டாலும் சொதப்பலாகத்தான் பதில் சொல்வான். அவன் இப்படிப் பேசுகிறானே. இது என்ன நல்ல விஷயமா, இல்லை. இதுவும் இன்னொரு சொதப்பலா. இன்னொரு குழப்படி. கேஸா?"

அவர் வியப்போடும், கவலையோடும் மகனைப் பார்த்தார்.

அவர் பார்ப்பது அவனுக்குத் தெரிந்து விட்டது போல அவன் மெல்ல, திரும்பி அவரைப் பார்த்தான். பிறகு சங்கரய்யரைப் பார்த்தான். உதடு பிதுக்கினான்.

'என்ன' மறுபடியும் சங்கரய்யர் கேட்டார்.

"பூர்வஜென்ம கர்மா" என்று சொன்னான்.

"என்ன?" மறுபடியும் கேட்டார்.

'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும். போன ஜென்மத்துல பண்ணது இந்த ஜென்மத்துல வரும். இந்த ஜென்மத்துல பண்றது அடுத்த ஜென்மத்துக்குப் போகும். அடுத்த ஜென்மத்துல பண்றது அதுக்கு

அடுத்த ஜென்மம் போகும். ஆஹா... எங்க போய் நிக்கப் போறோம். என்னிக்கு நிக்கப் போறோம்."

அவன் கவலையோடு தலை குனிந்து கொண்டான்.

அவன் கண்கள் கலங்கியிருந்தன.

ரேவதி கண்ணீர் வடிவத்தாள்.

"என் புள்ள என்னென்னமோ பேசறதே. பகவானே போறும்டா இந்த ஆட்டம். அது குழந்தையாவே இருக்கட்டும்டா. அவனை எதுக்கு இப்படி ஆட்டி வைக்கற" என்று எல்லாம் வல்ல இறைவனை நோக்கிக் கை கூப்பினாள்.

சங்கரய்யர் அவளை ஒரு முறை ஏறிட்டுப் பார்த்தார்.

சுபத்ரா வியப்போடு அண்ணனை கவனித்துக் கொண்டிருந்தாள்.

அவளுக்குள் அண்ணாவின் செய்கைகள் மெல்லிய சிரிப்பைக் கொடுத்தன.

23

"ராதாகிருஷ்ணன் இங்க வந்து புள்ள பக்கத்துல உட்கார்ந்துகோங்கோ, அம்மா நீயும் வா" என்று ரேவதியைப் பார்த்து கூப்பிட ராதாகிருஷ்ணனும், ரேவதியும் கிளம்பி ஆளுக்கொரு பக்கமாய் மகனருகே உட்கார்ந்து கொண்டார்கள்.

அவன் கம்பீரமாய் ராதாகிருஷ்ணனைப் பார்த்தான்.

இதுவரை ராதாகிருஷ்ணனை அப்படி யாரும் ஒரு அலட்சியத்தோடு உற்றுநோக்கி சிரித்ததில்லை. ரேவதியைப் பார்த்து பரிவோடு தலையசைத்தான்.

"இது கடன், இதுகடன்" என்று ரேவதியை சங்கரய்யருக்குச் சுட்டிக் காட்டினான்.

'ஒ அது கர்மா. இது கடன். என்ன விந்தியாசம்" சங்கரய்யர் கேட்டார்.

"கோவிச்சுண்டேன். அடிச்சு உதைச்சேன். இப்ப பிள்ளையா பொறந்துட்டேன் இவா எனக்கு உதவி செய்தா, நிறைய சாதம் போட்டா. அது கடன். அதை அடைக்கறதுக்கு பிள்ளையா வந்திருக்கேன்."

"எப்போ இது?"

"ரொம்ப நாள் முன்னாடி."

"எப்போன்னு சொல்ல முடியுமா?"

"சொல்லி என்ன? எதுவும் சொல்ல வேண்டாம். நீரே அவர். அவரே நீர். நீர் இவாள ஆசீர்வாதம் பண்ணனும்."

"உனக்குச் சாதம் போட்ட ரேவதி வந்திருக்காளே. நீ ஏதாவது பண்ணேன். அவளுக்கு ஏதாவது தாயேன்' என்று சங்கரய்யர் மிருதுவான குரலில் அவன் காதோரம் சொல்ல, அவன் மெல்ல கைகளை உயர்த்தி தன் தாயின் தலையை அழகாகத் தடவிவிட்டான். குழந்தையைப் போல் இரண்டு பக்கமும் தடவி, வகிடு பக்கம்- மெல்ல நீவி இரண்டு கைகளையும் குவித்து அவளை வணங்கினான்.

"இந்தப் பக்கம் அப்பா ராதாகிருஷ்ணன் உட்கார்ந்திருக்காரே பார்க்கலையா?" சங்கரய்யர் பேசினார். பையன் ராதாகிருஷ்ணன் பக்கம் திரும்பினான். அவர் விரல்களைக் கோர்த்துக் கொண்டான்.

அப்பாவும் பிள்ளையும் ஒருவரையொருவர் உற்று ஆழமாகப் பார்த்துக் கொண்டார்கள்.

"இவர் மாறப் போறார். ரொம்ப அழகாக மாறப் போறார். இப்போ காய். முகர்ந்து பார்த்தாக் கூட கசக்கறது. கொஞ்சம் நாள்ல கனியும். நன்னா கனியும். தித்திக்க இருக்கும். வீடு முழுக்க வாசமா இருக்கும்" என்று சொன்னான்.

மெல்ல அவர் தோளை அணைத்துக் கொண்டான்.

ராதாகிருஷ்ணன் நின்றால் பயப்படுகிற அந்தப் பிள்ளை, அப்பாவைத் தோழன் போல அணைத்துக் கொண்டது.

ராதாகிருஷ்ணன் தன்னையறியாமல் மகனை நோக்கிக் கை கூப்பினார்.

அவன் சிரித்தான். அவர் கைகளை மெல்லப் பிரித்துவிட்டு "வேண்டாம்" என்று சொன்னான்.

"அவனை நமஸ்காரம் பண்ணலையே."

சங்கரய்யர் நினைவுபடுத்தினார்.

"வேண்டாம். அவர் ஃப்ரெண்ட் எனக்கு, ஸ்நேகம், ரொம்ப நல்ல ஸ்நேகம்."

மறுபடியும் அவரைக் கட்டிக் கொண்டான்.

ராதாகிருஷ்ணனுக்கு ஏனோ அழுகை வந்தது.

தனக்கு உறுதுணையாக யாருமில்லை என்று நினைத்துக் கொண்டிருந்தது சட்டென்று விலகி, இந்தப் பிள்ளை இருக்கிறான் என்ற தோன்றிற்று. 'இவன் ஸ்நேகமாக இருப்பான். கடைசி வரை காப்பாற்றுவான்' என்ற ஓர் எண்ணம் வேகமாக உள்ளே மலர்ந்தது.

அவர் அவனை நோக்கி கை கூப்பினார். தேங்க்யூ என்று சொன்னார்.

சங்கரய்யர் வாய்விட்டு ராதாகிருஷ்ணனைப் பார்த்துச் சிரித்தார்.

நான்கு தலைமுறைக்கு முன்னால் மிக ஆச்சாரமாக இருந்த ராதாகிருஷ்ணனுடைய பரம்பரை, மெல்ல மெல்ல அனுஷ்டானங்களைக் கைவிட்டு கும்பனி வேலைக்கு சேர்ந்தது. பிரிட்டிஷ் கம்பெனி வேலையிலிருந்து அரசாங்க உத்தியோகத்திற்கு மாறி, அரசாங்க உத்தியோகத்திலேயே உயர் பதவிகளைப்பெற்று, பிறகு மறுபடியும் சுதந்திரமடைந்த காலத்தில் தனியார்

வேலைக்கு முயற்சி செய்வதைத் தங்களுடைய வேலைக்குக் கல்யாண குணங்களாகக் கொண்டு, அந்த வேகத்திற்கு பூஜை புனஸ்காரங்கள் வைத்துக் கொள்ள முடியாததால் மானஸ பூஜை என்று ஆரம்பித்து, பண்டிகைக்கு விதம்விதமாகத் தின்பதே கொண்டாடுவது, பூஜை செய்வது என்று மாறிவிட்டது. அனுஷ்டானங்கள் இல்லையே தவிர, பயம் கலந்த பக்தி இருந்தது.

"இந்த மாசம் தர்ப்பணம் பண்ண முடியலை. நல்ல ஜ்வரம். ஸ்லிப் ஆயிடுத்து. அதனால சாஸ்திரியைக் கூப்பிட்டு, வெத்தலைப் பாக்கு வச்சு பதினொண்ணேகால் ரூபாயக் கொடுத்துட்டேன்" என்று சமாதானங்கள் பல செய்து கொண்டது.

'நவராத்தியில ஏதோ ஒரு நாள் சண்டிஹோமம் பண்றதுன்னு எங்க பரம்பரையில வழக்கம். இப்போ எங்கே ஹோமம் பண்ண முடியும்? அம்பிகை, மீனாட்சி என்னை மட்டும் ரட்சின்னு ரெண்டு வார்த்தை சொல்லி கற்பூர ஆரத்தி காண்பிச்சுட்டு, பொங்கல் வடை திங்கறதோட சரி, என்று தனக்குத்தானே தன்னுடைய சமாதானத்தைப் பற்றி பீற்றிக் கொள்ளத் துவங்கியது.

ராதாகிருஷ்ணனால் பூஜை செய்ய முடியவில்லையே தவிர ரேவதி அதில் ஈடுபாடு காட்டினாள். வீட்டிலுள்ள ஆண்கள் பூஜை செய்ய முடியவில்லை என்று அலட்டிக் கொண்ட போது, பெண்கள் அதை மிக முக்கியமான காரியமாக எடுத்துக் கொண்டார்கள். முடிந்த நேரமெல்லாம் ஏதேனும் ஸ்தோத்திரங்கள் படித்தார்கள்.

ரேவதியால் அந்த வீட்டு பூஜையறைப் பளிச் சென்று இருந்தது. பகலும், இரவும் விளக்குகள் இடையறாத எரிந்தது.

'யார் எப்போ விளக்குல எண்ணெய் குறைஞ்சதப் பார்த்தாலும் ஒரு கரண்டி விட்டுட்டுப் போங்கோ' என்ற கட்டளை இருந்தது.

வீடு அதை அப்படியே நிறைவேற்றியது. இதைத் தவிர பெரிய பூஜை, புனஸ்காரம் எதுவும் அவர்கள் செய்ததில்லை.

இப்படி ஒரு இறையனுபவம் பெற்று ஒரு பிள்ளை கைவிரித்து உட்கார்ந்திருப்பதைப் பார்க்கும்போது இது சரியா, இது அவசியமா என்ற கேள்வி அந்தப் பெற்றோர்களுக்கு ஏற்பட்டது. எவர் உதவியும் இல்லாமல் வெறும் மூச்சுப் பயிற்சியும், மந்திர ஜபமும் செய்து முற்காலத்திய அந்தணர்கள் இந்தப் பரவச நிலையை அவ்வப்போது அடைந்ததும் அந்தப் பரவச நிலையில் நல்லது கெட்டதை ஊருக்குச் சொன்னதும் அவர்கள், மறந்துவிட்டிருந்தார்கள்.

"இந்த வருஷம் மழை பெய்யுமா சாமி?"

விவசாயி வந்து கேட்க தெரியலையேய்யா என்று அந்தணர் பதில் சொல்லுவார்.

"யோசனை பண்ணிச் சொல்லுங்க சாமி" விவசாயி கேட்க, செல்றேனப்பா என்று அந்தணர் தலைகுனிந்து உட்கார்ந்திருப்பார். வேகமாக மந்திரஜபம் செய்வார்.

"உடனே சொல்ல முடியலை பெரியவரே. நாளைக்குக் கார்த்தால சொல்றேன் வாங்கோ" என்று கைகூப்புவார்.

அந்த மந்திரஜபம் அப்பொழுது துவங்கி அந்த இரவு முழுவதும் தொடரும். விடியற்காலையில் பின் பக்கம் போய் உடம்பு சுத்தி செய்துகொண்டு ஆற்றங் கரைக்குப் போய் குளிரக் குளிர நீராடி இன்னும் உக்கிரமாக மந்திரஜபம் செய்து திண்ணையில் அமர்ந்து தொடர்ந்து கொண்டிருக்க அந்த விவசாயி மறுபடி வருவார். கைகூப்புவார். அவரைப் பார்த்ததும் அந்தணருக்கு உள்ளுக்குள் இருந்து ஒரு வேகம் பிறக்கும், சட்டென்று முகம் மாறும். கை உயரப் போகும். நெஞ்சடியில் ஒரு கை மலர்ந்து நிற்கும்.

"இது நம் ஊர். இவர் நம் ஊர் விவசாயி. நமக்கு உதவி செய்கின்ற தொழிலாளி. இவருக்கு ஒரு கவலை இருக்கிறது. அந்தக் கவலை ஊர் பற்றிய கவலை. உழவு பற்றிய கவலை. பயிர் வளர்ப்பு பற்றிய கவலை. உயிர்கள் பற்றிய கவலை" என்று புரிந்து மிக வேகமாக அவரின் மீது பார்வை செலுத்தி உள்ளிருந்து பீறிடும் படியாய் வார்த்தைகள் இறைப்பார்.

"இன்னும் மூணு நாள்ல மழை பெய்யும். கவலையே வேண்டாம். உழுது ரெடியா வைங்கோ, சொத சொதன்னு முழங்கால் சேறு வரும்."

"வாக்க சொல்லிட்டீங்க சாமி. அடையாளமா ஒரு குறி சொல்லுங்களேன்."

"ஆந்தை தரையில நடந்துவரும் போ. ஆந்தை தரையில நடந்து வந்தா மழை நிச்சயம் பெய்யும்."

அவர் சரியென்று வணங்கிவிட்டு நகர்ந்து போவார். போன ஐந்தாவது நிமிடம் திரும்ப திபுதிபுவென்று ஓடி வருவார்.

"சாமி பார்த்தேங்க. கோயில் தாண்டி போறபோது கோயில் கர்ப்பக்கிருகத்துலேர்ந்து ஓர் ஆந்தை நடந்து வந்து என்னைப் பார்த்து ஒரு சிரிப்பு சிரிச்சுது. பட்டுனு பறந்து போச்சு. ஆந்தை நடந்து வந்ததைப் பார்த்தேன் சாமி. அப்போ மழை பெய்யுமில்லை" என்று கேட்க அதுவரை அடங்கி உள்ளுக்குள் இருந்த வர் மெல்ல மலர்ந்து 'பெய்யும் போ' என்று சொல் வார்.

இதற்கு எந்தக் காசும் இல்லை. எந்தக் கட்டணமும் இல்லை. பரஸ்பர உதவி. மழை பெய்து நிலம் சேறாகி நாற்று நட்டு, நாற்றை மாற்றி வயலில் இறக்கி, கவனமாய் வளர்த்து களை பிடுங்கி, கதிர் சாய அறுத்து, நெல் அடித்துக் கொண்டுபோகும்போது கூடை கூடையாய் வீட்டுக்கு அனுப்பும்போது உள்ளுக்குள் அந்த விவசா யிக்கு சட்டென்று தோன்றும்.

'ஐயரு சொன்னாரல்லவா. அவருக்கு இரண்டு கூடை அனுப்பு' என்று பிள்ளைகளுக்கு கட்டளையிட இரண்டு பிள்ளைகள், இரண்டு கூடை நெல்லைக் கொண்டு வந்து ஐயர் வீட்டுத் திண்ணையில் வைத்து விட்டு கைகட்டி நிற்கும்.

"யாரு, அவர் பிள்ளையா. வா, வா, உட்கார்" என்று சொல்லி தாகத்திற்கு நீர் மோர் கொடுத்து, உள்ளங் கையில் நெய்யும், சர்க்கரையும் கலந்த இனிப்பு கொடுத்து ஆசீர்வாதம் செய்து அனுப்பப்படும்.

அம்மாதிரி அந்தணர்கள் அலுவலகத்திற்குக் கூலி வேலை செய்யப்போக, இந்த குணாதிசயங்கள் பிய்ந்து போய் விட்டன.

விவசாயிக்கும் கூலி வேலை. குயவனுக்கும் கூலி வேலை. கருமாருக்கும் கூலி வேலை. அந்தணனும் கூலி வேலை என்று எல்லோரும் கூலிக்கு வேலை செய்ய ஒரே வர்க்கமாகி விட்டார்கள். உட்கார்ந்து உள்ளுக் குள் பார்க்கின்றது எவருக்கும் இல்லாமல் போயிற்று.

"அப்பாக்கு ஒரே கவலை. என்ன பண்ணலாம்?" சங்கரய்யர் ராஜாராமனைப் பார்த்து கேட்க, அவன் பரவச நிலையில் அவரைப் பார்த்துச் சிரித்தான்.

"என்னை ஏதாவது கேட்டுண்டே இருக்கணுமா?" என்று பதிலுக்குக் கேட்டான்.

சங்கரய்யர் சிரித்தார். அவனும் சிரித்தான். இரண்டு பேரும் ஒருவரையொருவர் ஆனந்தமாகக் கட்டி அணைத்துக் கொண்டார்கள். கை கோர்த்துக் கொண் டார்கள்.

"அப்பாவுக்கு ஒரே கவலை. என்ன பண்ணலாம்."

மறுபடியும் சங்கரய்யர் கேட்க அவன் கூர்மை யானான்.

"ஒளஷாதிகள் நிறைந்த தோட்டம். அமைதியான வாழ்க்கை. அப்பா அதுக்கு பழகிக்கணும்" என்று சொன்னான்.

"மாட்டேன்னா சொல்லுவார்."

சங்கரய்யர் மறுபடி கேட்க, "அப்படித்தான் ஆரம்பத்தில் தோணும். உள்ள போய் உட்கார்ந்தபிறகு மெல்ல மெல்ல அந்த இடம் பிடிபடும்."

"அப்பாவுக்கு வேலை போயிடும் போல இருக்கே."

சங்கரய்யர் கேட்க, "மறுபடியும் இன்னொரு வேலை வந்தாச்சு."

"யார் தருவா?"

"நீங்க கொடுங்கோளேன். நீரே அவர். அவரே நீர்."

ராஜாராமன் மறுபடி சொன்னான். மறுபடியும் தந்தையை அணைத்துக் கொண்டான்.

அப்பா இந்த முறை மீண்டும் அவனை நோக்கி கைகூப்பினார். அவன் அப்பாவை அணைத்துக் கொண்டே அம்மாவைப் பார்த்தான். அம்மாவின் கைகளை எடுத்துக் கண்ணில் ஒற்றிக் கொண்டான். மெல்ல சுபத்ராவை நோக்கிச் சிரித்தான். அவள் தலையையும் தடவி விட்டான். அவள் கைகளையும் பற்றி நெற்றியில் வைத்துக் கொண்டான்.

சங்கரய்யரை உற்றுப் பார்த்தான்.

ருக்மணி இரண்டு டம்ளர்களில் காபி எடுத்து வந்தாள். ராதாகிருஷ்ணனிடமும், ரேவதியிடமும் நீட்டினாள்.

"அதை வாங்கிக் கொடு" என்று சங்கரய்யர் சொல்ல ராஜாராமன் அதை வாங்கி தன் வலதுகையால் அனைத்து ஸோத்தி, வேட்டி முழுவதும் அந்தக் காபியில் கலக்கவிட்டு அம்மாவிடம் நீட்டினான். இன்னொரு டம்ளரை வாங்கி அதன் முழுவதும் தன்

மனத்தைக் கலக்கிவிட்டு அப்பாவிடம் நீட்டினான். மறுபடியும் சங்கரய்யரைப் பார்த்தான்.

அவன் கண்களிலிருந்து போதும் என்றொரு செய்தி வந்தது.

"சரி, ராஜாராமன் போதுங்கிறான். வீட்டுக்குப் போகணும். வீட்டுக்குப் போய் தனியா இருக்கணும்னு ஆசைப்படறான். இல்ல? இந்த இடத்துல தனியா இருக்க முடியலை. இல்ல?இவாளோட இருக்கறது சிரமப்படுத்தறது இல்ல?" என்று சங்கரய்யர் கேட்க, ஆமாம் என்று தலையசைத்தான்.

சங்கரய்யரின் கைகளை எடுத்து முகத்தில் பதிய வைத்துக் கொண்டான்.

மிக்க நன்றி என்பது போல அவரைப் பார்த்தான். சுபத்ராவைப் பார்த்தான். அப்பாவையும், அம்மாவையும் பார்த்து வெட்கப்பட்டான். எழுந்து விலகி நின்றான்.

"உங்களை நமஸ்காரம் பண்ணட்டுமா?" என்று கைகூப்பி சங்கரய்யரைக் கேட்டான்.

"என்னை மட்டும் பண்ணா போறாது. அம்மாவை முதல்ல பண்ணு" என்று சொல்ல அம்மாவை விழுந்து கால் தொட்டு நமஸ்கரித்தான்.

"குழந்தைய ஆசீர்வாதம் பண்ணு" என்று ரேவதியிடம் அவர் கட்டளையிட்டார்.

ரேவதி நமஸ்கரிக்கின்ற பிள்ளையின் தலையைத் தடவிவிட்டாள்.

"அப்பாவுக்குப் பண்ணுடா."

அப்பாவுக்கு மறுபடி பண்ணினான்.

"எல்லோருக்கும் சேர்த்துப் பண்ணு."

அவன் மறுபடியும் விழுந்து சங்கரய்யரை வணங்கினான்.

சங்கரய்யர் மனைவிக்கு அருகே போய் அவளை விழுந்து நமஸ்கரித்தான். ருக்மணி ஒரு சிறிய துண்டில் கேசரியோடு வர, அவளையும் நிற்க வைத்து அவளையும் விழுந்து வணங்கினான்.

"நல்ல பொண்டாட்டி கிடைப்பா உனக்கு."

ருக்மணி ஆசீர்வாதம் செய்தாள்.

24

சங்கரய்யர் சுபத்ராவை கூர்மையாகப் பார்த்தார். அவள் இடக் கையைத் தன் வலக்கையில் வைத்து தடவிக் கொடுத்தார். மெல்லச் சிரித்தார்.

"இவோ இப்ப குண்டா இருக்கறதுக்குக் காரணம் சாப்பாடு மட்டுமில்லை; உள்ளுக்குள்ள சில ரசாயன மாறுதல்கள் வேகமா ஏற்படறது. குழந்தை சீக்கிரம் பெரியவளாயிடுவா. அப்போ தானா இளைச்சிடுவா கவலைப்பட வேண்டாம். இரண்டு குழந்தேளும் அற்புதமான குழந்தேள். முன்ன நான் சொன்ன மாதிரி இரண்டும் இரண்டு வரம். கவலைப்பட வேண்டாம். ஏதாவது கேள்வி இருக்கா?"

ரேவதியைப் பார்த்துக் கேட்டார்.

ரேவதி இல்லையென்று தலையசைத்தாள்.

தன்னைப் பார்த்துக் கேட்பாரோ என்று ராதாகிருஷ்ணன் ஆவலாக இருக்க, அவரைப் பார்க்காமல் சுபத்ராவின் அருகே போய் மெல்ல அவளை அணைத்துக் கொண்டார்.

'பகவத் கீதையிலிருந்து முக்கியமான ஸ்லோகங்கள்' என்று தொகுக்கப்பட்ட தமிழ் வடமொழி புத்தகத்தை குழந்தைகளுக்குப் பரிசளித்தார். ராதாகிருஷ்ணனை நோக்கி கைகூப்பினார்.

"எனக்கொரு கேள்வி" என்று ராதாகிருஷ்ணன் பவ்யமாகச் சொல்ல,

"உனக்கு எப்படி வருமானம் வர்றது. நீ என்னமா சம்பாதிக்கற. இது என்ன உனக்குத் தொழிலா. இல்லை விளையாட்டா. அப்படின்னு கேட்கப் போறீரா?" என்று கூர்மையாகச் சொல்ல ராதாகிருஷ்ணன் திடுக்கிட்டார்.

தான் சற்று நேரம் முன்பு இவ்விதமே யோசித்தது அவருக்குத் தெரிந்தது. ஆனால் மன்னிப்புக் கேட்க முடியவில்லை.

"வயசாக வயசாக நமக்குள்ளே வர கள்ளத்தனத்துக்கு அளவே இல்லை. உம்ம குழந்தை மனசுல இருக்கறத வெளிய பேசினான். எல்லாத்தையும் வெளிய கொட்டினான். அவன் உள்ள காலியா இருந்தான். அவனைத் தொட்டவுடனே நெருப்பு பிடிச்சிண்டா மாதிரி சுவாமி உள்ளுக்குள்ள வந்து உட்கார்ந்துண்டார். என்ன சொன்னாலும் உமக்குப் புரிய வைக்க முடியாதய்யா. உள்ளுக்குள்ள இருக்கற கள்ளத்தனத்தை வெளிய விரட்டும். அப்புறம் பார்க்கலாம்" என்று கடுமையாக சங்கரய்யர் சொல்ல, ராதாகிருஷ்ணன் மறுபடியும் திகைத்தார். 'சரி' என்று தலையசைத்தார்.

ஏதோ அடிபட்டு அவமானப்பட்டவர்போல கை கட்டிக்கொண்டு மெல்லப் பின்னடைந்தார்.

ரேவதி விழுந்து நமஸ்கரித்தாள்.

"அவரை ரொம்ப கடுமையாகக் கோவிச்சுக்க வேண்டாம். அவர் குழந்தை." ரேவதி பணிவுடன் கூறினாள்.

மெல்லிய குரலில் ரேவதிக்கு மட்டும் கேட்கும்படி பதில் சொன்னார்.

"நான் விட்டுட மாட்டேன். கவலைப்படாத. ஒவ்வொருத்தருக்கு ஒவ்வொரு வைத்தியம். உன் புருஷனுக்கு கொஞ்சம் கடுமையாத்தான் சொல்லணும்.

நான் பார்த்துக்கறேன். நான் கூடவே இருப்பேன். ஞாயித்துக்கிழமை கார்த்தால குழந்தேளை அனுப்பு. டீ.வி. பார்க்காம என்கூட வந்து உட்கார்ந்திருக்கட்டும்" என்று கட்டளையிட்டார்.

ரேவதி சரியென்று சொன்னாள்.

ராதாகிருஷ்ணனுக்கு ரேவதி சங்கரய்யரோடு தனியே பேசியது பிடிக்கவில்லை.

ஓர் ஆணின் அகங்காரம் அதிகம் வெளிப்படும் இடம் பெண்ணின் முன்னிலைதான். இன்னும் குறிப்பாக மனைவியின் முகத்துக்கு எதிரேதான் ஆணின் அகங்காரம் பிரம்மாண்டமாக வெளிப்படுகிறது. என்னை யாருன்னு நினைச்சுண்டிருக்கே, என்ற மார்தட்டுதல் பல முறை மனைவியிடமே ஆண்கள் செய்கிறார்கள். மற்றவரிடம் எகிற முடியாத தாபத்தையெல்லாம் அப்பாவியான மனைவியின் முன்னே செய்கிறார்கள். அகங்காரப்பட்டு... அகங்காரப்பட்டு தோல்வியடைந்த ஆண்களே சமயம் நேரும்போது இந்த மனைவிமார்களைக் கடுமையாகக் குத்திக் காட்டுகிறார்கள். "என்னை அகங்காரப்பட்டு வதைத்தாயே நீ என்ன கிழித்தாய்?" என்று ஏளனம் செய்கிறார்கள். குடும்ப வாழ்வில் விரிசல் அகங்காரத்தினால்தான் ஏற்படுகின்றன. மரணம் என்ற மகத்தான விஷயம் எல்லோர் தலையிலும் உட்கார்ந்திருக்கும் பொழுது இந்த அகங்காரம் அர்த்தமற்றிருக்கிறது.

ஆனால், எந்த மனிதனுக்கும் தலையில் உட்கார்ந்திருக்கின்ற மரணம் பற்றி நினைவே இருப்பதில்லை. அதனால்தான் சகலமும் தெரிந்தவன், மிகுந்த வல்லமை உடையவன் என்கிற முறைப்பு இடையறாது தோன்றிக் கொண்டே இருக்கிறது. வலி என்பது மரணத்தின் சாயல். உடல் வலியோ, மன வலியோ ஏற்படுகிறபொழுது மரணம் நினைவு படுத்தப்படுகிறது. அப்போது அகங்காரம் என்பது மெல்ல மெல்ல குறைந்து, வலியுனுடைய விகிதாச்சாரத்திற்கேற்ப

சுடைசிப் புள்ளிவரை தேய்ந்து அமர்ந்திருக்கறது. வலி மறைந்ததும் அகங்காரம் மீண்டும் தலையெடுக்கிறது. இப்படியொரு விஷயம் உள்ளே நடைபெறுகிறது என்பதே மனிதர்களில் முக்கால்வாசிப் பேருக்குத் தெரியாது. தெரிந்தவர்களும் இதை எப்படி அடக்குவது என்று தெரியாமல் விழிக்கிறார்கள். அகங்காரம் நீக்குவதற்குண்டான உபாயம் சத்சங்கம். நல்லவர்களின் நட்பு, நல்லவர்களின் நட்பால் ஏற்படும் ஞானம். அந்த ஞானத்தின் உதவியால் ஏற்படும் விசாரம். தன்னை விசாரித்து யார் என்று அறிந்து கொள்வதால் உண்டான தெளிவு. அதனாலேயே அகந்தையை அழிக்க முடியும் என்பதை, திரும்பத் திரும்ப பல பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

ஆனால் உலகம் உண்மையான உபதேசங்களைக் கண்டுகொள்வதே இல்லை. காது கொடுத்து எதையும் கேட்பதில்லை. கண் திறந்து எதையும் பார்ப்பதில்லை. தனக்குள் ஓர் உலகத்தை உருவாக்கிக் கொண்டு அதற்குள் தன் அகங்காரத்தைப் படரவிடுகிறார்கள். அந்த உள் உலகத்தில் இருக்கின்ற ஆத்திரமும் அகுயையுமே வெளியே மற்றவர்கள் மீது விதம் விதமாகப் படர்கின்றன. இடையறாத இம்சை நடைபெறுகிறது.

ராதாகிருஷ்ணனுக்குள் இனம் தெரியாத வன்மம் கிளர்ந்தெழுந்தது. எங்கே பாய்வது என்று தெரியாமல் உள்ளுக்குள்ளேயே அலைந்தது. அவர் அதை மனைவியின் மீது பாய விட்டார். ராதாகிருஷ்ணன் தந்திரமானவர். உடனடியாக அந்த வன்மத்தை வெளிப்படுத்தாமல் சங்கரய்யரைச் சந்தித்து ஆறு மணி நேரம் கழித்து, மிகத் தந்திரமாக வேறு ஒரு விஷயத்தில மனைவியைக் கண்டிப்பதுபோல், கோபத்தைக் காட்டினார்.

ஐந்தரை மணிக்கு உப்புமாவைக் கொண்டு வந்து எதிரே வைத்தபோது, உற்றுப் பார்த்த ராதாகிருஷ்ணனுக்கு தன் கோபத்தை எப்படி செயல்படுத்துவது என்று தெரிந்துவிட்டது.

"என்ன இது?"

"உப்புமா," ரேவதி சாதாரணமாக பதில் சொன்னாள்.

"எதுக்கு?" என்று கேட்க, திகைத்துப் போனாள்.

"எந்தப் பைத்தியக்காரன் சாப்பிடுவான் இதை?"

உப்புமாவை பளிச்சென்று வேகமாக நகர்த்தினார். தட்டு சுழன்று உப்புமா கீழே சிந்தியது.

"ஏன்? என்னாச்சு?"

"வெறும் உப்புமாவைக்கொண்ணாந்து கொடுத்தா நான் என்ன பிச்சைக்காரனா?"

மறுபடியும் சீறினார்.

"என்னாச்சு உங்களுக்கு?"

"நான் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லு. நான் புருஷனா, பிச்சைக்காரனா?"

"நீங்க புருஷன்தான்."

அப்பாவியாக ஒரு கேள்விக்குப் பதில் சொல்வது போல ரேவதி பதில் சொல்ல, அவர் அவளை கடுகடுப்பாகப் பார்த்தார்.

அந்தப் பார்வை ரேவதிக்குப் பயத்தைக் கொடுத்தது.

"ஏன்னா... ஏன் கோச்சுக்கறேள்."

அவள் கெஞ்சினாள். அவர் வேகமாக மிஞ்சினார்.

"தொட்டுக்கறதுக்கு ஒண்ணும் இல்லாமல் வெறும் தட்டுல ஒரு உப்புமாவை போட்டு, என்னவோ தெரு நாய்க்குப் போடற மாதிரி கொண்டு வந்து வைக்கற. உனக்கு அறிவே கிடையாதா? இதுதான் சொல்லிக் கொடுத்தாளா உன் வீட்ல."

அவள் துணுக்குற்றாள்.

"கொண்டு வந்து வைச்சுட்டு தொட்டுக்கறதுக்கு சர்க்கரையா, ஊறுகாயா, குழம்பான்னு கேட்கறதுக்

காக வந்தேன். மூணுத்தையுமே எடுத்துண்டு வந்துடலாமேன்னு உள்ள போனேன். என் இவ்வளவு வேகப்படறேள்?"

"இந்த மூணும் தேவையில்லை."

"வேறு என்ன வேணும்?"

"தொட்டுக்கறதுக்கு என்ன பண்ணியிருக்க?"

"உப்புமாக்கு தொட்டுக்கறதுக்கு இது மூணுதானே?"

"கத்தரிக்காய் கொத்ஸு பண்ணக் கூடாதா?"

"இதோ இப்போ பண்ணிடறேன்."

"தேவையில்லை."

அவர் எட்டி, தள்ளிவிட தட்டைக் குப்புறக் கவிழ்த்தார். உப்புமா தரையில் பரவியது.

"புருஷன்மேல அக்கறை இல்லைடி உனக்கு. குடித்தனம் பண்றதுக்கே லாயக்கே இல்லாத போயிட்டே."

அவள் புரியாமல் விழித்தாள்.

"குடித்தனம் பண்ற பொம்மனாட்டி, புருஷனுக்கு என்ன வேணும். புள்ளைகளுக்கு என்ன வேணும்னு சதா யோசனை பண்ணிண்டு இருக்கணும். வேற எங்கயும் சிந்தனைய வைக்கப்படாது."

"நான் எங்க வைச்சேன்? உங்களைப் பத்திதான் யோசனை பண்ணிண்டிருக்கேன்."

"யோசனை பண்றவளா இருந்தா கத்தரிக்காய் கொத்ஸு முன்னமேயே வந்துருக்கும்."

"மன்னிச்சுக்கோங்கோ. இப்போ உடனே கத்தரிக்காய் கொத்ஸுக்கு ஏற்பாடு பண்றேன்."

அவள் நகர்ந்து போனாள்.

"அடிச்சு பல்லை உடைச்சுடுவேன்."

ராதாகிருஷ்ணன் கை ஓங்கினார்.

யார் மறுபடியும் அடிக்க மாட்டார்களோ, யார் சின்ன எதிர்ப்புகூட காட்ட மாட்டார்களோ, யார்

தன் வலிவு மொத்தமும் சேர்த்து தாக்குதலை வாங்கிக் கொள்கிறார்களோ, மௌனமாக ஏற்று அழுகிறார்களோ அவர்களைத்தான் மறுபடியும் தாக்குவது ஆண்களின் வழக்கம். பதிலுக்குக் கடும் எதிர்ப்பு வந்தால் அவர்கள் மன்னிப்புக் கேட்கவும், மண்டியிட்டு அழவும் தயாராக இருப்பார்கள்.

ரேவதிக்கு கண்ணிலிருந்து குபுக்கென்று நீர் பெருக்கெடுத்து ஒடி கன்னத்தில் வழிந்தது.

"என்னாச்சு உங்களுக்கு? இன்னிக்கு கார்த்தாலகூட சாதாரணமாகத்தானே இருந்தேள். அல்பமான விஷயத்துக்கு இப்படிக் கைய ஓங்கறேளே..."

"புருஷனுக்கு சோறு போடாதது அல்பமான விஷயமா?"

"உங்களுக்கு சோறு போட மாட்டேன்னு சொல்வேனா? அதுக்குத்தானே பிறந்திருக்கேன்."

"எனக்கு அப்படித் தெரியலை."

"ஏன் இப்படி நிஷ்டூரமா பேசறேள்."

"உனக்கு திமிர் ஜாஸ்தியாயிடுச்சு நாயே."

அவர் மறுபடியும் சீறினார்.

"என்ன தப்பு. சொல்லிட்டு சீறுங்கோ."

குழந்தைகள் இரண்டு பேரும் பெற்றோரின் சண்டையைப் பரிதாபமாக வேடிக்கை பார்த்தார்கள்.

"கோச்சுக்கோங்கோ. பரவாயில்லை. இப்போ என்ன, கத்தரிக்காய் கொத்ஸு பண்ணி எடுத்துண்டு வரேன். அவ்ளோதானே..."

"வேண்டாம்"

"வேறே என்ன வேணும்."

"ஒரு இழவும் வேண்டாம்."

மறுபடியும் சீற வீடு திகைத்துப் போய் அவரையே பார்த்தது.

ராதாகிருஷ்ணனுக்கு அந்தப் பார்வையை சந்திக்க முடியவில்லை. குழந்தைகள் வேதனைப்படுவது உள்ளூர வருத்தத்தை ஏற்படுத்தியது. ஆனால் வலிந்து தன் கோபத்தை முகத்தில் தேக்கி வைத்துக் கொண்டார்.

"என்ன பண்ணணும்? சொல்லுங்கோ."

"ஒரு இழவும் வேணாம்."

அவர் பளிச்சென்று எழுந்தார். சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டார்.

"நான் வெளிய போய் கொட்டிக்கறேன். இழவு எடுத்த வீடா இருக்கு" என்று மறுபடியும் சிடுசிடுத்தார்.

குழந்தைகள் பயத்தோடு அவரை பார்த்தன. ரேவதி மிரட்சியோடு அவரை எப்படி சமாதானப்படுத்துவது என்று தெரியாமல் அவரையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"நான் வேறே ஏதாவது தப்பு பண்ணிட்டேனா?" என்று திடீரென்று ஞாபகம் வந்தவளாய்க் கேட்டாள்.

"எனக்கு மரியாதை கொடுடி. அது போதும்."

"நான் எப்போ மரியாதைக் குறைவா நடந்துண்டிருக்கேன்."

"அப்பப்போ நடந்துக்கறே. எனக்கு அது பிடிக்கலை."

"என்னன்னு சொல்லுங்கோளேன்."

"புருஷனைப் பத்தி புருஷன்கிட்ட பேசு. புருஷனைப் பத்தி இன்னொருத்தன்கிட்ட குறை சொல்லாதே."

"ஐயோ... நான் அப்படிச் சொல்லவே இல்லியே."

"சொல்லியிருக்கே...."

அவள் அமைதியாக யோசனை செய்து பார்த்தாள்.

அவர் வேட்டியை உதறி மறுபடியும் கட்டிக் கொண்டு வராண்டாவிற்குப் போனார்.

பிள்ளை அம்மாவை நெருங்கினான்.

"அம்மா, நீ சங்கரன் மாமாவோட பேசறது அப்பாக்குப் பிடிக்கலை. பார்த்து பல்லைக் கடிச்சார். நான் பார்த்துட்டேன்" என்று சொல்ல ரேவதிக்கு பளிச்சென்று உள்ளுக்குள் விளக்கு எரிந்தது.

25

வராண்டாவிலிருந்து படியிறங்கிப் போகும் ராதாகிருஷ்ணனை பின்னால் ஓடிப்போய் ரேவதி தடுத்தாள்.

"சங்கரய்யரோட நான் பேசறது உங்களுக்குப் பிடிக்கலையா?"

"எவன் சொன்னான் அப்படி?"

சட்டென்று வாய் கூசாமல் ராதாகிருஷ்ணன் பொய் சொன்னார்.

"நான் அவரோட பேசறபோது பல்லைக் கடிச்சேளாமே?"

"யார் சொன்னது அப்படி?"

அவளுக்குத் தன் குழந்தையின் பெயரைச் சொல்வதற்குப் பயமாக இருந்தது. கோபம் அவன் மீது பாய்ந்துவிடுமோ என்று கலவரம் ஏற்பட்டது.

"சொல்லுங்கோ. நீங்க பேச வேண்டாம்னா, நான் பேசலை."

"அதுக்கும் உப்புமாக்கும் எந்த சம்பதமுமில்லை."

பெருங்குரலில் தெருவில் நிற்போர் திரும்பிப் பார்க்கும் வண்ணம் உரக்க ராதாகிருஷ்ணன் கர்ஜித்தார்.

அவர் பிள்ளைக்குக் கோபம் வந்தது.

"பொய் சொல்லாதே. உனக்கு போங்குதான். அம்மா வந்து சங்கரய்யரோட தனியா பேசிக்கிட்டிருக்கும்

போது, பல்லைக் கடிச்சு கை முஷ்டியை மடக்கினே. எனக்குத் தெரியும். அப்பவே நீ சண்டை போடப் போற அப்படின்னு" என்று உரக்கக் கத்தினான்.

ராதாகிருஷ்ணனுடைய கோபம் சட்டென்று திசை மாறியது. ரேவதியின் மீதுள்ள கோபம் பையன் மீது பொங்கியது.

ஒரு அடி எடுத்து வைத்து, பையனைப் பார்த்து சிம்மமாய் முறைத்தார்.

பையன் அதைப் பற்றிக் கவலைப் படவில்லை.

"உள்ளவாம்மா. அவர் எங்கேயாவது சாப்பிடட்டும்" என்று இழுக்க, ரேவதி பின்னடைய, தன் மனைவியை தன் கோபத்திலிருந்து காப்பாற்றுகிறான் தன்னுடைய பிள்ளை என்பது உறைக்க, அவர் கோபம் கொழுந்து விட்டு எரிந்தது. பையனை நோக்கி முன்னேறி பளார் என்று அறைந்தார்.

அவன் கன்னத்தைப் பொத்திக்கொண்டு "ஏம்ப்பா அடிக்கறே" என்று கத்தினான். மறுபடியும் அறைந்தார்.

"குழந்தைய தேவையில்லாத அடிக்காதீங்கோ" என்று ரேவதி உரக்கப் பேச, "என்னடி என்னை அதிகாரம் பண்றது" என்று ரேவதியின் கழுத்தைப் பிடித்து ஒரு உலுக்கு உலுக்க, அவள் அவர் கையை உதறித் தள்ள உதறிய கை சுவரில் நச்சென்று பட, விரல்களின் நுனி சுள்ளென்று வலிக்க, அந்தக் கோபம் பெரிதாகி இடது கையால் ரேவதியின் கன்னத்தில் ஓர் அறைவிட்டார்.

பையனுக்கு என்ன செய்ய வேண்டுமென்று தெரியவில்லை.

அம்மாவைக் காப்பாற்ற அப்பாவின் பாய்ந்தான்.

இது விஷக்கடி வேளை. என்ன செய்ய வேண்டுமென்று யாருக்கும் தெரியாமல் எல்லோரையும் எல்லோரும் மிதித்த வேளை.

இடது கன்னத்தில் அறை வாங்கிய ரேவதி அப்படியே இடிந்து போய் தரையில் உட்கார்ந்தாள். பிள்ளையும், பெண்ணும் அவளைப் பாய்ந்து பிடித்துக் கொண்டார்கள். பயத்தில் அழுதார்கள்.

ராதாகிருஷ்ணன் படியிறங்கி, கதவை தடாரென்று சார்த்திக் கொண்டு போனார்.

உலகத்தில் மிக அசிங்கமான நேரம் எதுவெனில், வன்முறைக்குப் பிறகு ஏற்படுகின்ற அமைதி என்று எளிதாகச் சொல்லலாம். வன்முறையின் மீது விருப்பமுள்ளவர்கள் கூட, இந்த வன்முறைக்குப் பிறகு எழும் ஒரு கனத்தையும் விரும்பாமல் இருக்கிறார்கள். உரக்கக் கத்துதலும் ஓங்கி வந்து தாக்குதலும் வெகு எளிதாகச் செய்ய முடிகிறது. ஆனால், செய்வது சரியா என்று மனம் கேள்வி கேட்கையில் எவரும் அதை முழுமையாக தான் செய்வதே சரி என்று ஏற்றுக் கொள்ளத் தில்லை. கடின சித்தம் உடையவர்கள், குரூர மனம் பான்மை உள்ளவர்கள், அப்படி ஏற்றுக் கொண்டாலும் சற்று நொய்மையான மனம் உடையவர்களுக்கு இது மிக வேதனையான காலமாகப் போய்விடுகிறது.

ஏன்டா இப்படிச் செய்தோம் என்று கழிவிரக்கம் ஏற்படுகிறது. இதைச் செய்வதற்கு முன்பு இருந்த காலம் நன்றாக இருந்ததே, அந்த நேரத்திலே இந்த எண்ணம் தோன்றுகிறபோது இதை அடக்கி வைத்திருக்கலாமே, தேவையற்ற இதை அனுமதித்து விட்டோமே, இந்த வன்முறையை வளர்த்துவிட்டோமே என்ற வேதனை எழுவதுண்டு.

ராதாகிருஷ்ணனுக்கும் அவருடைய நொய்மையான மனத்தின் காரணமாக இந்த வேதனை எழுந்தது.

ரேவதி எவ்வளவு நல்லவள் என்கிற சொற்றொடர் அவர் மனத்திற்குள் பின்னிப் பின்னி எழுந்தது.

பையன் கொஞ்சம் அதிகப் பிரசங்கி. அந்தப் பையன் எப்படிக் கை ஓங்கிண்டு வரான் பாரேன் என்று இன்னொரு சொல் எழுந்தது.

இல்லை, அவன் அம்மாவைக் காப்பாற்ற வந்தான். எல்லா பிள்ளைகளும் செய்கின்ற சாதாரண ஒரு விஷயம். நாம்தான் அதை மீறிவிட்டோம். நாம்தான் தேவையில்லாமல் வன்முறையைப் பிரயோகித்து விட்டோம் என்று மனசு புலம்பத் துவங்கியது.

அப்படித்தான்... அப்படித்தான்... ஒரு சமயம் போனாப் போறது அடக்கித்தான் வைக்கணும். அடிக்கத் தான் செய்யணும். பின்னை எதினா ரெண்டு தட்டத்தான் செய்யணும். இல்லைன்னா தலைக்கு மேல உட்கார்ந்துருவா.

என் வீட்டா? என் மனைவியா? அப்படி செய்வானா, என்ன அபத்தம் இது. என் முரட்டுத்தனத்தை நான் எப்படி நியாயப்படுத்துகிறேன். உண்மையாக என்னுடைய கோபம் என்ன?

சங்கரய்யரிடம் அவன் பேசியதுதானே. அதைப் பிள்ளை கண்டுபிடித்து விட்டிருக்கிறான். ஏதோ ஒரு கோணத்தில் பார்த்து விட்டிருக்கிறான். அவன் பார்த்து விட்டானே என்கிற பயமும் பதற்றமும்தான் இந்த வன்முறையின் ஆரம்பத்திற்குக் காரணம். மனதில் இருப்பதைக் கண்டுபிடித்து விட்டானே என்கிற வெறுப்புதான் காரணம்.

பசித்தது. பசி அதிகமாக அதிகமாக கோபத்தின் வேகம் குறைந்து இப்பொழுது என்ன செய்வது என்ற எண்ணம் வந்தது.

பாக்கெட்டில் கைவிட்டுப் பார்க்கும் போது காசு கொண்டு வரவில்லை என்று உறைத்தது.

கடவுளே மறுபடி போய் காசு எடுத்துக்கொண்டு வரலாமா, போனால் சரியாகுமா? என்ற எண்ணம் வந்தது.

ரேவதி மறுபடியும் அழுவாள்.

இப்போ ஏன் போறேள். இப்படவே ஏதாவது பண்ணித் தரேன் என்று காலைப் பிடித்துக் கெஞ்சுவாள்.

வேண்டாம்- சற்று நேரம் எல்லோருமே அமைதியாக இருக்கலாம். ஆனால் ஏதாவது சாப்பிட வேண்டும். வெகு நேரம் பசியைத் தாங்க முடியாது.

இந்தத் தெருமுனையில் ஹோட்டல் அசோக் பவன் இருக்கிறது. அந்த முதலாளியைப் பல நாட்களாகத் தெரியும். காசு இல்லை என்றால் ஒன்றும் சொல்லமாட்டார். கல்லாப் பெட்டியில உட்கார்ந்திருந்த ஆளிடம் சொல்லிவிட்டுப் போகலாம்.

கல்லாப் பெட்டியில யார் இருப்பான், முருகானந்தமா இல்லை, சேகரா, யார் இருந்தாலும் உள்ளே விட்டு விடுவார்கள். அதனால என்ன ஸார் என்று சொல்வார்கள். இதுமாதிரி இரண்டு மூன்று முறை நடந்திருக்கிறது. மறுநாள் கொண்டு வந்து காசை நீட்டும்போது 'ரொம்ப அவசியமா ஸார் இது. நம்ம கடையில ஒருநாள் காசு கொடுக்காம சாப்பிட்டா தப்பாயிடுமோ' என்று சொல்லிக் கொண்டே காசை வாங்கிக் கொள்வார்கள்.

ராதாகிருஷ்ணன் ஹோட்டலுக்குள் ஏறினார். அங்கே முருகானந்தமும் இல்லை, சேகரும் இல்லை.

சொல்லிவிட்டுப் போகலாமா சாப்பிட்டுவிட்டுச் சொல்லலாமா, இந்த வயோதிகனைப் பார்த்தால் தெரிந்த முகமாகத் தெரியவில்லை.

அவர் மெல்ல கல்லாவுக்கு அருகே போனார்.

"என் பேர் ராதாகிருஷ்ணன். இந்தத் தெருவுல இருக்கேன்."

"என்ன அதுக்கு?"

முதியவர் வேகமாகக் கேட்க, மேற்கொண்டு என்ன பேசுவது என்று தெரியவில்லை.

"காசு எடுத்துண்டு வர மறந்துட்டேன். சாப்பிட்டுப் போகலாமா?"

சட்டென்று அந்த முதியவர் ராதாகிருஷ்ணனை உறுத்துப் பார்த்தார்.

"கூடாது. காசு இருந்தாத்தான சாப்பிடலாம்" என்று சொல்ல ராதாகிருஷ்ணனுக்கு ஒன்றும் புரியவில்லை.

சரி ஏதோ ஒரு முட்டாள் உட்கார்ந்திருக்கிறான். உள்ளே யார் இருக்கிறார்கள், எட்டிப் பார்க்க எவரும் சட்டென்று கண்ணுக்குத் தென்படவில்லை.

"ஸார் நகருங்க கஸ்டமர்ஸ் வர நேரம்" என்று அந்தப் பெரியவர் அதட்ட, என்ன செய்வதென்று தெரியாமல் அவர் ஹோட்டலைவிட்டுக் கீழிறங்கினார்.

உள்ளிருந்து ராதாகிருஷ்ணன் என்று குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தார்.

நாலு டேபிள் தள்ளி சங்கரய்யர் மட்டும் தனியாக உட்கார்ந்திருந்தார். அவரே கை தூக்கி உள்ளே வாருங்கள் என்று கூப்பிட ராதாகிருஷ்ணனுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை.

சங்கரய்யரைப் பார்த்ததும் உள்ளே ஒரு பயம் கலந்த மரியாதை ஏற்பட்டது. அவர் உற்றுப்பார்த்த பார்வை, உள்ளுக்குள்ளே ஊடுருவிப் போயிற்று. மெலிதாய் ஒரு நடுக்கம், பதற்றம் ஏற்பட்டது. சட்டென்று விலகிப் போய் விடலாமா என்று கால்கள் பரபரத்தன. ஆனால் அது மரியாதை இல்லை என்பதாய் நினைத்துக் கொண்டு மெல்ல சங்கரய்யரை நோக்கி ராதாகிருஷ்ணன் நடந்தார்.

"டிபன் சாப்பிட்டேளா?" என்று வெகுநாள் பழகியவர் போல் நட்பாக சங்கரய்யர் கேட்டார்.

"வேண்டாம்- இல்லை- அதுக்குத்தான்.. வந்தேன்.. நீங்க- சாப்பிடு- நீங்க சாப்பிட்டுட்டேளா" என்று நாலைந்து

வாக்கியங்களை ஒன்றன்பின் ஒன்றாக முறையற்று ராதாகிருஷ்ணன் வெளிப்படுத்தினார்.

"உட்காருங்கய்யா."

சங்கரய்யர் சொல்ல, அவர் எதிரே சட்டென்று உட்கார்ந்தார்.

ஆறு நாற்காலிகள் போடப்பட்டிருந்த பெரிய மேஜையில் யாருமில்லை. ஆனால் மற்ற மேஜைகளில் ஆட்கள் இருந்தார்கள். சங்கரய்யர் எதிரே ராதாகிருஷ்ணன் உட்கார்ந்ததும் எல்லோரும் சொல்லி வைத்தது போல் திரும்பிப் பார்த்தார்கள்.

சங்கரய்யர் உட்கார்ந்திருக்க மேஜையில் அவருக்கு இணையாக எவரும் உட்காரவில்லை என்பது சட்டென்று ராதாகிருஷ்ணனுக்கு உறைத்து எழுந்திருக்க முயற்சி செய்தபோது 'வேண்டாம் உட்காரும்' என்று சொன்னார்.

ராதாகிருஷ்ணன் அசையாது அவரையே பார்த்துக் கொண்டிருந்தார்.

"மூணு இட்லி, மிளகாய்ப் பொடி, ஒரு தோசை சொல்லட்டுமா?"

"சரி சொல்லுங்கோ. நீங்க ஹோட்டல்ல சாப்பிடு வேளா"

"ஏன் நான் சாப்பிட மாட்டேன்னு யாராவது சொன்னாளா?"

"இல்லை, பூஜை, புனஸ்காரமெல்லாம் பண்றேள்."

"அதனால கேட்கறீரா. போன வருஷம் வரைக்கும் நான் ஆபீஸுக்கு போயிண்டிருந்தவன்தானே. அதாரம்னு ஒரு விஷயம் எங்கிட்ட இல்லை. எங்கிட்ட இருக்கிறதெல்லாம் வெறும் பக்திதான். நான் இன்னா

விதமா இருக்கணும்னு என்னைக் கட்டுப்படுத்திக் கவே இல்லை. எல்லாவிதமாகவும் இருக்கேன். நான் இப்படி ஆகணும்னு நிர்மாணம் பண்ணிட்டா, அது மாதிரியே இருக்கறதுக்கு பல சமயங்கள்ல ரொம்பக் கடுமையாக முயற்சி பண்ண வேண்டியிருக்கு. உதாரணமா நான் ஆம்பளைன்னு நினைச்சுண்டேன்னு வச்சுக்கோங்கோ. நான் அழக்கூடாது அப்படின்னு ஒரு விதி வந்துடறது. அழாத இருக்க முடியுமோ? மனுஷனா பிறந்தவா ஏதோ ஒரு காலகட்டத்துல அழுதுதான் ஆகணும். ஆம்பளைங்கற கம்பீரம் அப்போ அடிபட்டுப் போயிடும். எப்போதாவது தோணித்துன்னா ஹோட்டலுக்கு வந்து சாப்பிடுவேன். சாப்பிடக் கூடாது அப்படின்னு ஒரு கண்டிஷன் நான் வச்சுக்கலை. அந்த மாதிரி நியதிகள் பல சமயம் பலருக்குக் கர்வத்தைக் கொடுத்துடறது. நான் யார் தெரியுமா? குடுமி வச்சுண்டு பூணூல் போட்டுண்டு, விபூதி பட்டை இட்டுண்டு உருண்டு இருக்கறவன்னு தனக்குத்தானே ஏதோ ஒரு கற்பிதம் வந்துடறது. நூல்களோட ஜனங்களா இருக்கறதுக்கு முடியாமபோறது. ஜனங்களுக்கு நடுவுல இருக்கலைன்னா, ஜனங்களைப் புரிந்துகொள்ளாத ஒரு வாழ்க்கை இருக்கிறதென்றால் அது வீண். நாம என்னமோ சொல்லிண்டிருப்போம். அவன் ஏதோ கேட்டுண்டிருப்பான். நமக்கும் அவனுக்கும் எந்த உறவும் இல்லாமல் இருக்கும். சர்வ சாதாரணமா எல்லாரோடயும் உட்கார்ந்து பேசிப் பழகறபோது அவனையும் புரிஞ்சுக்க முடியறது. அவன் மூலம் என்னையும் புரிஞ்சுக்க முடியறது."

"அப்படியா?" என்று பொதுவாக ஒரு வார்த்தையை ராதாகிருஷ்ணன் உதிர்த்தார்.

சங்கரய்யர் அவரைக் கர்மமாகப் பார்த்தார்.

26

ராதாகிருஷ்ணன் எதிரே உட்கார்ந்திருந்த சங்கரய்யர் மெல்ல உதடு பிரித்து பேச ஆரம்பித்தார். ராதாகிருஷ்ணன் கூர்மையானார்

"உங்களுக்குப் புரியலையா? இன்னிக்குக் காத்தால ஒருத்தன் வந்தான். மத்திம வயசு. முரடா உழைப்பாளியா கண்ணுக்குத் தெரிஞ்சான். சாமி நான் ஹார்பர்ல வேலை செய்யறேன். அப்பப்போ ஏதாவது திருடிட்டு வந்துடுவேன். போலீஸ்காரங்க மடக்காம இருக்கறதுக்கு அவங்களுக்கும் எதுனா துட்டு கொடுத்துருவேன். திடீர்னு இதெல்லாம் வேணாம்னு அப்படின்னு தோணுது. ஒரு மனசு, 'வேற உனக்கு என்ன தெரியும். திருடு' ன்னு சொல்லுது. என்னைக் காப்பாத்துங்க. எந்த வழி போகணும்னு சொல்லுங்க அப்படின்றான். அவனைத் திருடுன்னு சொல்ல முடியுமோ, திருடாதேன்னு சொல்லணும். திருடாதேன்னு கதை சரியான காரண, காரியங்களை வைச்சு சொல்லணும். ஏன் திருடறான். அப்படின்னு அவன் யோசிக்கப் பார்க்கும்போது நான் ஏன் திருடலை அப்படின்னு யோசனை பண்ணிப் பார்த்தேன். எனக்குப் போறும். ரெண்டு இட்லி, ஒரு தோசை, ஒரு கப் காபி போதும். இந்த வேட்டி, இந்த இடுப்புத் துண்டு, உள்ளுக்குள்ள ஒரு அண்டர்வேர் போதும். சாதாரண டைடான் வாட்ச் போதும். கழுத்துல ரெண்டு துளசி மாலை போதும். ஆனால் பந்தா ஆசாமிக்கு நிறைய வேண்டியிருக்கு. விதம் விதமா வேண்டியிருக்கு. ஆக தனக்குப் போதும் அப்படின்னு நான் நினைச்சதால திருடலை. போறாது இன்னும் வேணும்னு அவன் நினைச்சதாலே திருடறான் எனக்கு இந்த எண்ணம் போதும் என்ற எண்ணம் ஏன் ஏற்பட்டது?

இரண்டு இட்லி ஒரு தோசைக்கு மேல கொள்ளாது எங்கிட்ட காசு இருக்கு. அப்படின்னு காட்ட வேணும்னா இன்னொரு தோசை நிக்கலாம். பூரி மசால் விழுங்கலாம். அதுக்குப் பிறகு ரொம்பத் திருப்தியாகறது. திருப்தியாறது மனசா, காட்டியா, காட்டுபால் மனசா அப்படின்னு எனக்கு யோசிக்க யாரோ கத்துக் கொடுத்துட்டான்.

'யார் கத்துக் கொடுத்தா?'

"எங்கப்பா அப்பாவோட அதிகமா எனக்குக் கத்து கொடுத்தது எங்கம்மா. அம்மாவை விட மும் அதிகமாக கத்துக் கொடுத்தது பல பெரியவர்கள். நல்ல புத்தகங்கள். எனக்கு ஒரு நல்ல குழல் கிடைச்சது அவனுக்குக் கிடைக்கலை. ஆனாலும் எதனாலோ தாக்குப் பிடிச்சு எங்கிட்ட வந்து தொடர்ந்து நிறுத்த முடியலை. நிறுத்தணும்னு ஒரு மனசு சொல்றது. வேண்டாம்னு ஒண்ணு சொல்றது. நான் என்ன பண்ணட்டும்னு பணிவாக வந்து கேட்கறான். அதுவே பெரிய மாற்றம்.

'நல்லவேளை, வந்துட்டியப்பா' அப்படின்னு ஆரம்பிச்சேன். அவனுக்கு நான் ஏதாவது பதில் சொல்லணுமோன்னோ. அடுத்த நடவை நிறுத்தினால் ரொம்ப நிச்சயமா மாட்டிப்ப. வேற எவனோ செஞ்ச திருட்டெல்லாம் கூட உன் தலையில வந்து விழுந்திருக்கும். உனக்குக் கடுமையான தண்டனையும் அடிதடிகளையும் ஏற்பட்டிருக்கும். நல்ல வேளையா வந்துட்ட, வேண்டாம்ப்பா விட்டுடுன்னு சொல்லலாம் நினைச்சுப் போய் என்னையே பார்த்துண்டிருந்தான்.

நான் அடிதடிக்குப் பயப்படலை சாமி அப்படின்னான். இல்லை, இல்லை இந்தத் தடவை அடிதடி தாண்டி, இன்னும் மோசமான விளைவுகளுக்கு தூண்டி விடுவ. ஆட்களை உனக்காகத் தயார் பண்ணிண்டிருக்கா. வேணா மெல்ல விசாரிக்கப் பார்த்து டு. மத்தியானமா வாயேன் அப்படின்னேன். பரபரன்னு எழுந்து போனான். நான் என்னமோ மனசை தோண்

னதைச் சொல்லி டேன். அது அங்க போனா பலிக்க
ணுமே, எவனும் ஒண்ணும் பண்ண முடியாதுன்னு
வரப் போறானே அப்படின்னு ஒரு பயம் இருந்தது
என்று சொல்லிவிட்டு ஒரு கணம் பேச்சை நிறுத்தி
னார்..ராதாகிருஷ்ணன் வியர்வு மேலோங்க உட்கார்ந்
திருந்தார்.

"ஒரே மணி நேரத்துல திரும்பி வந்தான். தடேர்னு
விழுந்தான். என்னடா ஆச்சு, ஏதாவது பயந்துட்டி
யான்னேன். இல்லை, நீங்க சொன்னது கரெக்ட்
என்னை வந்து வெட்டிக் கூறுபோடறதுக்குப் பத்துப்
பேர் கத்தியைத் தீட்டிண்டு அலையறான். இரண்டு
மூணு தடவைக் கேட்டுட்டான். நான் இல்லைன்னு
தெரிஞ்சவுடனே வேற இடத்துலே போய்க் கேட்டிருக்
கான். இப்போ போய்க் கேக்கற போதுதான் நீ இன
ணும் உயிரோட இருக்கியா சாகலையா அப்படின்ன
பல பேர் கேட்டாங்க.

'நீ என்னன்னு கேட்ட'

'என்னை அடிக்கறதுக்கு எவனாவது இருக்கா
னான்னு கேட்டேன்'

'யாரைக் கேட்டே?'

'எனக்குத் தெரிஞ்சவங்களைக் கேட்டேன்.'

'அவன் என்ன சொல்றான்?'

'ஆமா ஆமா ஒரு நாலஞ்சு பேர் சுத்திட்டு இருக்
காங்கன்னு சொன்னான்.'

'வேற யார் என்ன சொன்னா?'

'அவன் சொன்னதைக் கேட்டுக்கிட்டிருந்த இன்
னொருத்தனும் சொன்னான்.'

'அவங்க உனக்கு நண்பா பகையா?'

'சில சமயம் நண்பு. சில சமயம் பகை.'

'அவங்க உன் மேல பிரியமா, பொறாமையா?'

'யாருக்கு என் மேல பிரியம், எல்லாருக்கும் என்
மேல பொறாமைதான்.'

"எனக்குப் புரிஞ்சுடுத்து. அவனுக்குப் புரியலை.
அவன் நிருபி சம்பாதிக்கறதைப் பொறாமைப்பட்
டான், அவன் நிருபி நிறுத்தறதுக்கு அவனை அவ
னைப் பயமுறுத்தறதுக்கு அவனைக் கொல்லப்
போறதா சொல்லியிருக்கா அது உண்மையோ,
பொய்யோ. ஆனால் இவன் போய் என்னை யாராவது
கொல்வானான்னு கேட்டா ஆமா கொல்லப்
போறான்னு சொல்லியிருக்கான.

"என் கொல்லக்கூடிய அளவுக்கு உணர்ச்சி தொந்த
ரவுகள் அவன் இதுக்கு முன்னாடி பண்ணியிருக்கான
நான் சொன்னது பலித்துவிடுத்து.

'வேற வேலை செய்யுமிடத்துலே முடியாதே
சாமி, கை துறுதுறுன்னு இருக்குமே, டக்குன்னு புத்தி
பிளான் போடுமே, இந்தப் பெண்டுலை எப்படி எடுத்து
விட்டு போறதுன்னு அரிக்குமே என்ன செய்யறதுன்னு
கேட்டான்.

"வேற இடத்துக்கு போயிடேம்பா அப்படின்னேன்.
மறுபடியும் ஹார்பருக்குப் போகச் சொல்றியா அப்ப
டின்னான். அவன் மறுபடியும் 'ஹார்பருக்குத்தான்'
போவான். அந்த வேலைதான தெரியும் அப்படின்னு
தோணித்து. என் ஹார்பருக்குப் போகணும்
திருவண்ணாமலைக்குப் போ. வேறமனே மனைவைச்
சுத்திண்டிரு. ஏதோ ஒரு நேரம் உன்னுடைய கவனம்
புரண்டு உன் புத்தி மாறி நீ வேற ஆளா வருவேன்னு
சொன்னேன்.

'அவன் நல்ல வேளை என் பேச்சைக் கேட்டான்.
திருவண்ணாமலைக்குப் போனான். அங்க யாரைப்
பார்த்தானோ, என்ன நடந்ததோ தெரியலை முதல்ல
முடியை எடுத்தான். அப்புறம் சட்டையை எடுத்த
வினான். அப்புறம் கோட்டை அவிழ்த்துப் போட்டி
வெறும் கோமணம் தானா நிற்கான். நாலு வருஷம்

பிச்சை எடுத்துத்தான் சாப்பாடு. யார்கூடயும் எந்நே பேச்சும் இடையாது. திருவண்ணாமலை கார்த்திகை தீபத்துக்கும் போனேன். எதிரே வந்து நின்னான். அடையாளமே தெரியலை.

"சதாசிவம் சதாசிவம்ன்னு' சொன்னான். உள்ள எங்கயோ பொறிதட்டித்து. அடடே ஹார்பர் ஆன் இல்லையா நீன்னு கேட்டேன். ஆமா ஹார்பர் ஆஞ தான். படகு. கரை சேர்ந்துடுச்சுன்னான். எவ்வளவு அர்த்தம் அதுல. முகத்துல என்ன தெளிவு. ரத்தக் சுருக்கமாக நாலு வார்த்தை பேசறான். ஒவ்வாரு வார்த்தையும் பெருசு பெருசா அர்த்தம் தரும்.

'பொல்லாப்பு சாமியை உங்களுக்குத் தெரியுமான்னு கேக்கறாங்க. என்ன இது பொல்லாப்பு அப்படின்னு கேட்டேன். ஒரு பொல்லாப்புமில்ல அப்படிங்கறதை திரும்பத் திரும்ப சொல்வாங்க. அதுதான வேதமந்திரமாம். அதுதான் வாழ்க்கையாம். அந்த வார்த்தையை இரண்டு நாள் முழுக்க முழுக்க மனசு போட்டு யோசனை பண்ணிண்டிருந்தேன். என்னென்னமோ சொல்றது அது. ஒரு பொல்லாப்புமில்லை. உங்களுக்குப் புரியுதா ராதாகிருஷ்ணன். ஒரு பொல்லாப்புமில்லை. எவரோடும் எது குறித்தும் எந்த நேரமும் ஒரு பொல்லாப்புமில்லை. அப்படி இருக்க முடியுமா ராதாகிருஷ்ணன். ஹார்பர் திருடன் அப்படி இருக்கான். அதை இடைவிடாத சொல்றான். எவ்வளவு நன்னாயிருக்கு.

"நான் ஒண்ணும் பண்ணலையய்யா. சும்மா திருவண்ணாமலை போன்னு சொன்னேன். இவன் இப்படி மாறுவான்னு நினைச்சு சொல்லலை" நீண்ட பேச்சை புன்முறுவலோடு முடித்தார்.

"இப்படி இருக்க முடியுமா" ஹார்பர் ரௌடி திருடன். கள்ளச் சாராய வியாபாரி. பல தடவை ஜெயிலுக்குப் போனவன் எப்படி மாறிட்டான்?

"ஒலோன்ல ஒரு சித்த புருஷர் இருந்தார். அவருடைய வார்த்தை இது அங்க பிடிச்சுண்டான். எப்படிப் பிடிச்சுண்டான், என்ன புரிஞ்சுது. அடட மொத்த வாழ்க்கையும் மாறிடுத்து. அவனை யாரோ எத்தனையோ விதமா திருத்தப் பார்த்தா ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர், ஒரு வக்கீல், ஒரு மடத்து ஆள் எல்லாரும் அவங்கிட்ட பேசி மாத்தப் பார்த்தாங்க. நடக்கலை. முகத்துல கரியைப் பூசி போயிட்டான். நான் சொன்னவுடனே மாறிடுத்து. இது என்னுடைய பலமா, இல்லை அவனுடைய விதியா. அந்த ஆராய்ச்சியை நான் பண்றது இல்லை' என்றவர் கனிவாகப் பார்த்தார்.

"ராதாகிருஷ்ணன், இந்தப் பக்கத்து வாழ்க்கை உங்களுக்கு முடிஞ்சு போச்சு. நீங்க தெற்கு போலியோ. உங்களுடைய ஆயுள் வாழ்க்கை முடிஞ்சு போச்சு. வேறே என்ன உத்தியோகம் பார்க்கலாம்னு யோசனை பண்ணுங்கோ, உங்க குடும்ப வாழ்க்கை வேற நினைக்குத் திரும்பிடுத்து. அந்தத் திசையில நடக்கறதுக்குப் பயிற்சி எடுத்துக்கோங்கோ. உங்க மனைவி ரேவதி மகாலட்சுமி, ரொம்ப பெரிய மனசு உங்க மேல அத்தனை அன்பு. எங்க வீட்டுக்காரர் ஒரு குழந்தை அவரைக் கடுமையாகக் கோவிச்சுக்க வேண்டாம்னு சொன்னார். எனக்குக் கண்ல ஜலம் வந்துடுத்து. புரு ஷனைக் குழந்தைன்னு சொல்ற பொம்மனாட்டின ரொம்பக் குறைவு. புருஷனை, குரங்கு பிசாசு, சனியன் அப்படின்னு நிறையப் பேர் சொல்லிண்டிருக்கா. தலையைக் கொடுத்து, கழுத்தை நீட்டிடோமேன்னு தான் பல பேர் வருத்தப்பட்டுண்டிருக்கா. அது எனக்கு இன்னொரு குழந்தை அப்படின்னு சொல்ற ஒரு மனைவி இருக்காளே, பெரிய கொடுப்பினை அது.

"ரேவதியைக் கண்கலங்காம வைச்சுக்கோங்க. அம்மாவோட இதமா பேசுங்கோ. உங்களுக்கும் ரேவதிக்கும் நான் மந்திர ஜபம் சொல்லித்தரேன். மந்திரத்தால

மனசை நெறிப்படுத்தறது ஒரு தனி வழி. உங்களுக்கு அது நல்லா வரும். ஆரம்பத்துல கூர்மையா, விடாப் பிடியா, வைராக்கியமா ஈடுபாடு ஒரு பக்குவத்துக்கு வந்துடோம்னா, கொடுக்கு நேரத்துல மனசு ஒண்ணா குவிய ஆரம்பிச்சுடும். குவிஞ்ச நேரத்துல மந்திரஜபம் சொன்னா எதை வேண்டிச் செய்யறோமோ, அது நிச்சயமா நடக்கும்.

"மெட்ராஸ் தெற்கே போயிண்டிருக்குய்யா. வட கோடியில உட்கார்ந்துண்டு எதுக்கு சிரமப்பட்டுண்டிருக்கீர். இந்த மெட்ராஸ் நூறு வருஷத்துக்கு முன்னாடி மயிலாப்பூர்னு வளர்ந்தது. அம்பது வருஷத்துக்கு முன்னாடி அடையார்னு பெருசாச்சு. இப்போ இன்னும் தெற்கே நகர்ந்துண்டிருக்கு. நங்கநல்லூர் தாம்பரமெல்லாம் தாண்டி இன்னும் தென் திசையில வீடுகள் வர ஆரம்பிச்சுடுத்து. இப்பவே இந்த இடத்துக்குப் போங்கோ. இருவது வருஷத்துல அந்த இடங்களெல்லாம் பிரமாதமா வந்துடும். குழந்தேளுக்கு அது ரொம்ப வசதியா இருக்கும். உன் பில்டிங் ஓனர் கொடுக்கற காசுல நிலத்தை வாங்கி, அங்க வீடு கட்டி தனிமையான ஒரு குழ்நிலையில தோட்டம் போட்டு செடி வளர்த்து அங்க இருக்கற சாதாரண கிராமத்து ஜனங்களோட பேசி, உன்னையும் பக்குவப்படுத்திண்டு அவாளையும் பக்குவப்படுத்தினேன்னு வைச்சுக்கோ, இங்க, இந்த சிட்டியில இருக்கறவன் உன்னைத் தேடிண்டு ஓடி வருவான். இந்தச் சந்துல இருந்து இனிமே வாழ்க்கை நடத்த வேண்டிய அவசியம் உனக்கு இல்லை. நான் சொல்றதைக் கேள். கிளம்பி போ. என்ன சாப்பிடறே, ஜாங்கிரி, மைசூர் போண்டா, ஒரு மசால் தோசை சொல்லட்டுமா. தம்பி டிகிரி காப்பி வேணும். எனக்கு எப்படி கொடுப்பியோ அதே மாதிரி இவருக்கும் நல்ல காப்பி கொடு."

சட்டென்று சங்கரய்யர் முடித்துக் கொண்டார்.

ராதாகிருஷ்ணனின் கண்களிலிருந்து மெல்ல கண்ணீர் வந்தது. உடனே ரேவதியைப் பார்த்து அணைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஆசை வந்தது.

அவர் நிதானமாகச் சாய்ந்து கொண்டார்.

சங்கரய்யர் பில்லுக்கு பணம் கொடுத்துவிட்டு ராதாகிருஷ்ணனுக்கு காப்பி வரும்போது விடைபெற்று எழுந்து போனார்.

யாரோ அருகே வந்து கரம் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டார்கள்.

என்ன என்று நிகைத்தபோது, "சங்கரய்யரே உட்கார வைச்சு, காப்பி வாங்கித் தராரா, நீங்க பெரியாளாத்தான் இருக்கணும். அதனால தொட்டுக் கும்பிட்டேன். வரேங்க."

பதிலுக்கு எதிர்பார்க்காமல் வெளியே போனார்.

பசித்த வயிறு உணவால் அடங்கியது மனம் மெல்ல அமைதியாயிற்று.

எங்கே போவது?

அவர் காளிகாம்பாள் கோவிலுக்குள் நுழைந்து சன்னதியில் அம்பாளை தரிசனம் செய்து, பிறகு மெல்ல வந்து உற்சவமூர்த்தி எதிரே உட்கார்ந்து கொண்டார். தூணில் சாய்ந்து கொண்டார்.

தெற்கே குடிபெயர்வது சரி, என்ன வேலை? என்ன வேலை? ஜனங்களுக்கு நல்லது சொல்கிற வேலை யென்றால் காசு வருமா? இவன் எவ்வளவு காசு கொடுப்பான்?

மனம் மறுபடியும் வாழ்க்கைக் கணக்கை வேகமாகப் போட ஆரம்பித்தது.

27

"அம்மா அப்பா காளிகாம்பாள் கோவில்ல தூண்ல சாய்ஞ்சுண்டு உட்கார்ந்துண்டிருக்காராம். என் க்ளாஸ் பையன் பார்த்துட்டுச் சொல்றான். நான் போய்ப் பார்த்துட்டு வரட்டுமாம்மா.'

பிள்ளை ஓடி வந்து சொன்னது. அவன் குரலில் பதற்றம் இருந்தது.

"அப்பாக்கு கண்ணெல்லாம் சிவந்திருக்காம். அழுதா மாதிரி இருக்காம். உங்க வீட்ல ஏதாவது சண்டையான்னு அந்தப் பையன் கேட்கிறான். நான் போறேம்மா போய்ப் பார்த்துட்டு வரேன்.'

பிள்ளை பரபரத்தான்.

"வேண்டாம். நீ போகாதே. நான் போறேன்.'

அவள் சட்டென்று வேறு புடவையை மாற்றிக் கொண்டாள். தலைவாரிக் கொண்டாள். நெற்றிக்கு இட்டுக் கொண்டாள்.

சுவாமி அலமாரிக்கு முன் கை கூப்பி நின்றாள். விழுந்து வணங்கினாள்.

அந்த அலமாரி முழுவதும் யாரோ வியாபித்து நிற்பது போல ஓர் உணர்வு சட்டென்று ஏற்பட்டது.

"அண்ணா, சங்கரண்ணா, எங்காத்துக்காரர் மனசு நொந்திருக்கார். என்னமோ போறாத வேளை என் மேல கோபம். கை நீட்டிடுத்து. நீங்க எதுவும் மனசுல வச்சுக்காத அவரை மறுபடியும் ரம்மியமாக்கணும். கோபமே வராத புருஷனா மாத்தணும். உங்களால முடியும்."

மறுபடியும் விழுந்து வணங்கிவிட்டுப் படியிறங்கி ஓட்டமும் நடையுமாய் காளிகாம்பாள் கோவிலை அடைந்தாள்.

கோயிலிருந்த தூணில் சாய்ந்திருக்கும் புருஷனைப் பார்க்கும் போது, சடேரென்று வயிற்றில் ஒரு பயம் படர்ந்தது.

இப்படி என்ன ஓர் அசதி. இப்படி என்ன ஓர் அலுப்பு. மொத்த வாழ்க்கையும் விட்டுப் போனாற் போல, இப்படி என்ன ஒரு சாயல். நேரே வீட்டுக்கு வந்து உணவை முடித்து பிற்பகல் கீழே இறங்கி வெற்றிலைப் பாக்கும் சீவலும் போட்டுக் கொண்டு மிக கம்பீரமாக நாற்காலியில் அமர்ந்து மூலைக்கு மூலை விரட்டிக் கொண்டிருப்பவரை எத்தனை ஆவலோடு சந்தோஷத்துடன் கவனித்திருக்கிறாள்.

இங்கு இப்படி எல்லாமே கை நழுவியது போல இது ஏன் சாய்ந்திருக்கிறது. வேலை போகப் போகிறது என்ற பயமா? வீடு போகப் போகிறதே என்ற கவலையா? இல்லை வேறு ஏதேனுமா? உள்ளுக்குள் என்ன ஆத்திரம், என்ன சிற்றம், ஏன் இந்த வேதனை?

காளிகாம்பாளைக் கை கூப்பி வணங்கி இவரை எனக்குச் சந்தோஷமாக்கிக் கொடு என்று மறுபடியும் வேண்டினாள். மெல்லப் போய் அருகே உட்கார்ந்து கொண்டாள்.

ராதாகிருஷ்ணன் கண்மூடி தூணில் சாய்ந்து, ஓர் அரைத் தூக்க நிலையில் சகலத்தையும் ஒட்டுமொத்தமாக யோசித்துக் கொண்டிருந்தார்.

"மந்திரஜபம், காப்பாத்துமா, வேற எங்கயோ போய் தெற்கு தாம்பரம் தாண்டி நிலம் பார்த்து வீடு கட்டி உட்கார்ந்து கொண்டால் ஜெயிக்க முடியுமா? மயிலாப்பூர் சந்திலோ, திருவல்லிக்கேணி ஒண்டுக் குடித்தனத்திலோ இருந்தால், இதே அரண்மனைக்காரத் தெருவில் படியேறி இறங்கி, ஏதேனும் ஒரு கம்பெனியில் வேலை வாங்கி விடலாம். இப்பொழுது வாங்குகிற சம்பளத்திற்குப் பாதி சம்பளத்தில் வேலையில் சேர்ந்து விடலாம். ஆனால், இப்படி கம்பீரமாக ராஜ்ய பரிபாலனம் பண்ண முடியாது. எடுபிடியாகத்தான்

எங்கேனும் சேரும்படியாக இருக்கும். சொன்ன வேலையைச் செய்கிறவனாகத்தான் நியமிப்பார்கள். அது வேதனை. ஆனால் வேறு வழியில்லை. இந்துப் பாதி சம்பள வேலைகூட இல்லாமல் சேலையூர் தாண்டி எங்கோ உட்கார்ந்து கொள்வதில் என்ன லாபம் இருக்கிறது. வருமானமே இல்லை என்ற நிலைக்குத் தள்ளப்பட்டால் இந்த மனம், இந்த உடம்பு என்ன ஆகும்? ரேவதியைக் கோபித்துச் சண்டை போட்டதற்கே உள்ளுக்குள் மிகப் பெரிய ஓர் அயற்சி வந்து விட்டதே. வீடு மட்டுமே இருக்கிறது. வேறு சம்பாத்தியம் இல்லை என்கிறபோது ஒரு மனிதன் எப்படி சந்தோஷமாக இருக்க முடியும்?"

யாரோ உற்றுப் பார்ப்பது போல் மனத்திற்குத் தோன்ற, சட்டென்று அவர் கண் விழித்தார். சுற்றுமுற்றும் பார்த்தார். பின்னால் யாரோ நெருக்கமாய் உட்கார்ந்திருப்பதைப் பார்த்து திடுக்கிட்டு முன்னே நகர்ந்தார். ரேவதி என்று தெரிந்து மெல்லச் சிரித்தார்.

ரேவதியும் பதிலுக்குச் சிரித்தாள்.

இரண்டுபேரும் ஏதோ பேச வாயெடுத்து சட்டென்று அடக்கிக் கொண்டார்கள். பேசுவதில் எந்த வித லாபமுமில்லை என்பது போல் மௌனமானார்கள்.

ராதாகிருஷ்ணன் தலைகுனிந்து உட்கார்ந்திருக்க, அவர் முதுகில் மெல்லத் தன் இடக்கையை வைத்து, ஒன்றும் கவலைப் படவேண்டாம் என்பது போல் மெல்லியதாக ரேவதி தடவிக் கொடுத்தாள்.

ராதாகிருஷ்ணன் திரும்பி அவளைப் பார்த்தார்.

மெல்ல அவர் கண்களில் நீட்டி கட்டியது

"ஐயம் ஸாரி" என்று ஆங்கிலத்தில் சொன்னார்.

"ச்சூ என்ன இது, எதுக்கு இதெல்லாம்" என்று ரேவதி மெல்லக் கடிந்து கொள்ள, மறுபடியும் கண்களை மூடிக் கொண்டார்.

"வீட்டுக்கு போலாமா. இங்க நீங்க இப்படி உட்கார்ந்துண்டிருக்கறது என்னமோ மாதிரி இருக்கு. ராஜாராமனோட ஃப்ரெண்ட் பார்த்துட்டு ராஜாராமனுக்குச் சொல்ல அவன் எங்கிட்ட வந்து சொன்னான். அதான் ஓடி வந்தேன். நாலுபேர் கண் படும்படியா கோவில்ல சாய்ஞ்சு உட்காருவானேன். வாங்கோ என்னவா இருந்தாலும் சகலத்தையும் கீழ இறக்கிப் போட்டு வீட்டுக்கு வாங்கோ" என்று மெல்ல உலுக்கிக் கூப்பிட, அவர் கை ஊன்றி எழுந்திருந்தார்.

"இவ்ளோ தூரம் வந்துட்டோம். உள்ள போய்ப் பார்த்துட்டு போயிடுவோமா" என்று ரேவதி கருவறையைச் சுட்டிக் காட்ட இரண்டு பேரும் உள்ளே போனார்கள்.

கூட்டம் அதிகமில்லை. யாருக்கோ தீபாராதனை நடந்து கொண்டிருந்தது. தட்டு வெளியே வந்தது. தீபத்தைக் கண்ணில் ஒற்றிக் கொண்டு இரண்டு ரூபாய் காசு போட்டார். அர்ச்சகர் இளைஞன். யாருக்காக தீபாராதனை செய்தானோ, அவருக்கு நாலு முழம் மல்லிப் பந்தாக கையிலே திணிக்க அவர் வாங்கி கண்ணில் ஒற்றிக் கொண்டார்.

'இவ்ளோ பூவை வச்சண்டு நான் என்ன பண்ணுவேன். அம்மா நீங்க வாங்கிக்கோங்கோ" என்று சொல்லி அந்தப் பூவை ராதாகிருஷ்ணனிடம் கொடுக்க, ராதாகிருஷ்ணன் கண்ணில் ஒற்றிக் கொண்டு ரேவதியிடம் கொடுக்க ரேவதி முகம் மலர்ந்தாள்.

"வீட்ல கொண்டு போய் வச்சுக்கோங்கய்யா. லேடீஸ் இல்லைன்னா, என்ன, அம்பாள் பிரார்த்தனையா உங்க வீடு முழுக்க இருக்கட்டுமே. இவங்களுக்கு நான் வேற பூ கொடுக்கறேன்." என்று அர்ச்சக இளைஞன் உரத்துச் சொன்னான். உள்ளுக்குள் வேகமாகப் போனான்.

காளிகாம்பாள் சிலையில் சுற்றப்பட்டிருந்த கதம்பச் சரத்தை எடுத்து வந்து ரேவதியிடம் கொடுத்தான்.

"என் கண்ணே எனக்கு பூ பிடிக்கும்னு சொல்லி தலையில இருக்கற பூவை என் கைக்கு கொண்டு வந்தியா, ரொம்ப சந்தோஷம். நாங்க உன்னை விட்டு ரொம்ப தூரம் போகப் போறோம். எங்கயோ போகப்போறோம். அங்க எங்க கூட வருவியா. எங்களோட இருப்பியா?"

கண் மூடி ரேவதி, காளிகாம்பாளைப் பிரார்த்தித்தாள். மெல்லக் கண் திறந்தாள்.

எனக்குச் சொல்லிக் கொடேன். இனி நீ எங்கிருந்தாலும் கூட இருப்பேன்னு எனக்கு ஏதாவது ஓர் அடையாளம் காட்டேன்.

மனமுருக வேண்டிக் கொண்டாள். அம்பாளை தரிசித்து சிவன் சன்னதிக்கு அருகே போக, அங்கு யாரோ ஒரு பெண்மணி நின்று கொண்டு வெற்றிலைப் பாக்கும் ரவிக்கையும் தாலிக்கொடியும் மஞ்சள் கிழங்கும் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

ரேவதியைப் பார்த்ததும் வேறு யாருக்கோ கண் காட்ட, அருகேயிருந்த இன்னொரு பெண்மணி பிளாஸ்டிக் பையிலிருந்து ஒரு புடவையை எடுத்து தட்டில் வைத்தாள்.

நல்ல பட்டுப்புடவை. ஜரிகை போட்டு பளபள வென்று இருக்கின்ற குறைந்த பட்சம் இரண்டாயிரம் ரூபாய் இருக்கிற பட்டுப் புடவை.

ரேவதி திகைத்தாள்.

ராதாகிருஷ்ணனைப் பார்த்தாள். ராதாகிருஷ்ணனுக்கும் வியப்பாக இருந்தது.

என்ன இது. பட்டுப்புடவையெல்லாம் வேண்டாம். வெறும் மஞ்சள் கிழங்கு கொடுங்கோ' என்று சொல்ல, அந்தப் பெண்மணி காலில் விழுந்து அவளை வணங்கினாள்.

"புடவை கொடுக்கணும்னு வேண்டிருக்கேன். தயவு செய்து மறுக்காம வாங்கிக்கோங்க."

"வேற யாருக்காவது கொடும்மா, எனக்கு என்னத்துக்கு?"

"உங்களுக்குக் கொடுக்கணும்னு உள்ள தோணித்து. நீங்க வாங்கிக்கணும். நீங்க மறுத்தா எனக்கு அபசகுணமாப்படும்."

"எல்லாருக்கும் கொடுக்கறா மாதிரிதான் எனக்கும் கொடுக்கணும்"

"எல்லாருக்கும் பட்டுப்புடவை கொடுக்கணும்னு ஆசைதாம்மா. வசதியில்லை. அதனால எங்க கல்யாண தினத்துக்கு ஒரேயொரு பெண்மணிக்குப் பட்டுப் புடவையும் இன்னொரு பதினாலு பேருக்கு ரவிக்கைத் துணியும் கொடுக்கறேன். உங்களைப் பார்த்தவுடனே பட்டுப்புடவை கொடுக்கணும்னு தோணிச்சு. மறுபடி கெஞ்சிக் கேட்டுக்கறேன். புடவை வாங்கிக்கோங்கம்மா."

இப்பொழுது ராதாகிருஷ்ணனின் உத்தரவை நோக்கி ரேவதி பார்க்க, அவர் வாங்கிக்கொள் என்று ஜாடை காட்டினார்.

ரேவதி புடவையை வாங்கிக் கொண்டாள், உங்க அட்ரெஸ் சொல்லுங்களேன்.' என்று சொன்னாள்.

"அட்ரஸ் எல்லாம் வேண்டாம்மா. நீங்க நல்லாயிருங்கன்னு என்னை வாய் நிறைய வாழ்த்தினாலே நான் நல்லா இருப்பேன்."

"சௌக்கியமா, தீர்க்க சுமங்கலியா, எல்லா விதசந்தோஷங்களோடும், எல்லாவித வளத்தோடும் நீண்ட நெடுங்காலம் வாழணும் என்று குனிந்து வணங்கிய வள், தலைதொட்டு ரேவதி ஆசிர்வதித்தாள்.

புடவையை வேண்டாம் என்ற ஒரு கூச்சத்தால் மறுத்தாலும் புடவையை அணைத்துக் கொண்டு

கோவிலை விட்டு வெளியே வரும்போது மனம் சந்தோஷத்தில் துள்ளியது.

'ரொம்ப தேங்க்ஸ். நீ எனக்கு உத்தரவு கொடுத்துட்டே, நீ எங்க போனாலும் கூட வருவேன்னு ஒரு பச்சைப் புடவையைக் கொடுத்து. எனக்குப் புரியறது. நீ என் கூடத்தான் இருக்கப் போற. எனக்குப் புடவையைக் கொடுத்தது யாரோ ஒரு பொம்மனாட்டி இல்ல, நீ, காளிகாம்பாள்' என்று மனசுக்குள் உரக்கப் பேசினாள். படியேறியதும் பிள்ளை அப்பாவைப் பார்த்து விட்டு பின்பக்க வெளிமுற்றத்திற்கு பயந்தபடி பின் வாங்கினான்.

ராதாகிருஷ்ணன் அவனை நோக்கி முன்னேறினார். அருகே போனார். அவன் தலையைத் தடவி விட்டார் இறுக அணைத்துக் கொண்டார். அவன் விசும்பத் துவங்கினான். அவன் முதுகெல்லாம் தடவினார்.

"ஸாரிப்பா. நான் ரொம்ப தப்பு பண்ணிட்டேன்."

"அதெல்லாம் இல்லைடா. நானும் கொஞ்சம் முட்டாள்தனமா நடந்துனுட்டேன்."

மெல்ல அவன் கன்னங்களை அழுந்தப்பிடித்து இரண்டு கன்னத்திலும் முத்தமிட்டார். கிட்டத்தட்ட, தன் உயரத்திற்கு வளருகின்ற பையனை ஆவலோடு பார்த்தார்.

'உன்னுடைய வாலிபமான ஒருகாலத்துல, நான் ஒண்ணும் சம்பாதிக்காம போயிட போறேனோன்னு பயமா இருக்கேடா' என்று மனதுக்குள் மெல்ல குமைந்தார். பெண் குழந்தையைப் பார்த்து அருகே வரவழைத்து நெற்றியில் முத்தமிட்டார்.

"ஏதாவது சாப்பிட்டியா ரேவதி. போ. போய்ச் சாப்பிடு" என்ற சொல்ல, ரேவதி தட்டை எடுத்துக் கொண்டு வந்து உட்கார்ந்தாள். குழந்தைகளும் உட்கார்ந்தன

அவர் மெல்ல விசிறி எடுத்துக் கொண்டு குழந்தைகளுக்கு விசிறினார். குழந்தைகள் மறுத்த போதும் கேட்காமல் ரேவதிக்கும் விசிறினார்.

அந்த வீடு மௌனமாக உணவு சாப்பிட்டது. தன் வேலைகளை கவனிக்கத் துவங்கியது.

இரவு நேரம் ரேவதியே தலைகாணியை அவருக்கருகே போட்டுக் கொண்டு அவர் நெஞ்சை நீவி விட்டாள்.

"என்ன பிரச்னை வந்தாலும், இந்த வீடு இல்லாமல், இந்த வேலை இல்லாமல் இருந்தாலும் நம்ம ரெண்டு பேருக்குள்ளேயும் சண்டை வராத இருந்தா போதும். எதையும் சமாளிச்சுடலாம். நாம ரெண்டு பேரும் சண்டை போட்டுண்டோம்னா, வீடு ரொம்ப ஆடிப் போயிடும். என்ன கோபம் இருந்தாலும் வாய் நிறைய இதனால் கோபம், அப்படின்னு நீட்டி முழக்கிப் பேசிடலாம். தப்பேயில்லை. முரட்டுத்தனம் காட்டற போது மனசு ஒடிந்து போறது" என்று அவள் சொல்ல, அவளை இழுத்து அணைத்துக் கொண்டார். முத்தமிட்டார்.

"இனிமேல் காட்டமாட்டேன்" என்று உறுதியான குரலில் சொன்னார்.

டெலிபோன் மணி அடித்தது. பத்தேகால் மணிக்கு யார் போன் செய்வது என்று ஆச்சரியத்தோடு ராதாகிருஷ்ணன் போனுக்கு அருகே போய் காதில் பொருத்திக் கொண்டு தன் பெயரைச் சொல்ல எதிர்முனையில் சங்கரய்யர் குரல்கேட்டது.

"நாளைக்கு காத்தால ஏழு மணிக்கு வந்துட முடியுமா. ஒரு ஜபம் ஆரம்பிச்சு வச்சுடறேன்."

"ஆஹா... நிச்சயமா வரேன்."

"ஆனா, வீட்லயும் கூட்டிண்டு வா."

என்று சொல்ல "குழந்தேளையும் கூட்டிண்டு வரணுமா" என்று ராதாகிருஷ்ணன் பதிலுக்குக் கேட்டார்.

"கூப்டிண்டு வாயேன். அவாளுக்கும் ஏதாவது சொல்லித் தரேன். எல்லாரையும் கூப்டிண்டு வந்துட முடியுமா, ஏழு மணிக்குள்ள. இல்ல, கொஞ்சம் தள்ளி வச்சுக்கப்டுமா?"

"இல்லை. நீங்க எப்போ சொல்றேளோ வரோம்."

"ஏழு மணி ரொம்ப நன்னாயிருக்கு."

சரியென்று ராதாகிருஷ்ணன் போனை வைத்தார்.

28

காலையில் ஐந்து மணிக்கு ரேவதி எழுந்தாள். ராதாகிருஷ்ணனை, குழந்தைகளை எழுப்பினாள். ஆறே முக்காலுக்கு அவர்கள் எல்லோரும் வீட்டைப் பூட்டிக் கொண்டு கீழே இறங்கினார்கள். வெளிக்கதவு திறந்து படியிறங்க எதிரே சங்கரய்யர் நடந்து வந்து கொண்டிருந்தார்.

"என்னது என்னத்துக்கு நீங்க இங்கே வரேள்."

"ஆமாம்... ஆமாம்... என் வீட்ல தோதுபடலை. புலம் பலா இரண்டு மூணு பேர் உட்கார்ந்துனுட்டா. கண்ணை மூடிண்டு அப்படியே இருன்னு சொல்லிட்டு உங்களைத் தேடிண்டு வந்துட்டேன்"

"ரொம்ப சந்தோஷம். ஆனா உங்க இடத்துல மந்திர ஜபம் கத்துக்கறா மாதிரி ஆகுமா?" என்று ரேவதி சொல்ல, "இடம் முக்கியமேயில்லை. மனசு என்ன பக்குவத்துல இருக்குங்கறதுதான் முக்கியம்."

ராதாகிருஷ்ணன் அவரை வரவேற்று உள்ளே உட்கார வைத்து, மனைவியோடும் குழந்தைகளோடும் நமஸ்கரிக்க, அவர் வீடு சுற்றிப் பார்த்தார்.

"பிரமாதமான இடம்தான். ஆனால் சுவரெல்லாம் பழுதாயிடுத்து. இன்னும் அஞ்சு வருஷத்துக்கு மேல

இது தாங்காது" என்று சுற்றிப் பார்த்துவிட்டுச் சொன்னார்.

பூஜையறைக்கு வந்து கைகூப்பினார்.

"மனசை ஒருமுகப்படுத்த மந்திர ஜபம் ஒரு வழி. மந்திர ஜபம் ஒருமித்துச் சொல்ல நாடி சுத்தி இன்னொரு வழி. நாடி சுத்தியை சரியாகச் செய்ய குறைவாகச் சாப்பிடுதல் முக்கியம். எனவே காலை வேளை என்பது உத்தமம். 'நாடி சுத்தி செய்வதற்கு முன்பு நெற்றியில் குட்டிக் கொண்டால் தலைக்குள் இருக்கிற அமிர்த நாடி மெல்லச் சுருங்கி உடம்பு முழுவதும் பரவ, உடம்பு சுறுசுறுப்படையும். எட்டு சொடக்கு இடது நாசி வழியாக காற்றை இழுத்து, பதினாறு சொடக்கு வலது நாசி வழியாக வெளியே விட வேண்டும். மறுபடியும் எட்டு சொடக்கு வலது நாசி வழியாக இழுத்து பதினாறு சொடக்கு இடது நாசி வழியாக வெளியே விட வேண்டும். அப்பொழுதுதான் உடம்பு ஒரு அமைதியாக உட்காரும். இடுப்புக்குக் கீழே ஒரு கனம் ஏற்பட்டு அசையாத தன்மை வரும் வாய்ப்பு இருக்கிறது. புத்தி அதிகம் அலையாமல் மூச்சை கவனிக்கத் துவங்கும். மூச்சை புத்தி கவனிக்கத் துவங்குகிறபொழுது மந்திரஜபம் செய்யத் துவங்கலாம். நான் இந்த மந்திர ஜபத்தை காகிதத்தில் எழுதிக் கொடுத்து விடுவேன். பிறகு மனனம் செய்யுங்கள்."

இப்போது தனித்தனியாக மூன்று முறை மகா கணபதியும் பாலாதிரிபுர சுந்தரி மந்திரமும் உங்கள் காதுகளில் சொல்வேன். அப்போது மந்திரம் உங்களுக்குச் சொல்லிக் கொடுக்கப்பட்டு விட்டதாக அர்த்தம். எல்லா நாளும் விடாமல் செய்ய வேண்டும்.

ஒவ்வொருவராக அருகே உட்கார வைத்த காது மடலுக்கருகே வாய் குவித்து, அடிக்குரலில் இரண்டு மந்திரங்களும் சொல்லி, தலையைத்தடவி ஆசீர்வதித்

தார். திரும்ப மந்திரம் சொல்லச் சொல்லி உச்சரிப்பைத் திருத்தினார்.

'எதுக்கு மந்திர ஜபம். ஏன் இதைச் செய்ய வேண்டும். என்ன பலன் இதனால்?' அவரே கேள்வியெழுப்பினார். அவரே பதிலும் சொன்னார்.

"நம்முடைய புத்தியில், மனத்தில் பலமில்லாதாலேயே பிரச்னைகள் பலதும் தோன்றுகின்றன. பிரச்னைகளைத் தீர்க்க முடியாததால் கோபம் வருகிறது. கோபம் மேலும் பிரச்னைகளைக் கொண்டு வந்து கொடுக்கிறது. நம்மைச் சுற்றியுள்ள அத்தனை ஜீவன்களையும் நாம் எதிரிகளாக, நமக்கு வேண்டப்படாதவர்களாக, வெறுக்கத்தக்கவராக இருப்பினும் பார்த்துவிடுகிறோம். இது வாழ்க்கையை மிக மோசமானதாக மாற்றி விடுகிறது. எங்கு போயினும், எவரோடு இருப்பினும் நம்மால் நல்ல உறவு வைத்துக் கொள்ள முடியவில்லை என்பது மிக துக்ககரமான விஷயம்.

நான்கு நாட்கள் நண்பனாக இருந்தவர், ஐந்தாம் நாள் பகைவர் ஆவார் என்றால் அது அவர் மீது மட்டும் உள்ள குற்றமல்ல, உங்கள் மீது என்ன குற்றம் இருக்கிறதென்றும் நீங்கள் உற்றுப் பார்க்க வேண்டும். கோபப்படுதலை, பொறாமைப்படுதலை, ஆசையை, அகங்காரத்தை அந்த மந்திர ஜபம் மெல்ல மெல்லக் குறைக்கிறது. ஆனால் இந்த மந்திர ஜபம் செய்வது ஒரு நடிப்பாக, ஒரு நாடகமாகப் போய்விடக் கூடாது. 'நான் மந்திர ஜபம் செய்கிறேன் பார்' என்று அலட்டிக் கொண்டால், ஒரு நாடகத்தன்மை வருவதற்கு வாய்ப்புண்டு. எனவே மற்றவர்களிடம் இதுபற்றிப் பேசாது, திரும்பத் திரும்ப மந்திரம் சொல்லும் பொழுது ஒரு நாற்பது ஐம்பது நாளில் உங்கள் மனோபலம் பெருகியிருப்பதை நீங்கள் நிச்சயம் உணர்வீர்கள்."

அவர் கைப்பட எழுதிக் கொடுத்ததை ஜெராக்ஸ் செய்து, அதைத் தனியாக வைத்திருந்தார். அவர்களுக்

குள் பிரித்து வழங்கினார். அவர்கள் மறுபடியும் விழுந்து வணங்க மெல்ல குழந்தைகளைத் தடவி விட்டார்.

ராதாகிருஷ்ணனை அருகே வந்து அணைத்துக் கொண்டார்.

"எல்லாம் சரியாப் போயிடுத்து. அவன் இன்னிக்குச் சாயந்திரம் எங்கிட்ட வருவான். நீங்களும் வாங்கோ. எவ்ளோ கொடுக்கப் போறேன்னு கேக்கப் போறேன். உங்களை வைச்சுண்டு பேசப்போறேன். எத்தனை முடியுமோ அத்தனை வாங்கித்தரேன். நீங்க எவ்வளவு சீக்கிரம் காலி பண்ணணுமோ, அவ்வளவு சிக்கிரம் பண்ணிடுங்கோ' என்று மெல்ல இனிமையாகப் பேசினார். ராதாகிருஷ்ணனுக்குச் சட்டென்று இவருக்கு இதில் என்ன லாபம், கமிஷன் ஏதேனும் கொடுப்பானா என்ற கேள்வி எழுந்தது.

கேள்வி எழுந்த சமயத்தில் சங்கரய்யருக்கு ராதாகிருஷ்ணனின் மனோ நிலை புரிந்து போயிற்று. வீட்டை வாங்குகின்ற வட இந்தியர் போன் செய்தார். சங்கரய்யர் வீட்டில் பேச அழைத்தார். ராதாகிருஷ்ணன் சரியென்று ஏற்றுக் கொண்டார்.

"நான் அதுக்கு பகடின்னு பேர் சொல்ல மாட்டேன். வீட்டைக் காலி பண்ணிண்டு போறதுக்கு நன்கொடையா, சன்மானமா ஒன்பது லட்ச ரூபா. கோர்ட்டுக்குப் போனா பதினைஞ்சு வருஷமாகும் காலி பண்றேன்னு முன் வந்தது ரொம்பப் பெரிய விஷயம். இரண்டே முக்கால் கோடி ரூபாய்க்கு அறுமாடிக் கட்டடம் கட்டப்போறன்னு சொல்றார். உனக்கு இவரு கொடுக்கற ஒன்பது லட்சம் பெரிய விஷயமில்லை. கட்டப் போறது கமர்ஷியல் காம்ப்ளெக்ஸ்."

"அற்புதமான இடம். கெஸ்ட் ஹவுஸ், திறந்த ரெஸ்டாரண்ட் கட்டலாம். எல்லா மார்க்கெட்லேர்ந்தும் நடக்கற தூரம். பாரீஸ் நெரிசல்தான், ஜனக்கூட்டம்

அதிகம்தான். ஆனா வியாபாரிகளுக்கு சொர்க்கம். வடக்கேயிருந்து என்ன எடுத்துண்டு வந்தாலும் மெ' ராஸ்ல விக்கும்யா. இது வடக்க இருக்கற அத்தனை பேருக்கும் தெரியும். ரயில்லேயும் விமானத்துலயும் வந்து இறங்கறவன் இரண்டு பெ'டி எடுத்துண்டு வருவான். ஒண்ணு அவன் துணிமணிப் பெ'டி இன்னொண்ணு சரக்குப்பெ'டி.

"ஜார்ஜ் டவுனை யாரும் அழிக்க முடியாது. இது காளிகாம்பாள் உ'கார்ந்திருக்கற இடம். எங்க சக்தி பீடம் இருக்கோ, அங்க செல்வம் இருக்கும். பரபரப்பு இருக்கும். ஓடு ஓடுன்னு ஓடற ஓ'டம் இருக்கும். இது சம்பளக்கார இடமில்லை. வியாபாரி இடம். காளி காம்பாள் எங்கேயிருந்து வந்தாளோ அந்த இடத்துல ரஜோ குணம், நகர்ந்து போய், தமஸ் வந்துருத்து. கோ' டையில சம்பளக்காரன் வந்து உ'கார்ந்து'டான். நிதானமாத்தான் செயல்படுவான்.

"நீங்க வடநா'டு வியாபாரி. வைஷ்ணவ சம்பிரதாயம். பெரிய வைஷ்ணவக் கோயில் எங்க இருந்தாலும் அதைச் சுத்தி உள்ளயோ, வெளியவோ ஒரு வனதுர்கை இருக்கும். ஸ்ரீரங்கம் கோவில்ல இருக்கு. ஆனா காண்பிக்கமாட்டா."

சங்கரய்யர் சம்மணமிட்டுக் கொண்டு மிகக் கம்பீரமாய் அந்த வட இந்திய பணியாவிடம் அவனை உற்சாகப்படுத்திப் பேசி கொண்டிருந்தார்.

அவன் கைகளைக் கட்டியவாறு மெல்லிய குரலில் பேசினான்.

"எனக்கும் நீங்கள் சொல்கின்ற அதே எண்ணம்தான் இருக்கிறது. கெஸ்ட் ஹவுஸ் மாடி ரெஸ்டாரண்ட் எல்லாமுமே நான் மனத்துக்குள் நினைத்துக் கொண்டிருந்தது. எப்படி நீங்கள் சொல்கிறீர்கள் என்று ஆச்சரியமாக இருக்கிறது. இதை நான் இன்னும் என் மனைவியிடம் கூடப் பகிர்ந்து கொள்ளவில்லை. இந்த

வேலை முடியட்டும், இந்தக் கட்டடம் முழுமையாகட்டும் பிறகு சொல்லலாம் என்று நினைத்தேன். என் மனத்தில் உள்ளதை நீங்கள் சொல்வது சந்தோஷமாக இருக்கிறது" என்று மெய்சிலிர்த்தான்.

"ராதாகிருஷ்ணனுக்கு நான் எவ்வளவு தர வேண்டும்? ஒன்பது லட்சம்தானே. நான் கொண்டு வந்திருக்கிறேன். உங்கள் எதிரிலேயே கொடுத்து விடுகிறேன்."

தனக்குப் பின் இருந்தவனிடம் ஏதோ சொல்ல, அவன் இறங்கி வெளியே போனான், ஒரு பெ'டி வந்தது.

'ஐந்நூறு ரூபாய்க் கட்டாக வைத்திருக்கிறேன்' என்று பெ'டியைத் திறந்து காண்பித்தான்.

சங்கரய்யர் எதிரே அந்தப் பெ'டியைத் திறந்து நோ'டுக்களை வேகமாக பெ'டிக்குள் அடுக்கி ஒன்பது லட்சம் என்ற கா'டினார். பிறகு அதை மூடி நிமிர்த்தி சங்கரய்யருக்கு அருகே நகர்த்தி வைத்தான்.

சங்கரய்யர் அதைத் தொ'டுக் கண்ணில் ஒற்றிக் கொண்டார்.

சக்கரம் பதித்த அந்த சூ'கேஸை ராதாகிருஷ்ணனை நோக்கி நகர்த்தினார்.

"வீ'டுக்குப் போய் இதைப் பத்திரப்படுத்துங்கள்" என்று சொல்லி கூடவே ருக்மணியையும் இன்னொரு ஆளையும் துணைக்கு அனுப்பினார்.

அவர்கள் ராதாகிருஷ்ணனோடு வீ'டு வாசல்வரை வந்து விடைபெற்றார்கள்.

வீடு சூழ்ந்து கொண்டு பெட்டியைத் திறந்து பார்த்து சந்தோஷப்பட்டது.

ராதாகிருஷ்ணன் ஒரு லட்ச ரூபாயை எடுத்து பீரோவில் வைத்தார். பிறகு பெட்டியை எடுத்துக் கொண்டு இரண்டு மூன்று வங்கிகளில் ஏறி இறங்கினார். கணக்கு திறந்தார்.

அந்த வீ டுச் சொந்தக்கார இளைஞன் கம்பெ னியை மூடப் போவதாக அறிவித்து நஷ்ட ஈடாக அவருக்கு ஒண்ணே முக்கால் லட்ச ரூபாய் தருவதாக எழுதி காசோலை கொடுத்தான். எந்த ரகளையும் சொய்யாமல் விற்பதற்கு உதவி செய்ததற்காக ஒண்ணே கால் லட்ச ரூபாய் கொடுத்தான்.

மூன்றே நாட் களில் பன்னிரெண்டு லட்ச ரூபாய்க்கு ராதாகிருஷ்ணன் அதிபதியானார்.

முகத்தில் ஒளி பிறந்தது. நடையில் வேகம் இருந்தது. ரேவதியின் மீதும், குழந்தைகள் மீதும் பாசமும் பரிவும் பொங்கின.

"தயவு செய்து இந்த வீ ட்டில் நீங்கள் குடியிருங்கள். இதைப் பூ ட்டிவி ட்டுப் போக எனக்கு மனம் ஒப்ப வில்லை. இப்போதைக்கு நான் இதை இடிப்பதோ, மாற்றிக் க ட்டுவதோ செய்யப் போவதில்லை. மாநக ராட்சியிடம் ஆறு மாடிக் க ட்டடத்திற்கு அனுமதி கேட்டிருக்கிறேன். அது கிடைப்பதில் பல சிக்கல்கள் இருக்கின்றன. இது உடனடியாக முடியும் காரியம் அல்ல. வரைபடம் வரைந்து காட்டி, இரண்டு மாடியையும் விற்றப் பிறகே, நான் வேலையைத் துவங்கு வேன். வெகு நிச்சயமாய் இது ஒரு வருடத்திற்குமேல் ஆகும்.

ஆனால் கீழே அவர்கள் தொடர்ந்து குடியிருக்கக் கூடாது. வியாபாரிகளைக் காலி செய்வது மிகக் கடி னம். இதோ அதோ என்று போக்குக் காட்டுவார்கள். அவர்கள் பின்னால் நான் அலைய முடியாது. நீங்கள் தொடர்ந்து இருக்கலாம். இருக்க வேண்டும்."

அந்த வட இந்திய பணியா ராதாகிருஷ்ணனைக் கைகூப்பி கேட்டுக் கொண்டான்.

29

"ஆஹா இது ராதாகிருஷ்ணனுக்கும் வசதி. நிதானமா நிலம் வாங்கி திடமா அஸ்திவாரம் போட்டு மெல்ல மெல்ல வீடு க ட்டி கிரஹப்பிரவேசம் பண்ணி அப்புறம் வீடு எப்படி இருக்கும்னு பார்த்து அங்கங்க ஏதாவது சிரமம் இருந்தா அதையும் சரி பண்ணி நிம்ம தியா குடி போகலாம். இல்லை ஒண்ணுக்குப் பத்து கட்டின வீடா பார்த்து, எது பிடிச்சிருக்கோ அங்க குடி போகலாம்."

சங்கரய்யர் வட இந்திய பணியாவிடம் உற்சாக மாகப் பேசினார்.

ராதாகிருஷ்ணன் வீட்டு நடுக்கூடத்தில் சகலமும் கையெழுத்தாயிற்று.

எல்லோரும் போன பிறகு ரேவதியும் ராதாகிருஷ்ண னும் தனித்து விடப்பட்டார்கள். "இதுல சங்கரய்யருக்கு என்ன லாபம்? கமிஷன் இருக்குமே" அடிக்குரலில் கேட்டார்.

"அவரைப் போய் கமிஷன் வாங்கறவர் மாதிரி எப்படி உங்களால யோசிக்க முடியறது, சங்கரய்யர்னா குதர்க்கமாகவே யோசனை பண்றதுக்கு நீங்க ஏன் முயற்சி பண்றேள். எந்த விதத்துல அவரோட நீங்க போட்டிபோடறேள். அல்லது அவர் உங்களோட போட்டி போடறார். எல்லாரையும் அரவணைச்சுண்டு போற அவரோட நல்ல குணம், எல்லாருக்கும் உதவி செய்யணுங்கற அந்த ஆவல் உங்களுக்கு புரியவே இல்லையா? இத்தனை ஜனம் ஓடிவருதே. ஏன்னு யோசனை பண்ணிப் பார்த்தேளா. அந்த ருக்மணி அவர் வீட்ல வேலைக்காரி மாதிரி இருக்கா. அவளுக் குக் கல்யாணமாகி ரெண்டு பசங்க இருக்கு. பள்ளிக் கூடத்துல கொண்டு போய் குழந்தைகளை விட்ட கையோட இந்தப் பக்கம் ஓடி வந்து இங்க இருக்கற

எல்லா வேலையையும் தானா இழுத்துப் போட்டுண்டு செய்யறா. இனி வாழ்க்கையே இல்லை. எல்லாம் முடிஞ்சு போச்சுன்னு கிடந்தவளாம். சின்னதா ஒரு தப்புப் பண்ணி அது பெருசாகி நிறைய அவமானத்துல தத்தளிச்சு இனிமே கல்யாணம் ஆகாதுங்கற இடத்துக்கு எல்லோரும் முடிவு பண்ணி அப்படி இல்லைன்னு சொல்லி இவர் பார்த்து பண்ணி வச்ச கல்யாணமாம். குழந்தை பிறக்காதுன்னு யாரோ சொல்ல இல்லை பிறக்கும்ன்னு இவர் சொல்லி ஒண்ணுக்கு ரெண்டு குழந்தையா பெத்துண்டிருக்கா. மூணு மணிக்கு குழந்தைகள் பள்ளிக் கூடம் விட்டுத் திரும்பற போது அதுங்களைக் கூட்டிண்டு வந்து அதுக்கப்புறம் தான் அவ வீட்டு வேலையை ஆரம்பிப்பாளாம்.

"ருக்மணியோட புருஷன் வீட்டுக்குள்ள படியேறின வுடனேயே இன்னிக்கு சங்கரய்யர் வீட்டுக்குப் போனியா? அப்படின்னுதான் கேட்பாராம். போகலைன்னு சொன்னா வருத்தப்படுவாராம். நமக்கென்ன பண்ணினார்னு கேட்காதீங்கோ. இவ்வளவு காசு வரும்னு நான் நினைக்கவேயில்ல. இந்த வீட்டை விட்டுப் போறதுல வருத்தமாயிருந்தாலும் வெறுமனே அனுப்பலை. கையில காசோட அனுப்பறான். இது நல்ல காசு. நாம எங்கேயாவது சென்னைக்கு ஒதுக்குப் புறமா நல்ல வீடு கட்டிண்டு நிம்மதியா இருக்க முடியும். சங்கரய்யருக்கு கமிஷன் இதெல்லாம் மனசுக்குள்ள நினைக்கக் கூடாது. எப்போதாவது பேச்சா வெளிய வந்துடும். அது நமக்குக் கஷ்டத்தைக் கொடுத்துடும்.

"உங்களை நம்பி, உங்களைப் பார்த்து அந்த பணியா இன்னும் ஒரு [illegible] இருக்குன்னு சொல்லலை. சங்கரய்யர் மேல உண்டான நம்பிக்கை. சங்கரய்யருடைய ஆள் நீங்கன்றதுனால உண்டான நம்பிக்கை. ஒரு வருஷம் இருங்கன்னு சொல்றான். மனிதர்களுக்கு மனிதர்கள் மேல நம்பிக்கை வரணும்னா இன்னொரு

மனிதன் சொல்ல வேண்டியிருக்கு. ஒருத்தன் நல்லவன்னு முகத்தைப் பார்த்து தெரிஞ்சுக்க முடியலை. ஜாதகம் பார்த்துப் புரிஞ்சுக்க முடியலை. இன்னொரு மனுஷன் இவன் ரொம்ப நல்லவன்னு சொன்னா சந்தோஷமாக இருக்கு. சரின்னு உடனே தலையாட்டராங்க. அப்படிச் சொல்ற மனுஷன் சத்தியத்துக்குக் கட்டுப்படறவனா இருக்கறதுப் பார்த்தவுடனே நம்பிக்கை இன்னும் அதிகமாகறது.

'சங்கரய்யராள இதுவரைக்கும் நமக்கு நிறைய நல்லது நடந்திருக்கு. இனியும் நடக்கும்.'

ராதாகிருஷ்ணனின் மனைவி ரேவதி பேசிக் கொண்டிருக்கும் போதே டெலிபோன் அடித்தது.

ராதாகிருஷ்ணன் எடுத்தார்.

"வரேனே... உடனே வரேனே. ரேவதியையும் கூட்டிண்டு வரவா. வரேனே. ஒண்ணும் வேலையில்லை. கம்பெனியைத்தான் மூடிட்டானே. சும்மா உட்கார்ந்துண்டு பேசிண்டிருக்கோம். ஆஹா நிச்சயமா வரேன்."

பரபரப்பாக ராதாகிருஷ்ணன் பேசி முடிக்க, "யாரு சங்கரய்யரா" என்று ஆவலாக ரேவதி கேட்டாள்.

சங்கரய்யர் அழைப்பதாக விவரம் சொன்னதும் அடுத்த பத்து நிமிடத்தில் இரண்டு பேரும் மிகச் சீராக உடுத்திக் கொண்டு சங்கரய்யர் வீட்டுக்குள் படியேறினார்கள்.

அன்றைக்கு விசேஷமாக இருபது பேர் கூட்டம் ஒன்று சங்கரய்யரின் எதிரே உட்கார்ந்திருந்தது. உட்கார்ந்திருந்த எல்லோரும் இளைஞர்கள், யுவதிகள்.

"இவா எல்லாரும் காலேஜ் ஸ்டூடன்ஸ். ஜர்னலிசம் படிக்கறாளாம். கடவுள் என்கிற விஷயம் பத்தி பேட்டி எடுக்கறதுக்காக எங்கிட்ட வந்திருக்கா. இது நியாயமா?"

"கடவுளைப் பத்தி தெரிஞ்சுக்க உங்கிட்டதான் வர முடியும். கடவுள் கிட்டயா போக முடியும்."

ரேவதி சொல்ல, அங்குள்ள இளைஞர்களும், யுவதிகளும் வாய் விட்டுச் சிரித்தார்கள்.

"அப்போ என்ன சொல்றீங்க? இவர்தான் கடவுள்னு சொல்றீங்களா, இல்லை, இவர் ரெப்ரெசன்டேட்டிவ்னு சொல்றீங்களா?'

பின்னாலிருந்த சற்று உயரமான அடர்த்தியான மீசை வைத்த இளைஞன் கேள்வி கேட்டான்.

"கடவுள் அவதாரம்னு சொல்றேன். கடவுள் இங்க வந்து சங்கரய்யராகப் பிறந்திருக்கார்னு சொல்றேன்."

ரேவதி திடமாகப் பேசினாள்.

ராதாகிருஷ்ணன் அவளை வியப்போடு பார்த்தார்.

"அதை அவரில்ல சொல்லணும்."

அதே பையன் உரத்த குரலில் பேசினான்

"அவர் எப்படி சொல்வார்? நான்தான் சொல்லுவேன். என்னை மாதிரி அவரைக் கடவுளா உணர்ந்தவங்கதான் சொல்லுவாங்க." என்று சொல்ல ருக்மணி கைகொட்டி ஆதரித்தாள்.

'கடவுள் அவதாரமா அல்லது கடவுள் தன்மை கொண்ட மனிதரா.'

ஒரு பெண் குரல் உயர்த்தி கேள்வி கேட்டது.

"இந்த ரெண்டுக்கும் என்ன பெரிய வித்தியாசம் இருக்கு. அப்படியே வித்தியாசம் இருந்தாத்தான் என்ன. அது உங்க பார்வை. இது என்னுடைய பார்வை."

ரேவதி மீண்டும் தெளிவாகப் பதில் சொன்னாள்.

"ஒரே ஒரு கேள்வி. கடவுள் உண்டா? அதுக்கு பதில் சொன்ன பிறகுதானே அவதாரம்கற விஷயம் பத்திப் பேச முடியும்."

அதே இளைஞன் மீண்டும் பேசினான்.

அவன் கடவுள் மறுப்பு இயக்கத்தைச் சேர்ந்தவன் போல் இருக்கிறதே என்ற ராதாகிருஷ்ணன் நினைத்துக் கொண்டார்.

"இந்தக் கேள்வியே முட்டாள்தனம்."

ராதாகிருஷ்ணன் பதில் சொல்ல ஆரம்பித்தார்.

எல்லோரும் அவரை நோக்கித் திரும்பினார்கள்.

"அவர் பேர் ராதாகிருஷ்ணன். இவங்க பேர் ரேவதி. ராதாகிருஷ்ணன் மனைவி. ராதாகிருஷ்ணன் எக்ஸ்போர்ட் கம்பெனியில மேனேஜர்" என்று சொல்லி சங்கரய்யர் அறிமுகப்படுத்தினார்.

கூட்டத்திலுள்ளவர்கள் கை கூப்பினார்கள்.

"கடவுள் இருக்காரான்னு கேள்வி கேட்காதே, தேடிப் பாரு. உனக்குக் கிடைக்கலையா இல்லைன்னு சுத்தமா நம்பு, இருக்கிறார்னு சொல்றவங்கிட்ட கேள்வி கேட்டா உனக்குக் கடவுள் தெரிஞ்சுடுமா. கடவுள் தெரியணும்னா நீ தேடணும். ஒண்ணு கடவுள் இருக்கார்னு நம்பு. இல்ல கடவுள் இல்லைன்னு இருந்துடு. கடவுள் இருக்கிறாரான்னு கேள்வி கேட்காதே."

"நான் இல்லைன்னு சொல்றேன். இருக்கார்னு சொல்றவர்கிட்ட கேள்வி கேட்கறேன்."

"அவர்தான் இருக்கார்னு தெள்ளத் தெளிவா இருக்காரே அப்புறம் என்ன கேள்வி."

"இல்லாத விஷயத்தை இருக்குன்னு சொல்றாரே."

"அவர் சொல்லலாமில்லை, நீங்கதான் இருக்கற விஷயத்தை இல்லைன்னு சொல்றீங்கன்னு."

மறுபடியும் அந்த மாணவர்கள் சிரித்தார்கள்.

'இது விதண்டாவாதம்.'

"ஆமாம். இதை நீ இப்படித் தொட்டின்னா, விதண்டாவாதமாத்தான் போகும். நீ கடவுளை உணர்ந்த விதம் எப்படி அப்படின்னு என்னைக் கேளு. நான் அதுக்கு பதில் சொல்றேன். அல்லது யார்

நம்பறாங்களோ அவங்களைக் கேளு. ஆளுக்கொரு விதமா பதில் சொல்லுவாங்க. ஏனெனில் கடவுள் எல்லோருக்கும் ஒரே விதமாகக் காட்சி அளிப்பதில்லை. கடவுள் என்பது ஒரு சத்திய உணர்வு. அதை வெளிப்படுத்துகிறபொழுது எங்களோடு பகிர்ந்து கொள்கிற பொழுது என் மனம் விதம்விதமான விஷயங்களை உங்களுக்குச் சொல்ல முற்பட்டு ஒரு கலவையாக வந்து நிற்கும். சொல்லப்படாதவரை கடவுள் என்பது உருவம். உருவே இல்லையென்று சொல்லுகிற பொழுதுகூட அப்படிப் பேசுகிறவர்கள்கூட ஒரு உருவத்தைத்தான் இறுக்கப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். கடவுள் நின்ற இடம், இருந்த இடம், கிடந்த இடம் என்று ஏதோ ஒரு கட்டடத்தைத் தங்களுடைய வழிபாட்டுத் தலமாக மாற்றியிருக்கிறார்கள். கடவுளை வழிபடுகிற ஆலயத்தை தங்களுடைய சின்னமாகப் பொருத்திக் கொள்கிறார்கள். உன்னை நீ உருவமாகக் கொண்டுள்ள வரையில் உருவமற்றதை வணங்கவே முடியாது."

"கடவுளை வணங்க எது சரியான வழி?"

'நீங்கள் எதைப் பின்பற்றுகிறீர்களோ, எதைப் பின்பற்ற வேண்டுமென்று உங்களுக்குத் தோன்றுகிறதோ அதுவே சரியான வழி. இன்னவிதமாக வணங்குவதுதான் சரி என்றெவர் சொன்னாலும் அது முட்டாள்தனமாக போகும்."

"ஹரி ஹரி என்று சொன்னால் போதும். வேறு எதுவும் செய்ய வேண்டாம் என்று ஒருவர் பத்திரிகையில் பேட்டி கொடுத்திருகிறாரே."

"இதுவும் தவறு. கடவுள் இன்னது என்று கண்டு கொண்டவன் இந்த வழியில் போங்கள். இவ்விதமாகக் கடவுள் இருப்பார் என்று சொன்னதேயில்லை. கடவுள் என்பது பற்றி யாருக்கு கிஞ்சித்தும் தெரியாதோ அவர்கள் தான் கடவுள் இது, கடவுள் இன்னவிதம், கடவுளுக்கு இது போதும் என்றெல்லாம் சொல்லுகிறார்கள்."

"சரி கடவுள் என்பதுதான் என்ன?'

"அதைத்தான் கேட்காதீர்கள் என்றுஅவர் சொல்லுகிறார். ராதாகிருஷ்ணன் சொல்வது மிகச் சரி. கடவுள் எப்படி இருப்பார் என்று எவர் கேட்டாலும் அவருக்குப் பதில் சொல்பவர் தவறாகத்தான் பதில் சொல்லுவார். பதில் சொன்னவர் சரியாகச் சொன்னாலும் கேட்டுக் கொள்பவருக்குத் தவறாகத்தான் தோன்றும். ஏனெனில் இது பரிமாறிக் கொள்ளுகிற விஷயமில்லை. உன் வீட்டு வைக்கோல் போரில் நெருப்பு பிடித்ததே, நெருப்பு எப்படி எரிந்தது என்றால் என்ன சொல்ல முடியும். வினாடிக்கு வினாடி மாறிக் கொண்டிருக்கின்ற நெருப்பை எப்படி வர்ணிக்க முடியும். தகதகவென்று எரிந்தது என்று சொன்னால் அது போதுமா. அப்போது கேட்பவர் நெஞ்சில் ஒரு நெருப்பு தோன்றும். அது இவர் பார்த்த அவரே அதற்கு முன் பார்த்த நெருப்பு. எங்கோ, எப்பொழுதோ பார்த்த நெருப்பு. ஆக, சாதாரணமாக நெருப்பு என்கிற விஷயத்தையே நம்மால் துல்லியமாக, பார்த்ததை பார்த்தவிதமாக வெளியே சொல்ல முடியவில்லை. நமக்குச் சொல்லத் தெரியவில்லை. பரிமாறிக் கொள்ள முடியவில்லை. தொடர்பு சாதனம் இங்கு அத்தனை குப்பையாக இருக்கிறபொழுது, மொழி, கதை, கட்டுரை எல்லாம் பலவீனமாக இருக்கிறபொழுது, கடவுள் என்கிற விஷயத்தைப் பற்றி எப்படி பரிமாறிக் கொள்ள முடியும். அதை நீங்கள்தான் உணர வேண்டும்."

"சரி, அப்போது உங்களுடைய வேலை என்ன?"

வேறொரு இளைஞன் கேட்டான்.

"கடவுளைத் தேடுகின்ற வழி என்ன என்று ஒரு கேள்வி வருமல்லவா, அதற்குச் சொல்லிக் கொடுப்பது."

"அதுதான் ஹரிஹரி என்று சொன்னால் போதுமென்று சொல்கிறார்களே."

"அவர் அது மட்டும் சொல்லவில்லை. ஹரி ஹரி என்று சொன்னால் போதும். ஸ்ரீவித்யையோ, ஆத்ம விசாரமோ, வேறு வித வழிபாடுகளோ வேண்டாம் என்றும் சொல்கிறார்."

"இது தவறு. நானும் அந்தக் கட்டுரையைப் படித்தேன். மிகத் தவறான வழியில் அவர் பதில் அமைந்திருக்கிறது. சனாதன தர்மத்தின் அத்தனை வேதங்களும் ஆத்ம விசாரத்தைப் பற்றித்தான் பேசுகின்றன. ஆத்ம விசாரப்படவில்லையெனில், நான் யார் என்ற கேள்வி இல்லையெனில் வேறு என்ன செய்தும் புண்ணியமில்லை. ஸ்ரீவித்யை என்கிற அற்புத மான ஒரு வழி. மந்திர ஜபங்களும், யந்திர பூஜையும் நிறைந்த அந்த வழி, உங்களுக்கு ஆத்ம விசாரத்தைக் கொண்டு வந்து கொடுக்கிறது. ஆத்ம விசாரத்திலெல் லாம் நாட்டம் செலுத்தாதீர்கள் என்று எவர் சொன் னாலும் அது அபத்தம்; ஏக நாமம், ஸ்ரீவித்யை, ஆத்ம விசாரம் எல்லாமே கடவுளை அறிய வழிகள். வாகனங் கள் தான்.

சங்கரய்யர் பேச்சில் மெல்ல ஒரு கோபம் கொப் பளித்தது.

"தன்னை விசாரித்தல் தான் யார் என்று அறிதல். தன்னை அறிதல் மூலமாக அடுத்து இருக்கின்ற ஜனங் களின் இருப்பைப் பார்த்தல், அவரும் நானும் ஒன்றே என்று தெளிதல். சகலமும் ஒரே விஷயம் பிளவு பட்டி ருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளுதல். இதைச் சத்தியமாக, நேரடியாக, தெளிவாக, முழுமையாக அனுபவித்தல், இந்த அனுபவத்தைத்தான் பலரும் நாடிப் போய்க் கொண்டிருக்கிறார்கள்.

அதற்குப் பல வழிகள் இருக்கின்றன. திசை தொழுதலும் சிலுவையை வணங்குவதும் மற்ற எல்லா மதங்களும் சொல்லுகின்ற கடவுள் தேடும் வழியும் ஆத்ம விசாரத்தைத்தான் நோக்கி நகர்ந்து கொண்டிருக் கின்றன. இந்த ஆத்மவிசாரம் வேண்டாம் என்று யார்

சொன்னாலும் அது அபத்தத்தின் உச்ச கட்டம். ஆத்ம விசாரம் எல்லோருக்கும் வராது என்று சொன்னாலும் அதுவும் முட்டாள்தனம். இங்கு நடக்கின்ற கடவுள் வழிபாடு எல்லாமுமே ஆத்ம விசாரம் கற்றுக் கொடுப் பதைத்தான் அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன."

சங்கரய்யர் வேகமாகப் பேசினார்.

30

"ஹரி ஹரி என்று ஆடுவது தவறா? அதுவும் வழிபாடுதானே?"

கூட்டத்திலிருந்த ஓர் இளம் பெண் கேட்டாள். சங்கரய்யர் உடனே அவள் பக்கம் திரும்பினார்.

"வழிபாட்டில் எவ்வளவு மும்முரமாக இருக்கிறீர்கள் என்பதுதான் இங்கே முக்கியமான கேள்வி. 'ஹரி ஹரி' என்று ஆடினால் போதும் என்று தயவு செய்து நினைக்காதீர்கள்." கும்பலான ஆட்டத்தில் மனசு சிதற வாய்ப்புண்டு.

"கடவுள் என்பது சீரியஸுக்கும் சீரியஸான விஷயம். போதும் என்று சொல்வதெல்லாம் வெறும் பம்மாத்தாகவே முடியும். ஹரி ஹரி என்று கும்மி யடித்துவிட்டு, பிறகு பொங்கல் வடை சாப்பிட்டு அரட்டை அடித்திருப்பதால் எந்த மாறுதலும் மனசுக் குள் ஏற்படாது. தனிமையைக் கொடுக்கின்ற உங்களை உற்றுப் பார்க்கின்ற அமைதியைக் கொடுக்கின்ற வழிபாடுதான் மிகச் சிறந்தது. ஹரிஹரி என்று ஆரம்பி யுங்கள். அதைத் தவறு என்று நான் சொல்லவில்லை. ஒரு புளியமரத்தின் இலைபோல பல பிறவிகளுக்கு நீங்கள் ஹரி ஹரி என்ற சொல்லி பிற்பாடுதான் ஆத்ம விசாரம் அடைய முடியும்."

"தெளிவாகச் சொல்லுங்கள்... எது உங்களுடைய கடவுள் வழிபாடு?" மறுபடியும் அதே பெண் கேட்டாள்.

"மந்திர ஜபங்கள்தான். வழிபாட்டை மும்முரமாக்கும். மந்திர ஜபங்கள் செய்வதற்கு நாடி சுத்தி என்ற மூச்சுப் பயிற்சியும் அதைத் தொடர்ந்து பிராணாயாமமும், பிராணாயாமத்தைத் தொடர்ந்த யோகப் பயிற்சியும் மிக முக்கியம். ஆறு கடக்கும் வரை ஓடத்தை ஒழுங்காகப் பேண வேண்டும். உனக்குள் கடவுள் நிலை கொள்ளும் வரை உடம்பைப் பாதுகாத்தல் மிக முக்கியம். யோகப் பயிற்சியால் உடம்பைச் சீராக்கிக் கொண்டு மூச்சை சீராக்குவதால் மனத்தை, யோசிப்பைச் சீராக்கிக் கொண்டு யோசிப்பை சீராக்குவதால் ஆழ்ந்த ஓர் அமைதியை ஏற்படுத்திக் கொண்டு அந்த அமைதியில் விளைந்த சுகத்தில் நிம்மதியில் உள்ளிருப்பது யார் என்று கூர்மையாக இடையறாது இடையறாது கவனிக்கப் பழகிக் கொண்டால் கடவுள் தரிசனம் கிடைத்தாலும் கிடைக்கலாம்."

"என்ன சொல்கிறீர்கள். இப்படிச் செய்தால் கிடைக்குமென்று நிச்சயமான வழியில்லையா?"

"உங்கள் வீட்டு ஜன்னல் கதவுகளை நன்கு திறந்து வைத்து வீட்டைச் சுத்தம் செய்து கதவுகளையும் அகல விரித்து காத்திருந்தால் தென்றல் வந்தாலும் வரலாம். தென்றல் வரும்போது வீடு நாறிக் கொண்டிருந்தால், வீடு பூட்டிக் கிடந்தால் என்ன புண்ணியம். அதே போல கடவுள் வரும்போது உங்கள் மனம் வெறும் பொங்கல் வடையில் அரட்டை கூத்தில் வெறும் வம்புப் பேச்சில் ஆழ்ந்திருந்தால் என்ன புண்ணியம். ஆகவே உள்ளுக்குள் உள்ள அமைதியைத் தூண்டி விடக் கூடிய பயிற்சியைப் பெறுகின்ற வழிபாடுதான் மிக முக்கியம்."

"கடவுளைக் காணுதல் எளிதில்லை என்று சொல்கிறீர்களா?"

"'நான் மட்டும் சொல்லவில்லை. உலகிலுள்ள அத்தனை பேரும் அதைத்தான் சொல்கிறார்கள். எல்லா மகான்களும் இதைத்தான் சொல்லியிருக்கிறார்கள்.

கடவுளைக் காட்டுங்கள் என்று ஒரு பக்தன் கேட்டபோது ராமகிருஷ்ண பரமஹம்ஸர் அவனை கங்கைக்கு அழைத்துப் போய் மூழ்கச் சொல்லி, மூன்றாம் முறை அவன் மூழ்கிறபோது அவன் தலையை அழுத்திப் பிடித்து வெளியே வரவொட்டாமல் செய்தார். அவன் திகைத்துத் திணறி உதறிக் கொண்டு வெளியே வந்து நின்று என்னை கொல்லப் பார்க்கிறீர்களே என்று கத்தினான். அப்போது ராமகிருஷ்ண பரமஹம்ஸர் மிருதுவாகச் சொன்னார். ஒருபிடி மூச்சுக்காக எப்படித் தவித்தாய். எத்தனை வேதனைப்பட்டாய். இது போல பலமடங்கு தவிப்பு இருந்தால்தான் கடவுளைக் காண முடியும் என்று சொன்னார்."

சங்கரய்யர் பெருமூச்சு விட்டார். தொடர்ந்து பேசினார்.

"நான் என் குருவோடு சண்டை போட்டவன். கேள்வி கேட்டவன். அவரோடு முறைப்பாகப் பேசியவன். ஆனால் என் குரு கருணையின் வடிவம். அது என்னைப் பல்வேறு விதமாக ஆசுவாசப்படுத்தி அமைதிப்படுத்தி என்னுடைய யோக்கியதைக்கும் மிஞ்சி பல்வேறு விஷயங்களை எனக்குள் புகுத்தியது. என்னை உருமாற்றியது. உள்ளத்தில் புத்துணர்ச்சியை ஏற்படுத்தியது. அம்மாதிரி ஏற்படுத்த எல்லோராலும் இயலாது. மகான்களால் மட்டுமே இயலும். என் குரு ஒரு மகான்."

சங்கரய்யர் கை கூப்பினார். கண் மூடி அமைதியாக உட்கார்ந்திருந்தார்.

கூட்டம் அவரையே பார்த்துக் கொண்டிருந்தது.

"கடவுளை அடைய கடுமையாக உழைக்க வேண்டும் என்று சொல்கிறீர்கள். அவ்வளவுதானே?"

ஒரு பெண் கேட்டாள்.

"ஆமாம். அவ்வளவுதான். இது இடையறாத பணி. மூச்சு இருக்கும்வரை வெகு வேகமாகச் செய்ய வேண்டிய பணி. சற்று கூட ஓய்வில்லாமல் உள்ளுக்குள்

இதே சிந்தனையாக இருக்க வேண்டிய விஷயம். ஏனெனில் ஒன்பதிலிருந்து ஆறு மணி வரை அலுவலகம். பிறகு வீடு, பிறகு ஏழு மணியிலிருந்து ஒன்பது வரை பஜன் என்றெல்லாம் வெறும் தளுக்குத்தனமாக இருந்தால் போதாது. சத்சங்கம் ஒரு ஆரம்பம். பிறகு நீண்ட நெடுந்தூரம் போக வேண்டும். ராதாகிருஷ்ணன் நீங்கள் போகலாம்."

சட்டென்று சங்கரய்யர் திரும்பி ராதாகிருஷ்ணனைப் பார்த்து கைகூப்பி விடை கொடுத்தார்.

நீண்ட நெடுந்தூரம் போக வேண்டுமென்று சொன்னதும் நீங்கள் போகலாம் என்று உத்தரவிட்டதும் ராதாகிருஷ்ணனைத் திகைக்க வைத்தன. இந்த இரண்டும் ஒரே சொல் என்று தோன்றியது.

அவர் எழுந்தார். கை கூப்பினார். நீண்ட நெடுஞ் சாண்கிடையாக மனைவியோடு விழுந்து வணங்கினார்.

"எவ்வளவு சீக்கிரம் கிளம்ப முடியுமோ அவ்வளவு சீக்கிரம் கிளம்பறேன்."

"ஆமாம். எந்தப் பக்கம் போகற மாதிரி உத்தேசம்?"

"தாம்பரம் பக்கம் நன்னாயிருக்குன்னு சொல்லியிருக்கா. அங்க போய் நிலம் பார்க்கலாம்னு நினைச்சுண்டிருக்கேன்"

"தாம்பரம் பக்கம் பல கிராமங்கள் அருமையாக இருக்கு. செழிப்பான பூமி. வயல்கள் நிறைந்த பிரதேசம். நகர்ப்புறத்திற்கு அருகே இருக்கிற ஜனங்கள். பட்டணத்து மோகத்தால் நிலத்தை வித்துட்டு சிட்டிக்குள்ள வந்துடறா. இங்க வந்து சின்ன குடிசைக்குள்ள வாழ்க்கையை ஆரம்பிக்கிறா. அந்த நிலம் அந்தக் காத்து அதனுடைய சுகம் அவாளுக்குத் தெரியலை. சம்பாத்தியம் பட்டணத்துலதான் இருக்குன்னு ஒரு தப்பான அபிப்ராயம். நீங்களெல்லாம் அங்க போனா அங்கிருக்கற ஜனங்களைத் தக்க வைக்கலாம். அதுதான் உங்க இடம்."

ராதாகிருஷ்ணனும் ரேவதியும் மறுபடியும் கைகூப்பும்போது எழுந்து நின்று சங்கரய்யரும் கை கூப்பினார்.

"சௌக்கியமா இருப்பேள். இடையறாத இடையறாத மந்திர ஜபம் ரொம்ப முக்கியம். நிறைய மந்திரஜபம் பண்ணுங்கோ. உக்கிரமா பண்ணுங்கோ, திரும்பத் திரும்ப பண்ணுங்கோ. ஏதோ ஓர் இடத்துல ஒரு பிடிமானம் ஏற்படும். இது இன்னதுன்னு சொல்லவே முடியாது. அப்பேர்ப்பட்ட ஒரு சுகம். மிகப்பெரிய சந்தோஷம். அளப்பரிய ஒரு அமைதி உள்ளுக்குள்ள ஏற்படும். நான் சொல்ற இந்த வார்த்தையும்கூட சரியாக இல்லை.'

உள்ளே ஏதோ உடைந்தது. ஏதோ நிறைந்தது.

ராதாகிருஷ்ணனுக்குத் தன் வாழ்க்கை திசை மாறியது மிக நன்றாகத் தெரிந்தது.

புருஷனும் மனைவியும் காலையிலிருந்து மாலை வரை விதம்விதமான இடங்களில் உட்கார்ந்து ஜபம் செய்யத் துவங்கினார்கள். ஒருவருக்கொருவர் அதிகம் பேசாது சங்கரய்யர் என்ன சொல்லிக் கொடுத்தாரோ, அதேவிதமாக பயிற்சி செய்யத் துவங்கினார்கள்.

"ஒரு வருஷம் கொடுத்திருக்காங்கறதுக்கு ஒரு வருஷம் முழுக்க இருக்கணுமா. கொஞ்சம் முன்னாடியே நாம நகர்ந்துட்டா என்ன?"

"நானும் அதுதான் யோசனை பண்றேன்."

ரேவதியின் கேள்விக்கு ராதாகிருஷ்ணன் பதில் சொன்னார்.

"தாம்பரம் பக்கம் வீடு வாடகைக்கு எடுத்துண்டு போயிடலாமான்னு பார்க்கறேன்."

"எதுக்கு வாடகைக்கு. வீடு வாங்க வேண்டாமா?"

ஆயிரத்து ஐந்நூறு ரூபாய்க்கு இரண்டு ரூம் ஒரு ஹாலோட நல்ல ஃப்ளாட். வாடகைக்குக் கிடைக்

கறது. தாம்பரத்துலே தங்கினால் குழந்தைகளுக்குப் படிப்பு சுலபம். காலேஜ் போகிறவரைக்கும் அங்க சௌகரியமா இருந்துட்டு, அதுக்கப்புறம் இன்னும் தெற்கே நகரலாம். ஆனா, இப்பவே தாம்பரத்துக்கு அந்தப் பக்கம் கொஞ்சம் நிலம் வாங்கிப்போடலாம்."

"ஏன் தாம்பரத்துலேயே வாங்கினா என்ன?"

"நம்மகிட்ட இருக்கற காசுக்கு நிறைய வாங்க முடியாது."

"ஒரு கிரவுண்ட் கிடைக்காதா?"

"கிடைக்கும். இரண்டு கிரவுண்டே கிடைக்கும்."

"எங்க நிலம் வாங்கப் போறேள்."

"பெருங்களத்தூர்ல."

"எவ்வளவு வாங்கப்போறேள்."

"ஆறு கிரவுண்டோ, ஏழு கிரவுண்டோ."

'ப்பா.. ஆறு கிரவுண்டா"

"பின்னால பிரிச்சு வித்துடலாம்."

"சாப்பாட்டுக்கு, குழந்தேள் படிப்புக்கு?"

"அங்கே தாம்பரத்துலயே ஏதாவது ஒரு கம்பெனியில வேலை செய்ய வேண்டியதுதான். இல்லை சாப்பாட்டுக் கடை ஆரம்பிக்க வேண்டியதுதான்."

"அடாடா அது பண்ணலாம். சின்னதா மெஸ் மாதிரி ஆரம்பிக்கலாம்."

"ஆனால் குழந்தேள் படிக்க முடியாது. அதுங்க ரொம்ப நன்னாப் படிக்கணும். குறிப்பா இந்தப் புள்ள நன்னாப் படிப்பான்னு எனக்குத் தோண்றது. படிக்கிற ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தணும். மெஸ் நடத்தினா அவாள தூக்கு, இறக்கு பரிமாறு, துடைச்சு வை, அப்படின்னு ஏவுவோம். பசங்க இதுதான் சாக்குன்னு வேலைக்கு வருவா. படிப்பு பாழாய்ப் போயிடும். மெஸ் கூடவே கூடாது."

"அப்போ வேறே என்ன வேலை?"

"மளிகைக் கடை ஆரம்பிக்கலாமா?"

"நமக்கு அதுக்கு சாமர்த்தியம் போறாது."

"உங்களால டியூஷன் சொல்லத் தர முடியுமா?"

"எனக்கு அப்படியொரு எண்ணம் இருந்தது. ஆனால் இன்னிக்குப் படிப்பு வேற, நம்ம படிப்பு வேற எவ்வளவு தூரம் எனக்கு சரியா டியூஷன் சொல்லித் தர முடியும்னு தெரியலை. பள்ளிக்கூடத்துல இருக்கற வாத்தியாரை விட்டு நம்மகிட்ட வந்து டியூஷன் படிப்பானான்னும் தெரியலை."

"தம்புச் செடித் தெருவிலேர்ந்து புடவை வாங்கிண்டு வந்து அதைக் கொண்டு போய் தாம்பரத்துல வித்தா?"

"விக்கலாம். நான் புடவை மூட்டை தூக்கிண்டு போய் விக்க முடியுமா? எனக்கு அந்த அமைதி வருமா? ரொம்ப இனிமையா பேசணும். என் முகம் கொஞ்ச முரடு. நான் திரும்பிப் பார்த்தேன்னா பொம்மனாட்டிகள் பயந்து எழுந்து போயிடுவா. அப்படியே வேகமாப் பார்த்து பழக்கமாயிடுத்து. மிருதுவா பார்க்கக் கூட தெரியலைங்கறபோது பேச எப்படித் தெரியும். புடவை வியாபாரத்துக்கு நான் லாயக்கில்லை."

31

"வேற என்னதான் பண்ணப் போறேள்?"

ராதாகிருஷ்ணன் ரேவதியை உற்றுப் பார்த்தார்.

"புரோகிதமும் உங்களுக்குத் தெரியாதே."

"கத்துக்கலாமே."

"என்ன திவச சாப்பாடு சாப்பிடப்போறேளா?"

"அப்படியில்லை. ஹோமம் பண்றதுக்கு."

"அது பெரிய படிப்பில்லையா."

"ஆமாம். ஒரு வருஷத்துப் படிப்புன்னு வச்சுப்போம். ஒரு வருஷத்துல நிறைய விஷயங்கள் மனப்பாடம் பண்ணி தெரிஞ்சுண்டு உதவியா போய்ப் போய் பிறகு சுயமா செய்ய முடியாதா? அந்த ஒரு வருஷத்துல உதவியா போகற வரைக்கும் இதுலேர்ந்து வர வருமானம் நமக்குச் சரியா வராதா? ஏழு லட்ச ரூபாய்க்கு ஏழு கிரவுண்ட் நிலம் வாங்கறது. ரெண்டு லட்ச ரூபாயைச் சாப்பாட்டுக்கு வச்சுக்கறது. செலவுக்கு வச்சுக்கறது."

"உங்களைப் புரோகிதரா பார்க்க எனக்குப் பிடிக்கலையே."

"எனக்குள்ள ஒரு கர்வம் இருக்கு. அந்தக் கர்வம் என்னை புரோகிதனா வேலை செய்யச் சொல்றது. எனக்குப் புரோகிதனா இருக்கறதுக்குப் பிடிக்கும்."

"எனக்குப் பிடிக்கலை. இப்படி கிராப்பை வச்சுண்டு எப்படி புரோகிதரா இருக்கறது?"

"இல்லை. நான் குடுமிக்குப் போயிடப் போறேன். பேண்ட் போடப் போறதில்ல. இனிமே பஞ்சகச்சம் வேஷ்டிதான்."

"என்ன தடார்னு மாறிடறேளே."

"என்னமோ உள்ள அப்படித்தான் மாறிடுத்து."

"புரோகிதம்தானா?"

"இல்லை. அதையும் உறுதியாக என்னால சொல்ல முடியலை."

"அப்பா பொழைச்சேன்."

"வேற ஏதாவது ஒரு வழி இருக்கும்."

"நிலம் விக்கறது வாங்கறது புரோக்கரா போனா?"

'பகவானே. ரேவதி உனக்குப் பைத்தியமா பிடிச்சுருக்கு? ஏகப்பட்ட பொய் சொல்லணும். என்னால பொய் சொல்ல முடியாது. ரேவதி."

"ஒண்ணுமே வழியில்லைன்னா, என்ன பண்றதா இருக்கேள்."

இதே தம்புச் செட்டித்தெருவுல. அரண்மனைக் காரத் தெருவுல எனக்கு ஏதாவது ஒரு கம்பெனியில ஏதாவது ஒரு வேலை கிடைக்கும். தாம்பரத்துலேர்ந்து ட்ரெய்ன் பிடிச்சு துறைமுகம் இறங்கி துறைமுகத்துலேர்ந்து மெல்ல நடந்து ஆபீஸுக்கு வந்து வேலை செய்து போகணும்."

"அதாவது கார்த்தால ஏழு மணிக்குப் போயிட்டு ராத்திரி எட்டு மணிக்கு வரணும்."

"ஆமாம். கடைசிப் பக்கம் அந்த வேலை இருக்கு. ஆனால் இந்த அலைச்சல் இல்லாத வேற ஏதோ வேலை கிடைக்கும்னு தோன்றது."

"இந்த ஆபீஸ் வேலையே வேண்டாம்னு சொன்னாரே சங்கரய்யர்."

"ஆமாம். எதனால சொன்னாருன்னு தெரியலை. நாம முதல்ல தாம்பரம் பக்கமா போயிடுவோமா?"

"போயிடுவோம். அதுக்கு முன்னாடி ஒரு ரவுண்ட் அடிப்போம்."

அவர்கள் நல்ல நேரம் பார்த்து தாம்பரத்திற்கு மின் வண்டி ஏறிப்போனார்கள். அங்குள்ள புரோக்கர்களிடம் வீடு விசாரித்தார்கள். கார்வைத்துக் கொண்டு ஊர் சுற்றினார்கள். அந்த வழியே போகிற ஒரு அந்தணரை நிறுத்தி இங்கு ஏதேனும் வாடகைக்கு வீடு கிடைக்குமா என்று கேட்க, அவர் இரண்டு மூன்று இடங்கள் காண்பித்தார். உள்ளடங்கி சில வீடுகள் உடனடியான குடியேற்றத்திற்குத் தயாராக இருந்தன. ஆனால் அது குழந்தைகளுக்கு, பள்ளிக் கூடத்திற்குத் தொலைவாக இருந்தது. மழைக்காலத்தில் சேறு அதிக

மாக இருக்கும் என்று சொல்லப்பட்டது. தாம்பரம் ரயில் நிலையத்தை ஒட்டி ஒரு ஃபர்லாங்குக்குள் வீடு தேடினார்.

ஆறு ஃப்ளாட் அடங்கிய ஒரு கட்டடத்தைக் காண்பித்தார்கள். அங்கு போய் நிற்க, "மாடியில இருக்கற ஒருத்தரைக் காலி பண்ணச் சொல்லியிருக்கேன். ரெண்டு மாசம் டைம் கேக்கறா. நீங்க இப்பவே அட்வான்ஸ் கொடுத்தேள்னா, அடுத்தபடியா உங்களுக்கு விட்டுடறேன்."

"அவாள ஏன் காலி பண்ணச் சொல்றேள்?"

"மாமிசம் சாப்பிட மாட்டேன்னு சொல்லிட்டு, இப்போ மாமிசம் சாப்பிடறா. எனக்குப் பிடிக்கலை. முட்டை சமைக்கறாங்க. அந்த வாசனை அக்கம்பக்கம் போகுது. அவங்க குத்தம் சொல்றாங்க. எங்களால சகிச்சுக்க முடியலைன்னு சொல்றாங்க. இவங்க முட்டைதானே பரவாயில்லைன்றாங்க. ஆனா, முட்டை மட்டுமில்லை. கடையிலேர்ந்து மாமிசம் வாங்கிச் சாப்பிடறதா கேள்விப்படறோம். கேட்டதுக்கு ஆமான்னு சொல்லிட்டாங்க. காலி பண்ணுங்கோன்னு சொன்னோம். சரின்னு சொல்லிட்டாங்க. நீங்க வந்தீங்கன்னா எனக்கும் சந்தோஷம். ஆனா, இப்பவே சொல்லிடுங்க."

அவர்கள் அந்த வீட்டைச் சுற்றிப் பார்த்தார்கள். அவருக்கு வீடு பிடித்திருந்தது.

இப்பொழுது இருக்கற குடித்தனம் சரியில்லை என்பது நாற்காலி, மேஜையிலிருந்து தெரிந்தது. அதிகம் படிப்பவர்கள், வெளிநாட்டுக்குப் போகத் துடிப்பவர்கள், வெளிநாட்டுப் பழக்கங்களை இங்கேயே கொண்டு வந்தவர்கள் என்பது தெரிந்தது.

"இன்னும் ஆறு மாசம் பொறுத்தார்னா நாங்க அத்தனை பேரும் கனடா போயிடுவோம் ஸார். எங்களுக்கு இங்க பரீட்சை ஒண்ணு இருக்கு. இவர் சொன்னா கேக்க மாட்டேங்கறார். உடனே காலி பண்ணு. உடனே காலி பண்ணுங்கறார்."

"அவருக்குப் பிடிக்காத விஷயத்தைச் செய்யாம இருந்தா நன்னாயிருக்குமே? ஆறு மாசம்தானே. நீங்க சாப்பிட வேண்டியதை வெளிய சாப்பிட்டுக்கலாமே. அவருக்குத் தொந்தரவுதானே."

"இவர் ஒண்ணும் தொந்தரவு இல்லை ஸார். எதிர் வீட்ல ஒரு பொம்பளை சும்மா டீஸ் பண்ணுது. நாங்க வெளியூருக்குப் போகப் போறோம்னு சொல்லிடோம். அந்த அம்மாவுக்குப் பொறாமை. அந்த அம்மாவோட பசங்களெல்லாம் தத்திங்க. எதுவும் படிக்காம ஊரைச் சுத்திண்டிருக்காங்க. நாங்க வெளிதேசம் போறோம்னவுடனே அந்தம்மா எங்க மேல காண்டு ஆயிடுச்சு."

"என்ன படிக்கிறீங்க?"

"என் தம்பி ஃபார்மஸி லைன்ல இருக்கான். நான் பிஸியோதெரபிஸ்ட். என் ஸிஸ்டர் லண்டன்ல இருக்கா. கல்யாணமாயிடுச்சு. லண்டன் போய் ஒரு இன்ஸ்டிடியூட்ல ஜாயின் பண்ணி, பிறகு அங்கேர்ந்து கனடா போயிடலாம்னு நினைச்கண்டிருக்கோம். ஆறுமாசம் தான். இங்க எங்க படிப்பு முடிஞ்சுடும். தயவுசெய்து நீங்க முதலியார்கிட்ட சொல்லுங்க ஸார்."

"உங்ககிட்ட ஜாதகம் இருக்கா?"

"என்னது?"

"உன்னுடைய ஜாதகம் இருந்தாக் கொடு."

கைநீட்டிப் பேசிய பையனை, கனிவாக ராதாகிருஷ்ணன் பார்த்தார்.

அவன் அவரை சோபாவில் உட்காரச் சொன்னான். அவன் கொண்டு வந்த நோட்டுப் புத்தகத்தைப் பிரித்து அவனுடைய ஜாதகத்தை ஆராய்ந்தார்.

"நிச்சயமா உனக்கு வாழ்க்கை வெளிதேசத்துலதான். உன் தம்பிக்கும் அந்த அம்சம் ஜாஸ்தியா இருக்கு. உன் தம்பி திரும்பி வருவான். ஆனால், உனக்குக் கடைசி வரைக்கும், வாழ்வு முழுவதும் வெளிதேசத்துலதான் இருக்கு. ஆயுசும் நன்னாயிருக்கு. கவலைப்படாதே. நீங்க இங்க ஆறுமாசம் தங்கறதுக்கு நான் இவர்கிட்ட பர்மிஷன் கேட்கறேன். கொஞ்சம் அசைவ சாப்பாடு மட்டும் இங்க சாப்பிடாம இரு."

"சரி ஸார். நான் சாப்பிடாம இருக்கேன். அந்தம்மா ரொம்ப காண்டு."

"விட்டுடுப்பா. அதைப் பத்திப் பேசாதே."

"என் தங்கை நிறை மாசமா இருக்கா. அவங்க இங்க வரமுடியலை. அங்கயே குழந்தை பெத்துக்கறதுதான் நல்லதுன்றாங்க. அம்மாவை அனுப்பச் சொல்றாங்க. அம்மாவை அங்க அனுப்பினாக்க இங்க சமைக்கறது கஷ்டம். நாங்க முட்டை சமைக்கறதுக்கே சொல்றாங்க. அம்மாவும் போயிட்டாக்க, நாங்க வேற என்ன சமைப்போம்?"

"அம்மா போயிட்டா சமைக்காம இருக்கலாம். வாங்கிச் சாப்பிடலாம். அம்மாவை அங்க அனுப்பு. அது நல்லது. தங்கைக்குப் பொண் குழந்தை பிறக்கும்."

"எப்படி ஸார் சொல்றீங்க?"

"அவ ஜாதகம் சொல்றதே. நோட் புக்ல எல்லா ஜாதகமும் எழுதியிருக்கீங்களே."

"இது மாப்பிள்ளை ஜாதகம் ஸார்."

"அடடா... உத்திரட்டாதி நட்சத்திரம். ரொம்ப நல்லவன். ரொம்ப இனிமையானவன். தாசனாவே இருப்பான். அவனைக் கொண்டாடினா அவனுக்கு ரொம்ப பிடிக்கும்."

"ஆமாம் ஸார். மாப்பிள்ளைக்கு அவரைப் புகழ்ந்து சொன்னா ரொம்ப சந்தோஷமாயிடறார்."

"அம்மாவை அனுப்பு. மாப்பிள்ளைய மரியாதையா நடத்தச் சொல்லு."

"ஸார். வந்து கடவுள் மாதிரி பேசறீங்க."

"கவலைப்படாதே தம்பி. ஆறுமாசம் முடியட்டும். அப்புறம் இந்த வீட்டை நான் எடுத்துக்கறேன். அவருக்கு இப்பவே அட்வான்ஸை கொடுத்துடுப்போறேன்."

ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் வாடகை என்று பேசி, பதினைந்தாயிரம் ரூபாய்க்கு அவரிடம் காசோலை கொடுத்து, ஆறு மாதத்திற்குப் பிறகு இந்த இடம் தனக்கு வேண்டுமென்று எழுதி வாங்கிக் கொண்டார்.

"நான் கொடுக்கறதுக்கு ரெடி. அந்தப் பசங்க நின்னுட்டாங்கன்னா, அப்புறம் என்னைக் கேட்காதீங்க."

"அந்தப் பசங்க நிக்கவே மாட்டாங்க. ஆறு மாசத்துக்கு முன்னாடியே கிளம்பிடுவாங்க. எனக்குக் கொஞ்சம் வெள்ளையடிச்சு சுத்தம் பண்ணித்தரணும்."

"அதெல்லாம் பண்ணிக் கொடுத்துடலாம்."

"எதிர்வீட்ல இருக்கற அம்மா யாரு?"

"அதுவொரு கிறுக்கு. எதுவோ சாப்பிடு போறாங்கன்னு இல்லாத, தினம் கீழ வந்து, பாருங்க, சாப்பிடறாங்க பாருங்க. சாப்பிடறாங்கன்னா, எனக்கு பேஜராயிடப் போகுது."

"அந்தம்மாவையும் முடிஞ்ச போது காலி பண்ணச் சொல்லுங்க."

"அந்தம்மாவும் அப்படித்தான் சொல்லுது. எதிர் வீட்ல இருக்கறவங்க காலி பண்ணலைன்னா, நான் காலி பண்றேன்னு சொல்லுது."

"நல்லவேளை. உடனே காலி பண்ணச் சொல்லுங்க."

"மேலயிருக்கும்போது ஜோசியமெல்லாம் சொன்னீங்க போலிருக்கே."

"ஆமாம். எப்படித் தெரிஞ்சது."

"நான் வந்தேன். நீங்க உட்கார்ந்து பேசிக்கிட்டிருந்தது தெரிஞ்சுது. நமக்கு ஜோசியம் சொல்லக் கூடாதா?"

"சொல்றனே. என்ன சமாச்சாரம்?"

"படப்பை பக்கம் நிலம் வாங்கியிருக்கேன். நிலத்துக் காரருடைய பையன் ஒருத்தன் வழக்கு போடப் போறேன்றான். கொஞ்சம் கூட காசு கேட்கறான். நாலு பேர் கையெழுத்து போட்டுட்டாங்க. அஞ்சாவதா ஒரு பையன் இருக்கான். அவன் ரெண்டாவது சம்ஸாரத்துப் பையன். அவன் எனக்கும் உரிமை உண்டுன்றான்."

"ஆமாம். உரிமை உண்டாச்சே."

"அவரு சொல்லவேயில்லை. இப்போ அந்தப் பையன் வந்து நிக்கறான்."

"எவ்வளவு கேட்கறான் கூட."

"நாப்பதாயிரம் ரூபா கேட்கறாங்க."

"கொடுத்துடலாமே."

"இல்லீங்க. ஏற்கெனவே கூட கொடுத்துட்டு வாங்கிட்டேன். இப்போ நாப்பதாயிரம்னு வேற சொன்னா, நான் என்ன பண்றது?"

"உங்களுக்கு என்ன வேணும்?"

"அந்தப் பையனும் வந்து கையெழுத்துப் போடணும்."

"சும்மாவா?"

"பதினைஞ்சாயிரம் வரைக்கும் கொடுக்கலாம்."

"நான் ஒண்ணு பண்றேன். உங்களோட இன்னொரு நாள் வந்து, அவங்கிட்ட பேசிப் பார்க்கிறேன்."

"எப்போ வருவீங்க?"

"நீங்க எப்போ சொல்றீங்களோ, அப்போ வரேன்."

"உங்களுக்குப் பட்டணத்துல வேலை ஜாஸ்தியிருக்குமே."

"நீங்க தெரிஞ்சவங்களா போயிட்டீங்க. உதவின்னு கேட்கறீங்க, வந்துதானே செய்தாகணும்.'

"நாளைக்குக் காலையில வர்றீங்களா?"

"இதே நேரத்துக்கு வரோம். நீங்க அவங்களைப் பார்க்கறதுக்கு ஏற்பாடு பண்ணுங்க. நான் போய் சமாதானம் பேசறேன்."

"முரட்டு ஜனங்க."

"அதெல்லாம் பார்த்துக்கலாம்."

மறுநாள் ராதாகிருஷ்ணனும் ரேவதியும் போனார்கள்.

"எவ்வளவு நிலம் வாங்கியிருக்கீங்க?"

"பன்னிரண்டு ஏக்கர்."

"எவ்வளவு?"

"பன்னிரண்டு ஏக்கர்."

"எதுக்கு அவ்ளோ நிலம். விவசாயத்துக்கா?"

"இல்லீங்க. பிரிச்சு விக்கலாம்னு நினைச்சுண்டிருக்கேன்."

"எப்போ?"

"பின்னாடி ஆறேழு வருஷத்துக்கு அப்பால."

"அப்போ விலை போகுங்களா?"

"நல்லா விலை போகும்."

"நான் இப்படித்தானே இந்த இடத்தை வாங்கினேன். இந்திராகாந்தி பதவிக்கு வந்தபோது, நான் இந்த இடத்துக்கு வந்தேன். இந்த நிலத்தை வாங்கிப் போட்டேன். இன்னிக்கு இதே நிலத்தை வித்து வித்து இந்தக் கட்டடம் கட்டினேன். இது மூணே கால் கிரவுண்ட். நான் வாங்கினது பன்னிரண்டு கிரவுண்ட்."

"அதென்ன பன்னிரண்டு?"

"எனக்கென்னமோ பன்னிரண்டு நல்ல நம்பரா வருதுங்க."

"பன்னெண்டு நல்ல நம்பரா வந்தாக்க செவ்வாய் உமக்கு உச்சம்னு அர்த்தம். காலையில உங்க ஜாதகத்தையும் எடுத்து வைங்க. நாங்க வந்து பார்க்கறோம்."

"நேத்து வந்திங்க. பதினைஞ்சாயிரம் ரூபா கொடுத்திங்க. உதவி செய்யறேன்னு சொல்றீங்க. ஆச்சரியமா இருக்கு. ஏன் மெ ராஸை வி டு இங்க வர்றீங்க,"

"மெ ராஸ் ரொம்ப நெரிசலாப் போச்சு. என்னால அங்க இருக்க முடியலை. கொஞ்சம் காத்தோ டமா இருக்கணும்னு தோன்றது."

"வந்திருங்கய்யா, இந்த இடத்துக்கு வந்துருங்க. சின்னப் பசங்க படிக்கறதுக்கு தாம்பரம்தான் வா டமான இடம். அடுத்தபடியா நிலம் வாங்கறதுக்கு நான் உதவி செய்யறேன். நம்ம பக்கத்து நிலங்களெல் லாம் கூட இருக்கு. நீங்க வந்து அந்த மாதிரி இடங்க ளெல்லாம் பாருங்க. உங்களுக்கே தோ டம் தொரவு வாங்கணும்னு தோணிரும்."

ராதாகிருஷ்ணனும் ரேவதியும் வீடு திரும்பினார்கள்.

"என்னமோ கனா மாதிரி இல்லை. நாம போனதும், யாரையோ பார்த்ததும், யார் கிட்டயோ பேசினதும் அவன் யாரையோ அறிமுகப்படுத்தினதும், அறிமுகப் படுத்தியவன் தோட்டம் வாங்க உதவி செய்யறேன்னு சொன்னதும் ஏதோ திகைப்பா இல்ல."

"ஆமாம். கடவுள் வழிகாட்டறார்னு தோண்றது. யாரோ நம்மள அழைச்சுண்டு போறான்னு தோண் றது."

"சங்கரய்யரா கூட இருக்கலாம்."

ராதாகிருஷ்ணன் அடிக்குரலில் பேசினார்.

"நிஜமாவா. சங்கரய்யர் பேரை இவ்வளவு அன்பா சொல்றேள்."

"எனக்கு அவரைப் பத்தி ஒரு சந்தேகம் இருந்தது. ஆனா இப்போ மாறிடுத்து. சங்கரய்யர் உள்ளுக்குள்ள

ஆளை நகர்த்தத் தெரிஞ்சவர். என்னை எங்கயோ நகர்த்திண்டிருக்கார்னு படறது."

ராதாகிருஷ்ணன் சொல்லிவி டு, தலை குனிந்து கொண்டார். குளித்து வி டு தோளில் மேல் வே டி யைப் போர்த்தி, கிழக்குப் பார்த்து ஜபம் செய்யத் துவங்கினார்.

மறுநாள் அந்த முதலியாரோடு பெருங்களத்தூர் பக்கம் போய், அவர்கள் நிலம் பார்த்தார்கள்.

ராதாகிருஷ்ணனுக்கு அந்த இடம் பிடித்திருந்தது.

32

வெறும் புல்பரப்பு. அங்கங்கே வேலிக்காத்தான் செடிகள். தென்கிழக்கே வேப்பமரம். வடகிழக்கே கடம்ப மரம். கிழக்கில் ஒரு புளியங்கன்று. மேற்குப் பக்கம் சாலை இருந்தது. மேற்குப் பக்கம் வேறொரு நிலம் மேடாக இருந்தது. முன்பு மரங்கள் அதிகம் இருந்து, வனங்கள் அழியாமல் இருந்து மாதம் மூன்று முறை மழை பெய்ததால், தேங்கிய தண்ணீரை இறைத்து பயிர் செய்ய முடிந்தது.

இப்போது அவ்விதம் செய்ய இயலாது. இணறு போடலாம். காய்கறி பயிர் செய்யலாம். பூந்தோட்டம் அமைக்கலாம். மிகச் சிறந்த விஷயம் கீரை. அதிகம் பாடுபடாத வெறுமே நீர் இறைத்து களை பிடுங்கினால் போதும். அறுத்து கத்தை கட்டி வைத்துக் கொண்டிருந் தால் மினி வேன் வந்து வாரிக் கொண்டு போகும்.

"ஆஹா.. இப்போ புரோஹிதம் மறந்து போயிடுத்தா? விவசாயியா மாறிட்டேளா? ரொம்ப சந்தோஷம்."

ரேவதி கேலி செய்தாள்.

"எதிர்காலம் பத்தி ஒரு தெளிவே இல்லையா உங்களுக்கு? ஏன் இப்படிக் குழம்பிக் குழம்பி யோசிக்கறேள்?"

கடிந்து கொண்டாள்.

இந்த யோசனையைக் கேட்டதும் சங்கரய்யர் பாராட்டினார்.

"எனக்கு நீங்க என்ன சொல்றேள்னு புரியறது. ராதாகிருஷ்ணன். நீங்க சொன்னதை நான் திரும்பிச் சொல்லட்டுமா? படப்பையில நிலம் வாங்கப் போறேள். நாலு ஏக்கரோ, அஞ்சு ஏக்கரோ ஆறு ஏக்கரோ, தாம்பரத்துல வீடு வாடகைக்கு எடுக்கப் போறேள். குழந்தேளை அந்தப் பக்கத்துப் பள்ளிக் கூடத்துல சேர்த்து அதுகள் படிக்கறவரைக்கும் தாம்பரத்துலேருந்து படப்பை நிலத்தைப் பார்த்துண்டு அல்லது வெறுமே மரம் நட்டு வளர்த்துண்டு மாசத்துக்கு ஒரு தடவை எட்டிப் பார்த்துட்டு வரப் போறேள். குழந்தை எட்டாவது படிக்கிறாளா. ப்ளஸ் டூ வரதுக்கு அஞ்சு வருஷம். காலேஜுக்கு மூணு வருஷம். கல்யாணத்துக்கு அதுக்கப்புறம் இரண்டு வருஷம். ஆக பத்து வருஷத்துல அந்த படப்பை நிலம் பெரிய விலை போகும். விக்கறதா இருந்தாலும் விக்கலாம். வீடு கட்டறதா இருந்தாலும் கட்டலாம். பாதியை விற்றுவிட்டு, பாதியில வீடு கட்டலாம் இல்லையா?

பொண்ணைக் கல்யாணம் பண்ணி கொடுத்துட்டாக்க படப்பை என்ன, இன்னும் தள்ளி செங்கல்பட்டு தாண்டி மாமண்டூர் பக்கம் கூட இருந்துடலாம். நீங்க சரியா யோசனை பண்றேள்."

அவர் பாராட்ட நெஞ்சு நிமிர்த்தி ராதாகிருஷ்ணன் ரேவதியைப் பார்த்தார். ரேவதிக்கு ராதாகிருஷ்ணனின் நிமிர்வு திகைப்பாக இருந்தது.

"இவர் இப்படி நிமிர்ந்தால் மறுபடியும் ஏதேனும் குளறுபடி பண்ணுவாரே" என்று கவலைப்பட்டாள்.

"சரி இது லௌகீகம். இந்தக் கணக்கு நன்னாத்தான் இருக்கு. அடுத்தபடியா நான் சொல்லிக் கொடுத்த விஷயங்கள் எவ்வளவு தூரத்துல இருக்கு" என்று அடிக்குரலில் சங்கரய்யர் கேட்க, தான் தொடர்ந்து ஜபம் செய்வதாகவும் மிகப் பெரிய மாற்றங்கள் இல்லையெனிலும், மனசுக்குள் ஒரு குறிப்பிட்ட நேரம் வரை அமைதி இருப்பதாகவும் அந்த அமைதி நாள் முழுவதும் பரவுகின்ற வாய்ப்பு இருக்கிறது என்றும் சொல்ல, சங்கரய்யர் கைகொட்டிச் சிரித்தார்.

"இந்த பதிலைதான் உங்ககிட்டே எதிர்பார்த்தேன். மந்திரஜபம் என்பது ஒரு வாகனம். அந்த வாகனத்துல ஏறி நகர்ந்து போயிண்டே இருக்கணும். ஏதோ ஒரு இடத்துல, ஏதோ ஒரு நேரத்துல நம்முடைய பயணம் ஒரு நல்ல விதமா முடியும். மந்திர ஜபம் பண்ணின்டே இருந்தோம்னா உள்ள பார்க்கத் தெரிஞ்சுடும். மந்திர ஜபம் பண்ணும்போது மனசு வேற எங்காவது போகும். கொஞ்சம் பிடிச்சு இழுத்துக் கொண்டு வரணும்.

"எத்தனை நாள் இப்படி மனசோட போராடிண்டிருக்கறது, அப்படின்னு நடுவுல ஒரு கேள்வி. ஒரு அலுப்பு வரும். புதுசா கார் கத்துக்கறேள். இடது காலை என்ன பண்றது, வலது காலை என்ன பண்றது. இதுல எது ஃபர்ஸ்ட் கியர். எது செகண்ட் கியர். மனசு திண்டாடித் தவிச்சு, எதுக்காக இந்தக் கார். எவனாவது ஓட்டிட்டுப் போறான். நாம பின்னாடி சாய்ஞ்சுண்டிருக்கலாமே, அப்படின்னு தோணும். பத்துநாள் வரைக்கும் போராட்டம். பதினைஞ்சு நாள் வரைக்கும் கொஞ்சம் விறைப்பு. மெல்ல மெல்ல காரோட கார் இன்ஜினோட ஒரு ஸ்நேகம் ஏற்பட்ட பிறகு கார் ஓட்டறோம் அப்படிங்கற எண்ணமே நமக்கு இருக்காது. கை கால் பாட்டுக்குத் தானா அசையும். கார் பாட்டுக்கு ஓடிண்டிருக்கும். மந்திரஜபத்தை அந்த மாதிரி ஒரு பழக்கத்துக்குக் கொண்டு வரணும். மந்திரஜபம் பழக்கமாயிடுத்துன்னா வீணா பொழுது

கழிக்கறதே கிடையாது. எப்பொழுதெல்லாம் பொழுது கிடைக்கறதோ அப்பொழுதெல்லாம் மனசு மந்திர ஜபத்தை ஆரம்பிச்சுடும். பேச்சு குறையும். பேச்சு குறைஞ்சா சிந்தனை அதிகமாகும். நம்ம சிந்தனையில கூர்மை இல்லாததுக்குக் காரணம், வெட்டிப் பேச்சு, வெறும் பேச்சு.

நீங்க இரண்டு பேரும் திரும்பத் திரும்ப மந்திர ஜபம் பண்ணி, இந்தத் தனிமை ருசியை அனுபவிக் கணும்னு பிரார்த்தனை பண்ணிக்கறேன். எப்போ முடியறதோ அப்போ வந்து பார்க்கலாம்."

சங்கரய்யர் கைகூப்பினார்.

வீட்டுக்குப் போனதும் பூஜையறையில் ரேவதி உட் கார்ந்துகொள்ள, ஹாலுக்கு அருகேயுள்ள வராண்டா வில் கிழக்குப் பார்த்து ராதாகிருஷ்ணன் அமர்ந்து கொண்டார்.

சட்டென்று வாழ்க்கை மாறிப் போனது அவருக்குத் தெரிந்தது. உடைமை எதுவுமில்லை. ஆனால் காசு இருந்தது. பெண் குழந்தைக்கும் ரேவதிக்கும் தேவை என்ற எண்ணத்தோடு ஒரு லட்ச ரூபாய்க்கு நகைகள் வாங்கினார். பாத்திரங்கள் வாங்கினார். வங்கியில் முதலீடு செய்ய அந்தக் காசுக்கு வட்டி வந்தது. அது வாங்கிய சம்பளத்தைவிட அதிகமாக இருந்தது. அடுத்த நான்கு மாதங்கள் வாழ்க்கையில் மறக்கவே முடியாத நாட்களாக அமைந்தன.

குழந்தைகளைப் பள்ளிக்கூடம் அனுப்பி விட்டு புருஷனும், மனைவியும் தனித் தனியே உட்கார்ந்து மந்திர ஜபம் செய்வார்கள். பதினோரு மணிக்கு மெல்லப் போய் சங்கரய்யரை எட்டிப் பார்ப்பார்கள். சங்கரய்யர் ஏதாவது கேள்வி கேட்டால் பதில் சொல்வார்கள். அல்லது அங்கேயே உட்கார்ந்து சிறிதுநேரம் மந்திர ஜபம் செய்து கொண்டிருப்பார்கள். பன்னிரண்டு மணிக்கு விழுந்து நமஸ்கரித்து விடை பெற்று வருவார்கள். பிற்பாடு சாப்பிட்டுவிட்டு அவர்

பேப்பர் படிக்க, ரேவதி வாரப் பத்திரிகைகளைப் பார்ப்பாள். மாலை நான்கு மணிக்கு கூட்டமில்லாத நேரத்தில் காளிகாம்பாள் கோவிலுக்குப் போவார்கள். ஐந்து மணிக்குக் குழந்தைகள் வந்ததும் அவர்களோடு பேசிக் கொண்டிருப்பார்கள். ஆறு மணிக்கு குழந்தை களுக்கு அவர் பாடம் சொல்ல ஆரம்பிப்பார். ஒன்பது மணிக்கு ஜபம் செய்ய உட்காருவர். பத்து மணிக்கு தூங்கப் போவார்கள். விடியற்காலையில் ஐந்தரை மணிக்கு எழுந்து, பல் தேய்த்து, கைகால் கழுவிக் கொண்டு மறுபடியும் ஜபத்திற்கு உட்காருவார்கள்.

அப்பா பாடம் சொல்லிக் கொடுக்கிறார் என்பதால் ஆர்வத்தால் மகன் நன்கு பாடம் படித்தான்.

ஓவியப் போட்டியில் முதல் பரிசு வாங்கினான். உயரம் தாண்டுவதில் இரண்டாவது பரிசு வாங்கினான். குழந்தைகளுக்குப் பரீட்சை முடிந்தபோது தாம்பரத்தி லிருந்து போன் வந்தது. அவர்களுக்கான இடம் காலியாக இருக்கிறது என்று சொல்லப்பட்டது.

நல்ல நாள் பார்த்து பால் காய்ச்சினார்கள். வீடு பளிச்சென்றிருந்தது.

அவர்கள் சங்கரய்யரிடம் விடை பெற்றார்கள்.

"உங்க அன்பு, உங்க ஸ்நேகம் எங்களுக்கு மறக்கவே மறக்காது. எங்களை ரொம்ப அற்புதமா வேறே வழியில திருப்பி விட்டுட்டேள். வாழ்க்கையே மாறிப் போயிடுத்து."

"முகங்கூட மாறிப் போயிடுத்துய்யா. பளபளன்னு ஆயிட்டூர். கண்ணுல ஸ்நேகம் கொஞ்சறதே உதடு கனிஞ்சிருக்கே. பார்வை மாறிப் போச்சு."

சங்கரய்யர் ஆதரவாக ராதாகிருஷ்ணனை அணைத் துக் கொண்டார்.

"அற்புதமான மனைவி கிடைச்சுருக்காய்யா. அந்தப் பொக்கிஷத்தை ஜாக்கிரதையா வைச்சுக்க வேண்டியது உம்முடைய பொறுப்பு. பொண்டாட்டி சந்தோஷமா

இருந்தா, வீட்டிலே உணவு ரொம்ப அற்புதமா இருக்கும். வீட்டிலே உணவு நன்னாயிருந்தா, உமக்குள்ள நல்ல மாறுதல்கள் ஏற்படும். வீட்டிலே பொண்டாட்டியத் தொந்தரவு பண்ணோம்னாக்க, உணவு கெட்டுப் போயிடும்யா. அவள் துக்கம் அந்த உணவுல இருக்கும். துக்கமான ஒரு உணவு சாப்பிடறபோது மனசுலே பயம் வரும். கிலேசம் இருக்கும். செத்துப் போயிடுவோமோன்னு கலவரம் ஏற்படும். சந்தோஷமான மனைவி ஒரு பலம். இத்தனை வேதனையான ஒரு விஷயத்தை நீங்க தாண்டறதுக்குக் காரணம் ரேவதி. ரேவதி ரொம்ப நல்ல மனைவி. ரேவதி இல்லைன்னா, உம்ம கோவத்துக்கு நீர் நின்ன இடம் புல்லு முளைச்சு போயிருக்கும். வீல இருக்கற பொம்மனாட்டியப் பாராட்டக் கத்துண்டோம்னா, நிறைய விஷயங்கள் சரியா நடக்கும்.

ராதாகிருஷ்ணன், நீர் வெறும் க்ளார்க் இல்லையய்யா. உம்மால வேறு வேலை நடக்கப் போறது. நான் சொல்லிக் கொடுத்த மந்திரஜபத்தால உம்ம வாழ்க்கையும் சரி பண்ணிண்டு உம்ம சுத்தி இருக்கறவா வாழ்க்கையும் சரி பண்ண உங்களால முடியும். இதுவரைக்கும் வாங்கிண்டிருந்த சம்பளத்தைவிட அதிகமா வட்டி வருது. காற்றோட்டமா, நகரத்து ஓரமா, சந்தடியில்லாம வீடு கிடைச்சுருக்கு. நிலபுலன் எதுக்காக, இதெல்லாம் எதுக்காக? நீர் மந்திரஜபம் பண்றதுக்குன்னே கிடைச்சுருக்கு ஓய். நீர் மந்திரஜபம் ஆரம்பிச்சவுடனே எல்லாமும் சரியா வறது. அப்போ என்ன அர்த்தம்? இதைத் தொடர்ந்து பண்ணணும்னு அர்த்தம். பண்ணும், பண்ணிப் பாரும். உச்சாணிக் கிளைக்குப்போவீர் பாரும். இப்போதைக்கு இது போதும். போயிட்டு வாங்கோ. போறபோது காளிகாம்பாள்கிட்ட கூடவே வாடியம்மா அப்படின்னு வேண்டிண்டுபோங்கோ."

சங்கரய்யர் உச்சந் தலையைத்தடவி இருவரையும் ஆசீர்வதித்தார்.

பிரிந்து போவது அவ்வளவு எளிதாக இல்லை. காளிகாம்பாள் கோவிலில் அழுகை வந்துவிட்டது. சுற்றி வரும்போது "அம்மா அம்மா" என்று அரற்றத் தோன்றியது. "உன்னைப் பார்க்காத... உன்னை பார்க்காத... முடியுமா?" என்று தூண் தூணாகக் கட்டிக் கொள்ளத் தோன்றியது.

கிளம்பும்போது சங்கரய்யரைப் பார்த்து "இதுக்கு என்ன பிரதி உபகாரம் நான் பண்ணுவேன்?" என்று ராதாகிருஷ்ணன் குரல் தழுதழுக்கக் கேட்டார்.

"எது பண்ணினாலும் சத்தியத்தோட இரும். அது போதும்."

"புரியும்படியா சொல்லுங்களேன்."

"ஆரவாரமா, அலட்டலா, பொய்யா இதனால லாபம் சம்பாதிக்கலாம்னு எண்ணமில்லாம எது சொன்னாலும் அது சத்தியமாக இருக்கட்டும். அதனுடைய பலன் ரொம்பப் பெரிசு. நீங்க நினைக்கறதை விட அதிகமான செல்வமும், நீங்க நினைக்கறதைவிட அதிகமான புகழும் சந்துஷ்டியும், சௌபாக்கியமும் கிடைக்கும். மந்திரஜபம் மந்திரஜபம் மந்திரஜபம்னே வாழ்க்கை போகட்டும்."

அவர்கள் சாமான்களுடன் தாம்பரம்போய் இறங்கினார்கள்.

எங்கேயோ பிடுங்கி எங்கேயோ வீசினாற் போல ஒரு வாரம் இருந்தது. ஊர் பழக கண்கள் திறந்தவுடன், இடம் பழக இன்னும் ஒரு வாரம் தேவைப்பட்டது.

தாம்பரத்திற்கு வந்த பதினைந்தாம் நாள் அவரைத் தேடிக் கொண்டு பல பேர் வந்தார்கள். ஊரிலுள்ள சிவன் கோவிலில் உழவாரப் பணி செய்வதாகச் சொன்னார்கள். அங்கு அமர்ந்து அவர்களும் ஜபம் செய்வதாகச் சொன்னார்கள்.

ராதாகிருஷ்ணன் குதூகலித்தார். அவர்களோடு ஸ்நேகமானார்.

33

நிரந்தரமின்மைதான் மனித வாழ்க்கையின் அடி நாதம். அந்த நிரந்தமின்மையைப் புரிந்து கொள்கிற போது வாழ்க்கையில் பல முரண்டுத்தனங்கள் மனம் விட்டு நகர்ந்து விடுகின்றன.

ஜார்ஜ் டவுனும் அதைச் சுற்றியுள்ள பகுதியும்தான் தன்னுடைய வாழ்க்கை என்று நினைத்துக் கொண்டிருந்தவர், அதை உதறி அங்குள்ள மனிதர்களை உதறி அந்த வாசனையை உதறி, வைக்கோலும்,புல்லும் நிறைந்த கிராமம்போலும் உள்ள தாம்பரம் பக்கம் வந்து குடியேற, ராதாகிருஷ்ணன் மனம் இங்கும் வேர்விட்டது. வேர்விட்டு நீர் உறிஞ்ச இங்கேயும் இலைகள் துளிர்த்தன.

"உங்க பில்டிங் ஓனர் முதலியார் சொன்னாரு. நீங்க ரொம்ப நல்லா ஜாதகம் பார்க்கறீங்களாமே. இது என் பொண்ணு ஜாதகம். வயது முப்பத்தொண்ணு. கல்யாணம் ஆகலை. எத்தனை விதமா முயற்சி பண்ணாலும் தட்டிப்போறது. நீங்க ஜாதகம் பார்த்து ஒரு நல்ல வாக்கு சொல்லணும்."

பவ்யமாக ஒரு மத்தியதர வர்க்கத்து மனிதர் கைகூப்பி நின்றார்.

ஜாதகத்தைப் பார்த்த இரண்டாவது நிமிடம் ராதாகிருஷ்ணன் பேசினார். "குரு பலன் வந்துடுத்து. வடக்க ரொம்ப தூரத்துலேர்ந்து மாப்பிள்ளை வருவான். உயரமா இருப்பான். நல்ல களையா இருப்பான். நம்ம வீட்டுக் கல்யாணமா அப்படின்னு திகைச்சு போற அளவுக்கு ரொம்ப கிராண்டா கல்யாணம் நடக்கும். சௌக்கியமா இருப்பா. பொண்ணுக்கு நட்சத்திரம் திருவாதிரைங்கறதுனால, சிவபூஜை பண்றதுக்குக் கத்துக் கொடுங்கோ. யார் கத்துக் கொடுப்பாங்கன்னு பயப்படவேண்டாம். இதோ இந்தக் கோயில் சிவனை

தினமும் மூணு தடவை வலம் வந்து உன்னை பூஜை பண்ண சொல்லிக்கொடுன்னு கேட்டால் போதும். யாராவது வந்து, எங்கிருந்தாவது வந்து சொல்லித் தருவா."

அப்படியே நெல்முனையளவும் பிசகாமல் நடந்தது.

ஜாதகம் கேட்டவருக்குக் காசு கொடுக்க முடியவில்லை. நூற்றியோரு ரூபாய் காசு கொடுத்தாலும் அது நிறைவு என்று தோன்றவில்லை. தனக்குத் தெரிந்த அத்தனை பேரிடமும் ராதாகிருஷ்ணனுடைய புகழ் பாடினார்.

ஜாதகம் என்பது சாதாரண கணிதம். இந்தக் கிரகம் இங்கிருந்தால் இந்தப்பலன். இந்தப் பார்வை இங்கு பட்டால் இந்தப் பார்வைக்கு இப்படி அர்த்தம் என்று சில விதிமுறைகள் இருந்தன. ஒரு இருநூற்று சொச்ச விதிமுறைகளை மனனம் செய்தால், ஜாதகம் எவர் வேண்டுமானாலும் பார்த்து விடலாம். ஆனால் அதைத் தாண்டி அந்த விதிமுறைகள் சட்டென்று ஞாபகம் வரவும். உள்ளிருக்கின்ற ஒரு குரலை உற்றுக் கேட்கவும் ஒருமனிதருக்கு ஞான பலம் தேவைப் படுகிறது.

ராதாகிருஷ்ணனுடைய மந்திர ஜபங்கள் அந்த விதமான வாக்கு பலத்தை அவருக்குக் கொடுத்தன. ஒரு நாள் காலைமின்வண்டி பிடித்துப் போய் சங்கரய்யரின் எதிரே உட்கார்ந்து தன் சௌக்கியத்தைச் சொல்லி தன்னுடைய அனுபவங்களை சொல்கிற போது சங்கரய்யர் முகம் மலர்ந்தார்.

"வாக்கு பலிதம்தான் முதல் விசேஷம். இன்னும் ரெண்டு மந்திரங்கள் சொல்லித் தருகிறேன். இதைச் சொல்லுங்கள். மனதில் எதிர்காலம் ஸ்பூரிக்க ஆரம்பிக்கும். தாம்பரத்தில் அருகம்புல் கிடைக்குமா? அருகம்புல் பறித்து வினாயகர் பூஜையை ஆரம்பியுங்கள். மறுபடியும் சொல்கிறேன். ராதாகிருஷ்ணன் இவையெல்லாம் சடங்கு, எதைச் செய்கிறபோது மனம்

கூர்மையாக ஈடுபடுகிறதோ அதுவெல்லாம் பூஜை. காமமோ, காதலோ மனிதனுக்கு ஏன் சந்தோஷமாக இருக்கிறது? ஏனெனில் மனம் அதில் கூர்மையாக ஈடுபடுகிறது. அதனால் சந்தோஷம் ஏற்படுகிறது உண்மையாக இருந்தால் அடுத்தது என்ன செய்ய வேண்டுமென்பது மிகத் தெளிவாகத் தெரியும். கடவுள் வழி நடத்துவார். கடவுள் என்பது வேறு எதுவுமில்லை ராதாகிருஷ்ணன் தூய்மையான நம் மனம்தான் கடவுள்.

ஜாதகம் பார்த்துச் சொல்வது தவறில்லை. ஆனால், இதையே வாழ்க்கையாக வைத்துக் கொள்ள வேண்டாம். மந்திர ஜபங்கள், நான் சொல்லிக் கொடுத்ததை மற்றவர்களுக்குச் சொல்லித் தர வேண்டாம். உன்னுள் நீ நிலைக்கும் வரை உனக்கு போதிக்க அதிகாரமில்லை. உங்களை உள்ளுக்குள்ளே சீரும் சிறப்புமாக வளர்த்துக் கொள்ளுங்கள். பிறகு நீங்கள் என்ன செய்தாலும் சரியாகவே இருக்கும்."

வாழ்க்கை அப்படித்தான் ஓடிற்று.

குழந்தைகள் அற்புதமாகப் படித்தார்கள். இரவு ஆறு மணிக்கு வீட்டின் எல்லா ஜன்னல் கதவுகளையும் பூட்டி கொசுவர்த்தி ஏற்றிவிட வேண்டும். இல்லையெனில் உடம்பை கொசுக்கள் ரணப்படுத்திவிடும். எட்டு எட்டே காலுக்கு மெல்லத் திறந்து கொள்ளலாம். அப்போதும் கூட மெல்லிய நைலான் வலையை ஜன்னல்களிலெல்லாம் அடித்து வைத்துவிட வேண்டும்.

இரவு நன்றாக காற்று வந்தது. தண்ணீர் சுத்தமாக இருந்தது.பெண் குழந்தை சுபத்ரா எட்டாவது தேறினாள். எல்லாப் பாடங்களிலும் முதலாவதாக வந்தாள். கோடை விடுமுறையின் போது பாட்டு வகுப்பு, கம்ப்யூட்டர் வகுப்பு என்று இருந்ததால், டிசம்பரின் போது அவர்கள் தென்னிந்தியாவிலுள்ள திருத்தலங்களுக்குப் பயணப்பட்டார்கள். ஒரு ஜாதகம் பார்க்க

நூறு ரூபாய் என்று வாங்கினார். எளிதாக மூவாயிரம் ரூபாய் அவரால் சம்பாதிக்க முடிந்தது.

"இரண்டாயிரம் ரூபாயில மளிகை சாமான் வாங்க முடியாது?""

"போதுமே. எதேஷ்டம்."

ரேவதி அவருக்குப் பதில் சொன்னாள்.

பையன் ப்ளஸ் டூவில் நல்ல மார்க்குகள் எடுத்தான். இன்ஜீனியரிங் சேரவேண்டும் என்று ஆசைப்பட்டான். அந்த முறை கவுன்சிலிங் விரைவாக இருந்தது. நல்ல மார்க் வாங்கினால் போதும், நிச்சயம் இடம் கிடைக்கும் என்று எல்லோருக்கும் சொல்லப்பட்டது.

தாம்பரம் தாண்டியுள்ள, தெற்கே போகும் சாலையிலுள்ள, பெரிய இன்ஜீனியரிங் கல்லூரியில் அவனுக்கு இடம் கிடைத்தது. அது தனியார் கல்லூரி. ஆனால் அரசாங்கக் கோட்டா. அதனால் கட்டணம் குறைவாக இருந்தது. தாம்பரத்திலிருந்தே ஆறேழு மாணவர்கள் அப்படி தெற்குப் பக்கம் போய் இன்ஜினியரிங் காலேஜில் சேர்ந்திருப்பதை பிள்ளை தெரிந்து கொண்டான். அவனைத் தேடி பையன்கள் வர ஆரம்பித்தார்கள். அந்த அடுக்குமாடி வீட்டு வாசலில் உட்கார்ந்து பாடத்தைப் பற்றியும் படிக்கப் போவதைப் பற்றியும் பேசினார்கள். இதையெல்லாம் செவிமடுத்துக் கொண்டிருந்த முதலியார், மேல்மாடியில் தட்டுப் பந்தல் போட்டுக் கொடுத்தார்.

"சரிவுப் பந்தல் போட்டு கொடுத்துடுவேன். ஆனா உள்ள துணிமணி வச்சுக்கத் தோணும். அது வேணாம். வந்து உட்கார்ந்துபேச, கொஞ்ச நேரம் கண்மூடி படுக்க இந்த இடத்தை வச்சுக்கோங்க. வாசல்ல நின்னு பேசறதுக்குப் பதிலா இங்க பேசலாம்" என்று பெருந்தன்மையாக இடம் கொடுக்க, ராதாகிருஷ்ணன் நெகிழ்ந்துபோனார்.

"நான் ஏதாவது வாடகை கொடுத்துடட்டுமா?"

"வேணாம். அப்போ உரிமையாயிடும். நீங்க எத்தனை வாட்டி ஜாதகம் பார்த்து சொல்லியிருக்கிங்க. ஒத்த பைசா வாங்கலையே. நான் வாங்கினா நல்லாயிருக்குமா?"

படிப்பில் ஆர்வமுளள, கிரிக்கெட்டில் ஈடுபாடுள்ள அந்தப் பையன்கள் அப்படியொரு இடம் கிடைத்ததும் உட்கார்ந்து கடுமையாகப் படித்தார்கள்.

இன்ஜினியரிங் கல்லூரியில் தலைமை மாணவி ஒருத்தி, பரத நாட்டியத்தில் பெரிய தாரகை. அதே சமயம் படிப்பையும் விடவில்லை. அவளைப் பாராட்ட இந்த இளைஞர்கள் போக, என்னிடம் பரதம் கற்றுக் கொள்ளுங்களேன், என்று அவள் விளையாட்டாகச் சொல்ல சரி என்று இவர்களும் சந்தோஷமாக தலையசைக்க அவர்களுக்குப் பதினைந்தே நாட்கள் நடனப் பயிற்சி நடந்தது. பதினாறாம் நாள் கல்லூரிக் கலை விழாவில் மாணவர்கள் பரதநாட்டியம் ஆடுகிறார்கள் எனறதும் கேலியும் கூச்சலும் உரத்துக் கிளம்பின. ஆனால் மேடையில் கட்டுமஸ்தாக, ஒல்லியாக, அகலமார்போடு இடுப்பில் பட்டு வேட்டியோடு கழுத்தில் ஜொலிக்கின்ற நகையோடு நெற்றியில் குங்குமத்தோடு புன்னசிரிப்போடு பத்து வாலிபர்கள் நிற்கவும் சட்டென்று அமைதியாயிற்று.

நிதானமாக ஆரம்பித்து மிகுந்த துரிதகதியில் நாட்டியம் முடிய மாணவர்கள் எழுந்து நின்ற கைதட்டினார்கள். மாணவிகள் பக்கமிருந்து மிகப் பெரிய ஆதரவு வந்தது. தலைமையேற்க வந்த பெண்கள் கல்லூரி முதல்வர் எழுந்து நின்று கை தட்டினார்.

அவர்களுக்கு சுழல் கோப்பையும் தனித்த மெடல்களும் கிடைத்தன. பாராட்டு மழையில் அந்த இளைஞர்கள் நனைந்தார்கள். ராதாகிருஷ்ணனின் மகன் ராஜாராமன் மிகுந்த சந்தோஷமடைந்தான்.

"பரதநாட்டியம் என்னுடைய பொழுது போக்கல்ல. என் ஆர்வமல்ல. எதையும் என்னால் செய்ய முடியும் என்று நிரூபிக்கத்தான் நான் பதினைந்து நாட்கள் பயிற்சி எடுத்துக்கொண்டேன். திறம்படி ஆடினேன். நீங்கள் பாராட்டினீர்கள். என்னுடைய இடம் என் வேலை இன்ஜீனியரிங்" என்று மேடையில் ஏறிப்பேச மறுபடியும் கூட்டம் கைதட்டியது.

இன்ஜினியரிங் முடித்துவிட்டு பையன் வெளியே வரும்போது பெண் ப்ளஸ் டூவுக்குள் நுழைந்தாள். அண்ணன் வழிகாட்ட, எப்படிப் படிப்பது என்று திட்டம் போட்டுக் கொடுக்க அவளும் தன் புத்திசாலித்தனத்தைக் கொடி பறக்க விட்டாள். நிறைய மார்க்குகள் வாங்கினாள். டாக்டருக்குப் படி டாக்டருக்குப் படி அண்ணன் அவசரப்படுத்தினான். ஆனால் அவள் மறுத்துவிட்டாள். பௌதிகம் எடுத்துக் கொண்டாள். அவள் கல்லூரியும் தாம்பரத்திலேயே அமைந்தது. ராதாகிருஷ்ணன் போகாமலேயே அவளுக்கு சீட்டு கிடைத்தது.

எங்கேயோ போய் பரீட்சை எழுதி வந்து ஆறாயிரம் ரூபாய் உதவித் தொகை வாங்கி வந்தாள். ஆயிரம் ஆயிரமாக ஒரு மாதம் விட்டு ஒரு மாதம் கிடைக்குமென்று அவர்கள் சொன்னார்கள். அப்படியே அனுப்பி வந்தார்கள்.

இன்ஜினியரிங் கல்லூரியில் முதன்மையாகத் தேறிய மாணவர்களைப் பல கம்பெனிகள் போட்டி போட்டு வேலைக்கு அழைத்தன. மகாராஷ்டிர மாநிலம் தானேயில் ஒரு உருக்காலையில் அவனுக்கு வேலை கிடைத்தது.

ராதாகிருஷ்ணன் தன்னைவிட உயரமாக பிள்ளை வளர்ந்திருப்பதைப் பார்த்து சந்தோஷமடைந்தார். அதே நேரத்தில் ரேவதி அவனைக் கட்டிக் கொண்டு அழுதாள். விடை கொடுத்தாள்.

முதல் சம்பளத்திலிருந்து ஆயிரத்தோரு ரூபாய் அனுப்பியபோது கணவன் மனைவி இரண்டு பேரும் குதூகலித்தார்கள். தீபாவளிக்கு அவன் நிறைய

புடவைகள் வாங்கி வந்தபோது இன்னும் சந்தோஷப் பட்டார்கள்.

"டேய் உன் தங்கை கல்யாணம் இருக்குடா ஞாபகம் வச்சுக்கோ. கல்யாணம் வரைக்கும் நான் சமாளிச்சுடு வேன். அதுக்கப்புறம் செலவு இருக்கோன்னோ. நீதான் கொஞ்சம் பார்த்துக்கணும்."

ராதாகிருஷ்ணன் எச்சரித்தார்.

அவன் கல்யாணத்துச் செலவுகளையே தான் ஏற்றுக் கொள்ளும்படியான நிலைக்கு வந்துவிடுவேன் என்று உறுதி கூறினான்.

அடுத்த வருடம் அவன் பரோடாவுக்கு வேறு வேலைக்கு மாறினான்.

அது மிகப்பெரிய இன்ஜினியரிங் கம்பெனி. திட்டமிடுதல்தான் மிக முக்கியம். .ஏ.சி அறையில் உட்கார்ந்து வரைபடங்களைப் பார்த்து, பொருட்கள் வாங்குவதையும் அதற்கான விலையையும் நிர்ணயித்து விற்பனையைப் பற்றி தெளிவாக கம்பெனிக்கு எடுத்துரைக்கும் வேலை.

"பிளானிங் டிபார்ட்மென்ட்ல வேலை கிடைக்கறது கஷ்டம். உள்ள புகுந்து வேலை கத்துனுட்டோம்னா, பல்வேறு இடங்கள்லேர்ந்து நமக்கு அழைப்பு வரும்."

அவன் எதிர்காலம் பற்றி அவன் தெளிவாக இருப்பதும் துணிச்சலாக இருப்பதும் திறமையாகச் செயல்படுவதும் அவன் விளக்கிச் சொல்ல சொல்ல அவர் ஆச்சரியத்தில் ஆழ்ந்தார்.

"நீ ரொம்ப சோம்பலான பையன்னு நான் நினைச் சுண்டிருந்தேன். போடு போடுன்னு போடறடா. சந்தோஷமா இருக்கு."

"எனக்கே என்னைப் பத்தி பயம் இருந்ததுப்பா. ஆனால் நீ ஆத்துல மந்திரஜபம் பண்ண ஆரம்பிச்ச பாரு அப்போ ப்ளஸ் டூல பெரிய மாற்றம் ஏற்பட்டது. உண்மையா படிக்கறது என்னன்னு அப்போதான்

தெரிஞ்சுண்டேன். சங்கரய்யர் நம்ம வீட்டுல எல்லாரையும் என்னமோ பண்ணிட்டார்ப்பா. அவரைப் போய்ப் பார்த்துட்டு வரலாம் வரியா."

வாடகைக்கார் ஏற்பாடு பண்ணிக் கொண்டு அந்தக் குடும்பம் சங்கரய்யரைப் பார்க்கப் போயிற்று.

சங்கரய்யர் சற்றுத் தளர்ந்து போயிருந்தார். கண்ணுக்கீழ் வளையங்கள் இருந்தன தலைமுடி இன்னம் தும்பைப் பூவாய் நரைத்துப் போயிருந்தது. உடம்பில் சதைத் தொய்வு இருந்தது,

ஆனால் இவர்களைப் பார்த்ததும் மிகப் பெரிய சந்தோஷம் முகத்தில் வெளிப்பட்டது.

ராஜாராமனை அருகே உட்கார வைத்து அவன் தலையைத் தடவி அவனை உற்றுப் பார்த்தார்.

"இப்போ வேலை செய்யற விஷயம் ரொம்ப பிடிச் சுருக்கோ உனக்கு" என்று கேட்டார்.

ஆமாம் என்று தலையசைத்தான்.

"அதுலயே. கிழக்க மேற்க ரெண்டு இடத்துக்கு கூப் பிடுவான். கிழக்கபோ ஜப்பானுக்குப் போ இந்தோனேஷியா மலேசியா, சிங்கப்பூர் அந்த மாதிரி போ. அங்க இருக்கறவாளுடைய வேகமும் உன் வேகமும் சரியா வரும். உனக்கு ஆட்டம் பாட்டம் ஜாஸ்தி பிடிக்காது இந்த வேலையை முடிச்சுட்டு அடுத்த வேலைக்குப் போறதுதான் உனக்கு சந்தோஷம் இல்லையா? இந்த வேலையை முடிச்சுட்டு இன்னொரு வேலை பண்றது தான் ஓய்வு இல்லையா? அப்படியே இரு. கடுமையா உழைக்கறதுக்குன்னு இந்த உலகத்துல சில பேர் பிறந்திருக்கா அதுல நீயும் ஒண்ணு" அவனை ஆசீர் வதித்தார்.

"ராதாகிருஷ்ணன் இந்த மந்திரஜபம் தெரியுமோ" ரேவதியையும் ராதாகிருஷ்ணனையும் உட்கார வைத்து சங்கரய்யர் மேலும் இரண்டு மூன்று மந்திர ஜபங்கள் சொல்லிக் கொடுத்தார்.

"ஜாதகம் பார்க்காமலேயே, ஆள் உள்ளே நுழைவதை உற்றுப் பார்க்கும் பொழுதே சில விஷயங்கள் தோன்றும் ராதாகிருஷ்ணன். அதற்கான மந்திரங்கள் இவை. தொடர்ந்து எல்லா மந்திரங்களையும்செய்து வாருங்கள். பிறகு பூஜை விஷயங்களையும் நான் சொல்லித் தருகிறேன்."

சங்கரய்யர், ராதாகிருஷ்ணன் கிளம்பி போகும் போது தான் வைத்துக் கொண்டிருந்த மான் தோலைச் சுருட்டி ராதாகிருஷ்ணன் கைகளில் போட்டார்.

"உங்க ஆசனம். எனக்கு என்னத்துக்கு கொடுக்கறேள்."

"காரணமில்லாமல் சங்கரய்யர் எதுவும் செய்ய மாட்டான். உங்களிடயே இருக்கட்டும். போட்டுண்டு உட்கார்ந்து ஜபம் பண்ணு. இந்த மான் தோல் எனக்கு என் குருநாதர் கொடுத்தது. தடவித் தடவிக் கொடுத்தது."

"இவ்ளோ பெரிய அனுக்கிரகத்திற்கு எனக்குத் தகுதி இருக்கா?"

ராதாகிருஷ்ணன் குரல் தழுதழுக்கப் பேசினார்.

"என்ன சொல்ல வரீர். உம்ம தகுதி என்னன்னு எனக்கு எடைபோடத் தெரியலைங்கறீரா?"

சங்கரய்யர் உறுத்துப் பார்த்துக் கேட்க, ராதாகிருஷ்ணனுக்கு மெல்லியதாய்ச் சிரிப்பு வந்தது.

34

"நீங்க எது பண்ணினாலும் சரியாக இருக்கும்."

ராதாகிருஷ்ணன் சங்கரய்யரிடமிருந்து மான் தோலை வணங்கி வாங்கிக் கொண்டார்.

"ரேவதி எப்படியிருக்கு தாம்பரம்?"

சங்கரய்யர் படியிறங்கும்போது கேட்டார்.

"உங்க ஆசீர்வாதத்துலே எந்தக் குறையும் இல்லை. அப்பப்போ காளிகாம்பாள் ஞாபகம். உங்க ஞாபகம் வரும். ஒருமாசத்துக்கு ஒரு தடவை வந்து பார்த்துட றோம் இல்லையா. அதனால அந்தக் குறையும் இல்லை.

அதையும் தவிர மந்திர ஜபத்துல மனசு லயிச்சா எழுந்திருக்கவே முடியலை. எப்போ வீட்டு வேலைகள் முடியும். எப்போ ஜபத்துக்கு உட்காருவோம்னே உள்ளுக்குள்ள ஒரு பரபரப்பு இருக்கு."

"ஆஹா ஆஹா என்ன அழகா சொல்ற?"

"என் பொண்ணு சுப்ரா ப்ளஸ் டூ முடிச்சுட்டு காலேஜ் சேர்ந்திருக்கா. அடுத்த வருஷத்தோட படிப்பு முடியும். அப்படி முடிஞ்சுடுத்துன்னா வரன் பார்க்க ஆரம்பிக்கலாமா?" ரேவதி கேட்டாள்.

"யெஸ் வரன் பார்க்கணும். பொண்ணுக்கு வரன் பார்க்கறதுதானே பெத்தவாளுடைய கடமை. ஆனா அவ பார்த்துண்டா சரின்னு சொல்ல மாட்டியா?"

சங்கரய்யர் கேட்க, ராதாகிருஷ்ணனும் ரேவதியும் திடுக்கிட்டுப் பார்த்தார்கள்.

"நீங்க என்ன சொல்றேள்?"

"நாம சுதந்தரம் கொடுத்து குழந்தேளை வளர்க்கறோம். சுதந்திரம்கறது அத்து மீறுவதுன்னு சில பேர் அர்த்தம் எடுத்துண்டிருப்பா. என்ன வேணா பண்ணலாம். அப்படின்னு தனக்குள்ள நினைச்சுப்பா. பொண் குழந்தேளுக்கு நூறு விதமான பயங்கள். யாரோ முகம் தெரியாதவனோட குடித்தனம் பண்றதவிட மாமியார் நாத்தனார்னு அவஸ்தைப் படறதவிட தெரிஞ்சவனை, சொடுக்கினா எழுந்து நிக்கறவனை கல்யாணம் பண்ணிக்கலாம்னு தோணும். இது தப்பில்லை. நாம முக்கியமா குழந்தை சந்தோஷமா இருக்கறது முக்கியமா அப்படின்னு ஒரு அம்மாகிட்டே கேட்டா குழந்தை சந்தோஷமா இருக்கறது

தான் முக்கியம்னு சொல்லுவா. சுபத்ரா சந்தோஷமா இருப்போ. அவளுக்கு அடங்கி அவள் ஆம்படையான் நடந்துண்டிருப்பான்."

ரேவதிக்கு அழுகை வந்தது.

"ராதாகிருஷ்ணனை உடன்பிறந்தவராக நான் நினைச்சுண்டிருக்கேன். நல்லதோ கெடுதலோ ாயைத் திறந்து சொல்லிடறதுதான் எனக்கு சந்தோ ஷம். நமக்கென்னமோ அபத்தமா , அச்சான்யமா தோணும். ஆனால் பயப்பட வேண்டாம். உங்க வீடு மாப்பிள்ளைய நீங்க கொண்டாடுவேள். அப்படித்தான் நடந்துப்பான்."

"என்னால ஒத்துக்க முடியாது."

ராதாகிருஷ்ணன் வேகமாகச் சொன்னார்.

"உம்மை யாரும் அனுமதி கேக்கப் போறதில் லையே. உமக்குப் பிடிக்குமா பிடிக்காதான்னு விசாரிக் கப் போறதில்லையே. அது பாட்டுக்கு நடக்கும்யா. மந்திர ஜபம் பண்றவன் கோவப்பட்டு தன்னுடைய சக்தியைச் சிதற விட்டுடக் கூடாது. மந்திர ஜபம் பண்றதுக்கே அடிப்படையான விஷயம் அமைதி. அமைதியைத் தேடுகிற அமைதி. அமைதியை அடைய விரும்புகிற அமைதி. அதனால ஏதாவது ஏடாகூடம் பண்ணி, எடுத்தேன், கவிழ்த்தேன்னு பேசிடாதிங்கோ. குழந்தையினுடைய எதிர்காலம் முக்கியம். நாளைக்கு அவ புருஷன் வீட்டுக்குப் போறதுபோது என்ன உங் கப்பன் இப்படிப் பேசினானாமே அப்படின்னு ஒரு வார்த்தை வரக்கூடாது. உங்களால அந்தக் குழந்தை இழிவு படக் கூடாது."

"நிச்சயமா என் குழந்தை வேற ஜாதிக்காரனைத் தான் கல்யாணம் பண்ணிப்பாளா?"

"சந்தோஷமா இருப்பாள்ன்னு சொல்றேனே. அதையே ஏன் மறந்துடறேள்?"

"பிள்ளைக்காவது சரியானபடி கல்யாணமாகுமா?"

"ஆஹா உன் பிள்ளைக்கு உன் இஷ்டப்படியே கல்யாணம் பண்ணி வைக்கலாம்."

"இவளுக்கு இப்படி கல்யாணம் நடந்தா அவனுக்கு?"

"வந்து கேபா. எல்லாத்தையும் உதறிட்டு இவ் வளவு படிச்ச மாப்பிள்ளை இத்தனை நல்ல பதவியில இருக்கற மாப்பிள்ளை எங்க பொண்ணுக்குக் கொடுங் கோன்னு வந்து கேபா?"

"நிச்சயமா நடக்குமா?"

ராதாகிருஷ்ணன் சங்கரய்யரைக் கேட்டார்.

சங்கரய்யர் அவரைப் பார்த்துச் சிரித்தார்.

"நான் என்ன பலத்துல சொல்றேனோ அந்த பலம் உனக்குக் கிடைக்கும். அந்தப் பலத்தை உள் வாங் கிண்டு உம்முடைய குடும்பத்துக்கு மட்டுமில்லை. ஊர் உலகத்துக்கெல்லாம் நல்லது சொல்ல பிறந்திருக்கேள். இது உம்மைக் கீழே இறக்கி வைக்கிறதா நினைக்க வேண்டும். இது உனக்கு உதவி செய்யும். இது உன் மனோநிலையைப் பலப்படுத்தும். உன்னை கம்பீரப் படுத்தும். மகன் பாசம் மகள் பாசத்துக்கும் அப்பால் உன்னைச் சிந்திக்க ஏவக்கும். அவரவர் வாழ்க்கை அவரவர் பக்கம், நாம் நம்முடைய வேலையைச் செய்துகொண்டு போவோம் என்று தனித்திருக்க வைக்கும். இது உன் நல்லதுக்காக ஏற்பட்டது. கடவுள் உனக்கு கொடுக்கப் போகும் பரிசு."

ரேவதி முகம் பொத்தி விசும்ப, ராதாகிருஷ்ணன் கண்ணிலிருந்து ஜலம் வந்தது.

"புரிகிறது" ராதாகிருஷ்ணன் கைகூப்பினார்.

"காளிகாம்பாள் உங்களுக்குண்டான பலத்தைத் தருவாள். இப்போது இங்கே இதைச் சொல்வது என் கடமை அதனால் சொல்லிவிட்டேன். போய் வாருங் கள்." சங்கரய்யர் கை கூப்பினார்.

"எனனம்மா ரொம்ப நேரம் பேசிண்டிருந்தார். நீங்க இரண்டு பேரும் கைகூப்பி கேட்டிண்டிருந்தேள். என்ன சொன்னார்."

மகன் வெகுளியாகக் கேட்டான்.

"நீ ரொம்ப உசந்த இடத்துக்குப்போவே. ரொம்ப நன்னாயிருப்பேன்னு சொன்னார்."

"அப்படியா,"

ஆவலாக மகன் கேட்டுக் கொண்டான். ஆனால் மகள் அதைப்பற்றிய அக்கறையே படாமல் இருந்தாள். வாய் ஒரு சினிமாப் பாடலை முணுமுணுத்துக் கொண்டிருந்தது.

காரின் பின்னீட்டில் மிக ஒயிலாக சாய்ந்து கொண்டு இந்த உலகம் முழுவதும் எனக்குச் சொந்தம். நான் அதை பவனி வருகிறேன் என்ற ஒரு நினைப்போடு அவள் உட்காந்திருந்தாள்.

காது ஜிமிக்கி ஆடியது. குழல்கள் அசைந்தன. உதடுகள் கண்கள் எல்லாம் பளபளக்க தான் மற்றவரைப் பார்த்து மற்றவர் தன்னைப் பார்த்து வியப்பதை மெல்ல ரசித்துக் கொண்டிருந்தாள்.

சங்கரய்யர் சொன்னது போலவே கொரியாவின் கார் கம்பெனி ராஜாராமனைக் கூப்பிட்டது. இந்தோனேஷியாவிலுள்ள வாக்கும் க்ளினர் தயாரிக்கும் ஜப்பான் கம்பெனி அழைத்தது. வளைகுடாப் பகுதியிலிருந்தும் அழைப்பு வந்தது.

ராஜாராமன் ஜப்பானுக்குப் பயணமானான். ஜப்பானிய மொழி கற்றுக் கொண்டான்.

நான்கு மாதம் தாண்டி இந்தோனேஷியாவில் வந்து இறங்கினான். தாயையும், தகப்பனையும் தங்கையையும் அழைத்துப் போனான். ஒரு வாரம் தங்க வைத்து ஊர் சுற்றிக் காட்டி திருப்பி அனுப்பினான். இந்தோனேஷியாவில் இந்துக் கோவில்களைப் பார்த்து அவர்கள்

திகைத்தார்கள். ஊர் முழுவதும் இந்துக் கலாசாரம் இருப்பது பார்த்து வியந்தார்கள்.

எங்கு போனாலும் இந்த தாம்பரம்தான் சொர்க்கம், என்று இங்கு வந்து கொண்டாடினார்கள்.

இந்திய விமானத்தில் சிவப்பாய் வளர்த்தியாய் உயரமாய் இருந்த கோவிந்தன், சுபத்ராவை விழுந்து விழுந்து உபசரித்தான். விமானத்திற்கு உள்ளே வருகிறீர்களா, காக்பிட் பார்க்கலாம் என்று சொல்லி அழைத்துக் கொண்டு போய் பைலட்டுக்கு அருகேயுள்ள நாற்காலியில் உட்கார வைத்து விமானத்திற்கு எதிரே நீலக்கடல் கீழே தெரிவதைக் காட்டினான்.

வந்து இறங்கின மறுவாரம் வீட்டிற்கு வந்து சிங்கப்பூர் சாக்லெட் கொடுத்தான். இத்தாலி பிஸ்கெட்டுகள் கொடுத்தான். அரபு தேசத்து திராட்சைகள் கொடுத்தான். அவளோடு வாசலில் உட்கார்ந்து பேசிவிட்டுப் போனான்.

"ஏர் இந்தியாலேர்ந்து பிரிட்டிஷ் ஏர்வேஸுக்குப் போகலாம்னு நினைச்சுட்டிக்கேன். மாறட்டுமா?"

ஜாதகம் கொண்டு வந்து நீட்டினான்.

அவனோடு அவன் தாயும் தந்தையும் வந்திருந்தார்கள். பையனுக்குத் திருமணம் முடிக்க வேண்டும் என்று சொன்னார்கள்.

"ஊர் ஊரா போற வேலை, 'யாரும் பொண்ணு கொடுக்க மாட்டேன்றாங்க. இவனுக்கு முப்பது வயசாகிப் போச்சு. சொந்தத்துல மூணு பொண்ணுங்க இருக்கு. கட்ட மாட்டேன்றான். இங்கிலீஷ் பேசணுமாம். ரொட்டி வெண்ணெய் தடவி சாப்பிடறவ தான் வேணுமாம். எங்கனா வெள்ளக்காரியக் கல்யாணம் பண்ணிக்கிட்டு வந்துடுவானோன்னு பயம்."

விதி தன்னை நோக்கி காய்களை நகர்த்துவதை தெள்ளத் தெளிவாக ராதாகிருஷ்ணன் உணர்ந்து கொண்டார்.

'இப்போது என்ன செய்வது?' உள்ளுக்குள் யோசனை செய்தார்.

யோசனை செய்யும் முன்பு மந்திர ஜபம் செய்தார். ஆழ்ந்து அமைதியாகத் தன் மனம் எதை விரும்புகிறது என்று கேள்விகள் கேட்டுக் கொண்டார்.

சங்கரய்யரிடமிருந்து உடனே வரச் சொல்லி போன் வந்தது.

அவர் கிளம்பி ஜார்ஜ் டவுன் போக அந்தப் பனியா உட்கார்ந்திருந்தார். பனியாவோடு அந்தச் சகோதரர்கள் அமர்ந்திருந்தார்கள்.

"இந்தக் கட்டடத்தை விக்கவே முடியலை. வேற புதுக்கட்டடம் கட்டலாம்னா அதுவும் முடியலை. எது பண்ணாலும் தடங்கல் வருது. எத்தனையோ விதமா எல்லாவித தந்திரமும் பிரயோகம் பண்ணிப் பார்த்துட்டேன். ராதாகிருஷ்ணன் காலி பண்ணும்போது எப்படி இருந்ததோ வீடு அப்படியேதான் இன்னமும் இருக்கு அப்படின்னு வருத்தப்படறான். எங்கயோ போய் யார் கிட்டயோ போய் குறி கேட்டிருக்கான். நீ வாங்கிய இடத்தை யாரோ ரொம்ப அருமையா பாதுகாத்து வச்சுண்டிருந்தா. அதை நீ பிடுங்கிண்டா மாதிரி வாங்கினதுனால அவாளுக்கு மன வருத்தம். அந்த மன வருத்தத்துனால இதுவிக்க முடியாம இருக்கு யாரை அனுப்பினியோ அவங்களைக் கொண்டு வந்து ஒரு மூணு மாசமாவது இங்க குடித்தனம் வை. எல்லாம் சரியாப் போகும்னான். இப்போ உன்னை அப்படிக் கேட்கறதுக்காக வந்திருக்கார். "தாம்பரத்தினுடைய நிம்மதிலேர்ந்து இந்தச் சந்தைக்கு மறுபடியும் வருவியா?"

சங்கரய்யர் கேட்டார்.

ராதாகிருஷ்ணனும் ஒப்புக் கொண்டார்.

ஜார்ஜ் டவுனுக்கு மறுபடியும் வந்த போது சங்கரய்யர் மாடியில் தள்ளாடி ஏறி வந்து ஆசி தந்தார்.

அடுத்து வந்த நாட்களில் எந்தப் பேச்சும் இல்லை. யாரோடும் இல்லை. இடையறாது உள்ளுக்குள் மௌனம். மௌனத்தின்போது மந்திர ஜபம். மந்திர ஜபம் முடிந்து ஒரு மௌனம். ஒரு வெறுமை. ஆழ்ந்து இறுக்கம்.

தரையில் பெரிய பலகை போட்டு பலகையின் மீது மான் தோல் போட்டு முதுகைச் சுவரில் சாய்த்து வெறுமே உட்கார்ந்திருப்பது, தரையைப் பார்த்துக் கொண்டிருப்பது, வெளியே வானத்தைப் பார்த்துக் கொண்டிருப்பது தொடர்ந்தது. பார்வை வேறெங்கேயோ இருக்குமே தவிர, உள்ளே ஆழ்ந்து தன் மனத்தை மனம் கவனித்துக் கொண்டிருந்தது.

திடீரென்று ஒரு நாள் உடம்பு முழுவதும் குலுக்கிப் போட்ட அந்த அனுபவம் ஏற்பட்டது.

35

ராதாகிருஷ்ணனின் உடம்பு குலுங்கியது. மனம் உருகியது. ஆனால் உயிர் போகவில்லை.

'செத்துப் போ செத்துப் போ' என்று யாரோ தன்னைச் சுவற்றில் அடிப்பது போல ஒரு வேகமும் வேதனையையும் உணர்ந்தார். என்ன வேண்டுமானாலும் செய்துகொள் என்பது போல தன்னைச் சுற்றி நடக்கின்ற வேகத்தை அனுமதித்தார்.

உடம்பு விட்டு வெளியே வந்தார். மிதந்தார்.

இதுதான் மரணமா?

ஆவலாக யோசித்தார்.

சகலமும் அவருக்குத் தெரிந்தன. அவர் மறுபடியும் கண் விழித்து உட்காரும்போது ஒன்றரை மணி நேர அனுபவம் அது என்பது புரிந்துபோயிற்று.

சிரிப்பு வந்தது. அழுகை வந்தது. கருணையோடு சங்கரய்யர் இருந்த திசை நோக்கிக் கை கூப்பினார்.

'ரொம்ப சந்தோஷம்' என்று சங்கரய்யர் நேரே இருப்பது போலப் பேசினார்.

அவர் பேசிய பதினைந்தாவது நிமிடம் சங்கரய்யர் உள்ளே நுழைந்தார். கதவு திறந்தார். தொலைவிலிருந்த படியே பார்த்தார்.

"பட்டாபிஷேகம் ஆயிடுத்தா ஆஹா ஆஹா என்ன உயர்ந்த களையா உன் முகத்துல ச்சு ச்சு ச்சு அற்புதம் நடந்திருக்குய்யா. ரொம்ப சந்தோஷம். இன்னொரு சங்கரய்யர் பிறந்துட்டார் வாழ்க வாழ்க."

தள்ளாடி எழுந்திருந்து ராதாகிருஷ்ணன் சங்கரய்யரை நோக்கி வணங்க, சங்கரய்யர் முன்னேறி, "எதுக்கு எது எதை நமஸ்காரம் பண்ணணும். தேவையில்லையே" என்று சொல்ல ஆமாம் என்று தலையசைத்தார்.

மறுபடியும் உட்கார்ந்து கொண்டார்.

"வெளிய சொல்ல வேண்டாம். காண்பிச்சுக்கவும் வேண்டாம். சாதாரணமா இருங்கோ. எல்லோரோட யும் பேசிண்டிருங்கோ. அதுதான் நல்லது. ஜனங்கள் கிட்ட வரட்டும். அப்படியே ஒதுங்கி எங்கேயாவது ஓரமா போயிடலாமேன்னு தோணும். கூடாது. இவாளுக்கு நடுவுல உட்கார்ந்துண்டு இவா துக்கத்தைத் தீர்க்கறதுதான் நம்ம வேலை. பூமியை உதறிட்டு எங்கயும் போக முடியாது. எந்தக் காட்டுக்குப் போனாலும் இந்தப் பூமிக்குண்டான காரியங்கள் பண்ணத்தான் வேணும். அதை இங்கேயே பண்ணிடறது. சரியா?" என்று உரக்கக் கேட்க ராதாகிருஷ்ணனும் அவரை உற்றுப் பார்த்தார்.

அதுதான் பண்ணணும்." என்று பதில் சொன்னார். இரண்டு நாள் அந்த பரவசத்தோடேயே கிடந்தார்.

பிறகு மெல்ல கீழிறங்கி காளிகாம்பாள் கோவிலுக்குப் போனார்.

கோவில் என்பது என்ன என்று புரிந்தது. ரெண்ட சக்தி பல்வேறு இடங்களில் பதுங்கியிருப்பது தெரிந்தது. அன்று மாலை ரேவதியும் சுபத்ராவும் வந்தார்கள்.

'இவ என்னமோ சொல்றா பாருங்கோ.'

பதறிய குரலில் ரேவதி அவரிடம் பேசினாள்.

'என்ன? என்ன வேணும் சுபத்ரா?'

அமைதியாக மகளைப் பார்த்து ராதாகிருஷ்ணன் கேட்டார்.

அவள் ஓர் உயிர் என்பதாக ஜீவன் என்பதாக ஒரு பெண் என்பதாகத் தெரிந்ததே தவிர, மகள் என்ற எண்ணம் நகர்ந்து போயிருந்தது. அது அவருக்கே ஆச்சரியமாக இருந்தது.

"பாருப்பா, இந்த அம்மாவோட பெரிய பிரச்னையா போயிடுத்து. கோவிந்தன் நம்ம வீட்டுக்கு வரக்கூடாதுன்னு சொல்றா. நான் கோவிந்தனைத் தாம்பரா கல்யாணம் பண்ணிக்கப் போறேன். இதை அம்மாகிட்ட சொல்லிட்டேன். எங்கிட்ட சொல்லாத அப்பாகிட்ட சொல்லு. அப்படிங்கறா. உன்கிட்டயும் சொல்லியாச்சுப்பா.'

"சரி நீ தீர்மானம் பண்ணிட்டா அதுக்கு நான் குறுக்க நிக்கலை."

"என்ன இப்படிப்பேசறேள்."

ரேவதி கத்தினாள்.

"ச்சு சங்கரய்யர் இதை எப்பவோ சொல்லிட்டா ரில்லை. இன்னைக்கு ஏன் கத்தறே அவர் என்ன சொன்னார். அவ சந்தோஷமா இருப்பா. அவ சந்தோஷமா இருக்கறதுதானே நம்முடைய விருப்பம். மாட்டேன்னு மறிச்சு வேற இடத்துல கொடுத்து அவ சந்தோஷமா இல்லைன்னாக்க நமக்குத்தானே கஷ்டம்.

மதம் மாறப் போறதில்லை. இந்துவாத்தான இருக்கப் போறா. எனக்கு அது நிம்மதி. கோவிந்தன் நல்லவனாகத் தானே தெரியறான்."

"தேங்க்யூப்பா... தேங்க்யூ" பெண் குதித்தது.

"அவர் நல்லவர் மட்டும் இல்லைப்பா. அவருக்கு என்னை மாதிரி ஒரு கெட்டிக்காரப் பொண்ணு தேவைப் படறது. அவரும் நானும் சேர்ந்து ஒரு இன்ஸ்டிட்யூட் ஆரம்பிக்கப் போறோம். என்ன இன்ஸ்டிட்யூட் தெரியுமா? கேட்டரிங் டெக்னாலஜி. ஏரோப்ளேன் லோர்ந்து ஃபைவ் ஸ்டார் ஹோட்டல் வரைக்கும் எப்படிப் பரிமாறது அப்படின்னு சொல்லித் தரப் போறோம். தாம்பரத்துக்கிட்டயே ஆரம்பிக்கப் போறோம். இந்த வருஷம் பாய்ஸ் மட்டும் சேர்க்கப் போறோம். இது சரியா வந்ததுன்னா கேர்ள்ஸையும் சேர்த்துக்கப் போறோம்."

"காசு வேணுமேம்மா."

"ஆமாம்ப்பா... அவர்கிட்ட அஞ்சு லட்ச ரூபா காசு இருக்கு. என்னை அஞ்சு லட்ச ரூபா கேட்கறாரு. கல்யாணத்துக்குப் பதிலா காசு கொடுத்துரப்பா. நாங்க ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக்கறோம்."

"அக்னி வளர்த்து, ஹோமம் பண்ணி தாலி கட்டமாட்டியாம்மா?"

"இல்லைப்பா. எனக்கு அதுல நம்பிக்கை இல்லை."

அவர் மகள் அவர் முகத்திற்கெதிரே அவர் கொண்ட கொள்கையை உடைத்துக் கீழே போட்டாள்.

ராதாகிருஷ்ணன் அமைதியாக இருந்தார்.

இது அவளுடைய வாதம். அவளுடைய வாழ்க்கை இதில் தினிப்பதற்கு என்ன இருக்கிறது, எதுவும் தெரியாத குழந்தை எல்லாம் தெரிந்ததுபோல் பேசுகிறது. இதில் மறுப்பதற்கு என்ன இருக்கிறது அவள் அனுபவம் அவளுக்கு. இறை நம்பிக்கை இந்தச் சடங்குகள் மீது நம்பிக்கையைத் தரட்டும். வாழ்க்கையின்

வெற்றியில் இம்மாதிரியான கணக்குகள் வராது. இறைவன் கருணையால்தான் வரும் என்பதை அவள் அனுபவித்துத் தெரிந்து கொள்ளட்டும்.

அவர் கண்மூடி உட்கார்ந்து கொண்டிருந்தார்.

"முதல்ல மூணு லட்சம் கொடுப்பா. அப்புறம் இரண்டு லட்சம் கொடு" என்ற கேட்க சரி என்று சொன்னார்.

"எப்பப்பா காசு தருவே?"

"உன் பேர்ல ஒரு பிக்னிக் டெபாசிட் போட்டிருக்கேன். அதுல இப்போ மூன்றரை லட்ச ரூபா வரும். அதை உங்கிட்ட கொடுத்துடறேன். கொஞ்சம் காசு உனக்குன்னு வைச்சுக்கோ. மிச்சத்தை அவன்கிட்ட கொடு. ஜாக்கிரதையா இரு" என்று சொல்ல ரேவதி உரத்த கரலில் ஏதோ பேச ஆரம்பித்தாள்.

"சாயந்திரம் அவனைக் கூட்டிண்டு வா"

கோவிந்தனை அழைத்து வரும்படி ராதாகிருஷ்ணன் கட்டளையிட மாலை கோவிந்தன் வந்தான்.

"இந்த வீட்லேதான் நீங்க இருந்திங்களா, இப்பவும் நீங்க இங்கதான் இருக்கிங்களா வேற யாரும் வரவேயில்லையா?"

அவன் வியப்போடு சுற்றிப் பார்த்துக் கேட்டான்.

"கொத்தவால்சாவடி ரொம்பக் கிட்டக்க இல்லை?"

வியந்தான்.

இந்தமாதிரி வீடுகளைப் பார்த்தேயிராதவன் போல மேலும் கீழும் வியந்து வியந்த பல விஷயங்களைக் கொண்டாடினான்.

"சுபத்ரா சொல்லிச்சிங்களா?" என்று கேட்டான்

அவர் தலையசைத்தார்.

திருமணம்பதிவு பெறும் நாளில் காசு தருவதாகச் சொன்னார்.

அவன் உற்சாகமாக கபத்ராவோட வெளியே போனான். ரேவதி அவர் எதிரே உட்கார்ந்து விகல்பி அழ, மிருதுவான குரலில் ராதாகிருஷ்ணன் சொன்னார்.

"பொண்ணை மறந்துடு. பிள்ளைக்கு வரன் பாரு அவனைக் கூட்டிண்டு போடான்னு சொல்லு. உன பேச்சைக் கேட்கற மருமகளாப் பார்த்துக்கோ. எங்க கூடயிட்டாலும் சந்தோஷமா போ. இடம் எதுவாக இருந்தா என்ன, தாம்பரமா இருந்தா என்ன ஜார்ஜ் டவுனா இருந்தா என்ன, இந்தோனேஷியாவிலிருந்தா என்ன ஜப்பானா இருந்தா என்ன? எல்லா இடத்துலயும் நீ ரேவதியாகத்தான் இருக்கப் போற அப்படியே இரு. பிள்ளைக்கு உன்னைப் பிடிக்கும் உனக்குப் பிள்ளையைப் பிடிக்கும். இது போதும் போயிட்டு வா"

"உங்களை யாருமே கவனிச்சுக்கறதுக்கு இல்லையே."

"வருவா நிறையப் பேர் வருவா. என்னை உள்ளங் கையில தாங்குவா. அது தவிர என்னைக் கவனிச்சுக்க வேண்டிய அவசியம் எனக்கும் இல்லை. உனக்கும் இல்லை. அது பகவானுடைய கவலை.

அவர் ரயில்வே லைனுக்குப் பக்கத்தில் இருந்த தன்னுடைய நிலத்தை முதலியாரை விட்டு விற்கச் சொன்னார். ஒரு சினிமா நடிகருக்கு ஒட்டு மொத்த மாய் ஒரே முறை ஒரே தவணையில் நிலம் கைமாறிற்று

மகளுக்கு செக்யூரிட்டி டெபாஸிட்டைக் கொடுத் தார். மகனுக்கு என்று ரேவதியிடம் காசு கொடுத்தார். மறுபடியும் மகள் வந்தால் கொடு என்று இன்னொரு பங்கும் ரகசியமாக வேறொரு வங்கியில் கணக்கு ஆரம்பித்தார். மீதி சில லட்சங்களை எடுத்துக் கொண்டு படப்பையின் உள்பக்கம்போய், மலைச் சரிவில் இருந்த ஒரு நிலம் வாங்கப் புறப்பட்டார்.

யாரோ ஒரு ஜோஸியர் வந்து இந்த நிலம் ஜாக்கிரதையாக வாங்க வேண்டும். கவிழ்ந்து விடும். ஒவ்வொரு நிலமும் ஒவ்வொரு விதம் என்று சொல்ல ஜோஸியரை அலட்சியப்படுத்தி நிலம் வாங்கிய ஆறாம் நாள் வீடு முகூர்த்தம் இருந்த ஞாயிற்றுக் கிழமை. விடிகாலை எல்லாம் இருட்டி மோசமான வெள்ளிப்பாதரசங்கள் வெறும் கொளையடிக்கப் பட்டிருந்தன. சகலமும் சோதனை எனது முடிந்தது

போலீஸ் போலீஸ் என்று முதலியார் பதற வேண்டாம் போலீஸில் புகார் கொடுக்க வேண்டாம். திருடியவன் தண்டிக்கப்படுவான் என்று சொன்னார்

ஜார்ஜ் டவுன் விடு கைமாறிற்று. அந்த பணம் காலில் விழுந்தான்

சங்கரன்னர் மகன், நீங்களும் இதே போல ஜோஸிக் கிறீர்கள். நீங்கள் உட்கார்ந்த வேளை இந்த வீடு கைமாறிற்று. உங்களுக்கு நான் என்ன செய்யவேண்டும் சொல்லுங்கள் என்ற சொல்ல அந்த மலைக்குக் கீழே இருக்கின்ற நிலத்தைச் சொல்லி இந்த நிலம் வேண்டுக் கொண்டார்.

எதற்காக வாங்குகிறீர்கள் என்று கேட்க "சங்கரய்யர் எப்படி டவுனில் உட்கார்ந்திருக்கிறாரோ அதே போல இந்த மலைக்குகே நானும் உட்கார்ந்து கொள்ள வேண்டும்" என்று விளக்க "ஆசிரமத்தான நான் கட்டித் தருகிறேன்" என்ற அந்த பணியா மிகப் பிரியமாகச் சொல்லாரபெரிய கூடம் ஒன்றும் கட்ட வேண்டுமென்றும் சொன்னார். வங்கியில் நிலத்தை அடமானம் வைக்க வங்கி அதிகாரிகள் வருவதாக இருந்த அன்று பலத்த மழை பெய்தது மாம்பலம் தண்ணீர் ஓடிற்று எங்கிருந்தோ ஓடை உடைத்துக் கொண்டு இந்தப் பகுதியில் நுழைந்து சகலத்தையும் அடித்துக் கொண்டு போயிற்று உள்ளே மண் நன்னியது ஆளா வந்தது அத்தனையும் வண்டல் மண் தொலைதூரமுள்ள மாட்டுக் கொட்டகையிலிருந்து

மாடுச் சாணம் அடித்து வந்து இங்கே பரவியிருப்பதை அவர் கால் வைத்து நடக்கும்போது தெரிந்து கொண்டார்.

நீர் வடிந்து இடம் முழுவதும் கறுப்புச் சேறாய் ஆக எல்லோரும் கவலை தெரிவித்தார்கள்.

பனியா வந்து பார்த்துவிடு பயந்தான். ஆசிரமக் கட்டடம் வேண்டாம். அந்த இடத்தில் ஒரு கருங்கல் சுவர் கட்டிக் கொடுத்துவிடு. சுவர் வழியாக சுவருக்கு மறுபக்கம் கால்வாய் வெட்டிவிடு. சுவரின் மீது தண்ணீர் மோதி கால்வாய் வழியாக வேறு பக்கம் போகட்டும். ஆனால் மறுபடியும் அப்படியொரு மழை பத்து வருடம் கழித்துத்தான் பெய்யும். எதற்கும் நீ சுவர் கட்டிவிடு என்று சொல்ல பனியா சுவர் எழுப்பினான்.

ராதாகிருஷ்ணன் வங்கியில் கடன் வாங்கி பெரிய கூடம் கட்டினார். ஒரு சமையல்அறையும் தான் படுப்பதற்கென்ற ஒரு அறையையும் ஏற்படுத்திக் கொண்டார். மகளுக்குத் திருமணம் நடந்தது. மகளுக்குத் திருமணம் நடந்த மறுமாதம் மகனுக்குத் திருமணம் நடந்தது. மகனுக்குத் திருமணம் நடந்த மறுமாதம் ரேவதி மகனோடு ஜப்பானுக்குப் பயணமானாள்.

"பையன் கெட்டிக்காரத்தனத்தைப் புரிஞ்சுண்டு நீ எங்களோடயே இருன்னு ஜப்பான்காரர் சொல்லிட்டாளாம். கூட சம்பளமாம்."

ரேவதி சொன்னது ஒரு காதில் விழுந்து இன்னொரு காது வழியாகப் போயிற்று.

"இந்த இடத்துக்கு என்ன பேர் வைக்கறது?" பனியா கேட்டார்.

"சங்கரம்."

ஒற்றை வார்த்தையில் பதில் சொன்னார்.

சற்று நேரம் கழித்து "இல்லை ஸ்ரீ சங்கரம் என்று எழுதுங்கள்." என்று சொன்னார்.

"வெளியே பெரிதாய் ஸ்ரீ சங்கரம் என்று கருங்கல் பதிக்கப்பட்டது.

"உள்ளதிலை ஒண்ணும் இருக்காதா?"

"இருக்காது. ஒரு சமாதிதான் இருக்கும்."

"யார் சமாதி?" கேள்வி வந்தது.

ராதாகிருஷ்ணன் மௌனமாக இருந்தார்.

ருக்மணி அன்று மாலை வந்தாள்.

"எங்கிட்ட ரகசியமா சங்கரய்யர் ஒரு சேதி சொல்லி அனுப்பியிருக்கார்" என்று மிருதுவாகப் பேசினார்.

என்ன என்று ராதாகிருஷ்ணன் கேட்டபோது "அவர் இங்கதான் வந்து உட்கார்ந்துக்கப் போறாராம். எட்டடிக்கு ஆறடி. பத்தடி ஆழம் தோண்டி சிமெண்டு போட்டு மூடறதுக்கு பாறாங்கல்லும் வாங்கி வைக்கச் சொல்லியிருக்கார். இது வேற யாருக்கும் தெரிய வேண்டாம்னு சொல்லியிருக்கார்."

ராதாகிருஷ்ணன் சரியென்று தலையசைத்தார். அவர் கட்டிய கூடத்திற்குத் தலைப்பக்கம் அவ்வித மாகவே ஒரு அமைப்பு செய்யப்பட்டது.

ராதாகிருஷ்ணன் தோட்ட வேலை செய்து கொண்டு ஜபம் செய்து கொண்டு ஆசிரமத்தைச் சுற்றி சுற்றி வந்தார்.

அந்த இடம் பூத்துக் குலுங்கியது. கடும் வெய்யில் நாளிலும் அந்த இடம் குளுமையாக இருந்தது.

இந்த இடம் இத்தனை ரம்மியமாக இருக்கறதுக்குக் காரணம், பூவா, புல்லா ராதாகிருஷ்ணனா, இந்த மலையா என்று யாரோ கேட்டார்கள்.

ராதாகிருஷ்ணன் திரும்பி அவரைப் பார்த்து. இதுக்கு காரணம் சங்கரய்யர் என்கிற மகான் என்று சொன்னார்.

கூடத்திற்கு அருகே பலகை போட்டு பலகை மீது மான் தோல் போட்டு சுவரில் சாய்ந்தபடி அந்தக் குடிலைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தார். உள்ளே மனம் உருகி வழிந்தது.

'சீடர்களை வேண புத்தி சிலா புத்தி, தைல புத்தி என்று பிரிப்பதுண்டு' சங்கரய்யர் பேச்சு ஞாபகம் வந்தது.

வேண என்றால் மூங்கில் கணுக்கணுவாக மூங்கிலை வெட்டிப் போட வேண்டும். ஒவ்வொரு விஷயமும் சில சீடருக்குச் சொல்லித்தர வேண்டும்.

பாறையை உடைக்க சுற்றி இரண்டங்குலம் ஓட்டைகள் போட்டு நடு ஓட்டையில் ஆணி வைத்து வேகமாய் அடிக்க ஓட்டைகள் வழியே பாறை பிளந்து இரண்டாகும், சில சீடருக்குச் சொல்லுதலே தேவையில்லை. பார்வை போதும். மனம் உருகினால்தான் தைல புத்தி.

சங்கரய்யர் வருகைக்காக ராதாகிருஷ்ணன் சகலமும் தெரிந்து காத்துக் கொண்டிருக்கிறார். அவர் தவம் தொடர்கிறது.